

"தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்"

**சுவடி : 2** **ஏடு : 10**

**நவம்பர்-திசம்பர் 2023**

**ஆசிரியர்**

வாலாசா வல்லவன்

**ஆசிரியர் குழு**

க. முகிலன்

சா. குப்பன்

தி. துரை சித்தார்த்தன்

முனைவர் முத்தமிழ்

சி. நடராசன்

ந. கருணாகரன்

இரா. திருநாவுக்கரசு

**இதழ் வடிவமைப்பு :**

**சன் நகலகம்**

சென்னை - 600 005.

பேசி : 98400 15179

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

ஆசிரியர் **'புதிய சிந்தனையாளன்'**

2/12, சி.என்.கே.சந்து,

சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொடர்புக்கு :

**86681 09047, 98947 28032**

**94885 34225**

*

**மின்னஞ்சல் :**

puthiyasinthanaiyalanmagazine@gmail.com

**இணையத்தில் படிக்க**

www.keetru.com


**ஆசிரியவுரை**

# சமூக நீதிக்கு வழி சமைக்கும் சாதிவாரிக் கணக்கெடுப்பு

இந்தியச் சமூகக் கட்டமைப்பு என்பது அடிப்படையில் நால்வருண சமூகக் கட்டமைப்பே ஆகும். வருணக் கலப்பின் மூலமாகவே இந்தியாவில் பல சாதிகள் உருவாகி உள்ளன. மனு ஸ்மிருதியில் இதற்கான சான்றுகள் உள்ளன. நால்வருண சாதி அமைப்புக்கு அப்பால் வருணமற்றவர்களாகப் பட்டியல் சாதியினரும் மலைவாழ் பழங்குடிகளும் பல சாதிகளாக உள்ளனர்.

இந்தியாவில் 1871 முதல் 1931 வரை சாதிவாரியாகப் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 1941இல் இரண்டாம் உலகப்போர் காரணமாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு சரிவர எடுக்கப்படவில்லை.

இந்தியா 1947இல் ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைப் பெற்று, 1950ஆம் ஆண்டு குடிஅரசாக அறிவிக்கப்பட்ட பின்பு, 1951இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. பார்ப்பனர்களின் சூழ்ச்சி காரணமாக சாதி வாரி கணக்கெடுப்பு நடத்துவதை தவிர்த்துவிட்டனர். இது அரசின் கொள்கை முடிவு என்று அறிவித்துவிட்டனர். பட்டியல் பழங்குடிகளுக்கு மட்டும் சாதி வாரியாகவும், மத அடிப்படையிலும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அரசு வேலைகளில் இடஒதுக்கீடு பெறுவதற்கு டாக்டர் அம்பேத்கர் அரசமைப்புச் சட்டம் கூறு 16(4)இல் வழிவகை செய்தார். 1924 முதல் சென்னை மாகாணத்தில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் வழங்கிய வகுப்புரிமை ஆணை செல்லாது என்று 1950இல் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் 1951இல் உயர்நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்த உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் கண்டித்து பெரியாரின் தலைமையில் திராவிடர் கழகமும் அறிஞர் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகமும் ஓராண்டுக் காலம் போராடியதன் விளைவாக அரசமைப்புச் சட்டத்தில் முதன்முதலாக திருத்தம் செய்யப்பட்டது. கல்வியில் இடஒதுக்கீடு வழங்கும் விதி 15(4) புதியதாகச் சேர்க்கப்பட்டது. அரசமைப்புச் சட்ட விதி 340இல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தனி ஒதுக்கீடு வழங்கிட ஆணையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டிருந்தது.

இந்திய அரசின் முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் காகா கலேல்கர் தலைமையில் 29.01.1953இல் அமைக்கப்பட்டது. அதனுடைய அறிக்கை 30.03.1955இல் அரசுக்கு அளிக்கப்பட்டது. அவ்வறிக்கையில் 1961இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது சாதி வாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் இன்னும் விரைவாக சாதி வாரி கணக்கெடுப்பை 1957லேயே தொடங்கி நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரையை நேரு அரசு 1961இல் நிராகரித்துவிட்டது.

1961 ஆகத்து திங்களில் ஒன்றிய அரசு மாநில அரசுகளே பிற்படுத்தப் பட்டோர் நல ஆணையங்களை அமைத்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை, தயாரித்துக் கொள்ளலாம் என்று அறிக்கை அனுப்பியது.

அதன் அடிப்படையில் தான் தமிழநாட்டு அரசின் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 1969இல் சட்டநாதன் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைத்தார். மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது ஒன்றிய அரசின் அதிகாரப் பட்டியலில் வரிசை எண்.69 இல் இடம்பெற்றுள்ளது. எனவே மாநில அரசுகளின் பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்கள் புள்ளி விவரங்களை சேகரிப்பதில் பல

இடர்ப்பாடுகளை எதிர் கொண்டன. 1931ஆம் ஆண்டின் சாதி வாரி கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே ஆய்வு செய்தனர்.

தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் கடும் உழைப்பின் விளைவாக இந்திய அரசால் அமைக்கப்பட்ட மண்டல் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூக, பொருளாதார அளவு கோல்களைக் கண்டறிவதில் பெரும் சிக்கல்களை எதிர் கொண்டது. இதைப் பற்றி பி.பி.மண்டல் 15.6.1979 மற்றும் 18.10.1979 ஆகிய நாட்களில் அமைச்சர்கள் எச்.எம். பட்டேல் மற்றும் ஒய்.பி. சாவானுக்கு கடிதம் எழுதியுள்ளார். உள்துறை அமைச்சர் கியானி ஜெயில் சிங் அவர்களுக்கும் 31.3.1980 இல் கடிதம் எழுதி 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பை சாதிவாரியாக எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். தோழர் வே.ஆனைமுத்து அவர்களும் இதை வலியுறுத்தி பலமுறை சிந்தனையாளன் ஏட்டில் எழுதியுள்ளார். பல்வேறு அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் இப்போது சாதி வாரி கணக்கெடுப்பை வலியுறுத்தி வருகின்றன.

14.08.1993இல் அமைக்கப்பட்டு இயங்கிவரும் ஒன்றிய அரசின் தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை சில பிரிவுகளாகப் பிரித்திட (Compartment) ஓய்வு பெற்ற நீதிபதி ரோகிணி தலைமையில் ஓர் ஆணையத்தை அமைத்தது. 2018இல் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என அந்த ஆணையம் ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்தது.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சாதிவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக செயல்படுத்தப்படவில்லை.

2011இல் இருந்த காங்கிரசு கூட்டணி அரசு (UPA-2) மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கை எடுக்காமல் நகர்ப்புற, ஊராக வளர்ச்சித்துறைச் சார்பில் சாதிய, பொருளாதார அளவுகோல் கண்டறியப்பட்டது. ஆனால் அது சரியான புள்ளி விவரம் அல்ல.

ஒன்றிய அரசின் தலைமை அமைச்சராக இருக்கும் நரேந்திர மோடியின் சாதி (Moth Ghanchi) என்பது உயர்சாதி பிரிவில் தான் இருந்தது. 25.7.1999இல் பா.ச.க.வின் வாஜ்பாயி தலைமை அமைச்சராக இருந்தபோது இவருடைய சாதி இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

தான் ஒரு பிற்படுத்தப்பட்டவர் என பெருமைப்பட்டுக் கொள்ளும் தலைமை அமைச்சர் நரேரந்திர மோடி பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்தது என்ன?

இவர் பல ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த குசராத்து மாநிலத்தில் உள்ளாட்சி தேர்தலில் போட்டி யிடுவதற்கு இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து 29.8.2023 அன்று தான் குசராத்து அரசு ஆணை பிறப்பித்தது. அந்த அளவிற்கு அரசியலில் அங்கு மேல் சாதியினர் ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது. தமிழ்நாடு இதையெல்லாம் எப்போதோ கடந்துவிட்டது.

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையின்படி இந்தியாவில் உள்ள வகுப்பினர் :

| | |
|---|---|
| இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 52.1% |
| பட்டியல் வகுப்பினர் | 18.6% |
| பட்டியல் பழங்குடியினர் | 8.6% |
| உயர் சாதியினர் | 20.7% |

பா.ச.க.வில் 303 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில்,

| | | |
|---|---|---|
| இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 85 பேர் | (28.5%) |
| பட்டியல் சாதியினர் | 77 பேர் | (25.4%) |
| உயர் சாதியினர் | 141 பேர் | (46.1%) |

ஏறத்தாழ 80% உள்ள இதரப் பிற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியல் வகுப்பு மக்களுக்கு 54% இடங்களும், 20% உள்ள உயர்சாதியினருக்கு 46% இடங்களும் பெற்றுள்ளனர்.

பா.ச.க.வின் தற்போதைய ஒன்றிய அமைச்சரவையில் மொத்தம் 79 பேர் உள்ளனர். அவர்களில்

| | | |
|---|---|---|
| இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26 பேர் | (34%) |
| பட்டியல் வகுப்பினர் & பழங்குடியினர் | 20 பேர் | (25%) |
| உயர் சாதியினர் | 33 பேர் | (41%) |

## உயர் அலுவலர்களில் பார்ப்பனர் மற்றும் உயர் சாதியினர் ஆதிக்கம்

28.3.2023 அன்று கேரள நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ் கேள்விக்கு அமைச்சர் ஜிஜேந்திர் எழுத்து மூலம் அளித்த பதிலில் உள்ள விவரம்: 2018 முதல் 2022 வரை 5 ஆண்டுகளில் நியமனம் செய்யப்பட்ட மொத்தம் 4365 பேர்களில் இ.ஆ.பா., இ.கா.பா. பணி உள்ளிட்ட உயர் அலுவலர்கள் வகுப்பு வாரியாக

| | | |
|---|---|---|
| இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 695 பேர் | 15.9% |
| பட்டியல் வகுப்பினர் | 334 பேர் | 7.65% |
| பட்டியல் பழங்குடியினர் | 166 பேர் | 3.8% |
| உயர் சாதியினர் | 3170 பேர் | 72.6% |

நாடாளுமன்ற முதன்மைச் செயலாளர்கள் 90 பேரில் 3 பேர் மட்டுமே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்பதை காங்கிரசு தலைவர் இராகுல் காந்தி வெளிப்படுத்தினார்.

## நீதித் துறையிலும் உயர் சாதியினர் ஆதிக்கம்

ஒன்றிய அரசின் சட்டத் துறை 9.1.2023 அன்று நாடாளுமன்ற நிலைக் குழுவிற்கு அளித்த அறிக்கையில் 2018 முதல் 2022 வரை 5 ஆண்டுகாலத்தில் நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 537 பேர். அதில்,

| | | |
|---|---|---|
| இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 57 பேர் | 11% |
| பட்டியல் வகுப்பினர் & பட்டியல் பழங்குடியினர் | 22 பேர் | 4.1% |
| மதச்சிறுபான்மையினர் | 14 பேர் | 2.6% |
| மற்றவர்கள் | 20 பேர் | 4% |
| உயர்சாதியினர் | 424 பேர் | 79% |

ஒன்றிய அரசின் பார்ப்பனர் மற்றும் உயர் சாதியினரின் ஆதிக்கத்தை மறைப்பதற்காகவே சாதி வாரி கணக்கெடுப்பை எடுப்பதற்கு பா.ச.க. அரசு மறுத்து வருகிறது.

பீகார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் அம்மாநிலத்தில் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்திட 6.6.2022 அன்று ஆணை யிட்டார். அதை எதிர்த்து உயர்சாதியினர் பாட்னா உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். 1.8.2022 அது தள்ளுபடி செய்யப்பட்டது.

6.8.2023 அன்றுடன் பீகார் அரசு கணக்கெடுப்பை நடத்தி முடித்துவிட்டது. அதை எதிர்த்தும் உயர்சாதியினர் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். 18.8.2023 அன்று உச்சநீதிமன்ற நீதிபதி சஞ்சீவ் கண்ணா பீகார் மாநில அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தத் தடையில்லை என்று தீர்ப்பளித்தார். பீகார் மாநில அரசின் கணக்கெடுப்பின்படி

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் & மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 63.14% |
| பட்டியல் வகுப்பினர் | 19.65% |
| பட்டியல் பழங்குடியினர் | 1.62% |
| முன்னேறிய சாதியினர் | 15.52% |

இதன் அடிப்படையில் இடஒதுக்கீட்டின் அளவை மாற்றியமைத்து 9.11.2023 அன்று பீகார் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அம்மாநில ஆளுநரும் ஒப்புதல் அளித்துவிட்டார்.

| | முன்பிருந்தது | தற்போது |
|---|---|---|
| இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 12% | 18% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 18% | 25% |
| பட்டியல் வகுப்பினர் | 16% | 20% |
| பட்டியல் பழங்குடியினர் | 1% | 2% |
| மொத்தம் | 47% | 65% |

ஏழை உயர்சாதியினருக்கு 10% சேர்த்து மொத்த இடஒதுக்கீட்டின் அளவு 75% ஆகவும், பொதுப் போட்டிக்கு 25% எனவும் அறிவிப்புச் செய்யப்பட்டது. காங்கிரசு கட்சியின் ஆட்சி நீண்டகாலமாக சாதிவாரி கணக்கெடுப்புக்கு எதிராக இருந்தது. அண்மைக் காலமாக அதன் போக்கு மாறி யுள்ளது. இராகுல் காந்தி போகுமிடமெல்லாம் சாதி வாரி கணக்கெடுப்பை வலியுறுத்திப் பேசி வருகிறார். இது வரவேற்கத்தக்கது.

சத்தீஸ்கர் மாநிலத் தேர்தல் அறிக்கையில் காங்கிரசு கட்சி ஆட்சிக்கு வந்தால் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்துவோம் என்று அறிவித்து உள்ளனர். இதனால் வேறு வழியின்றி உள்துறை அமைச்சர் அமித்ஷா “நாங்கள் சாதி வாரி கணக்கெடுப்புக்கு எதிரானவர்கள் அல்ல” என்று சத்தீஸ்கரில் பேசியுள்ளார். தலைமை அமைச்சர் நரேந்திர மோடி சாதிவாரி கணக்கெடுப்பு இந்துக்களைப் பிளவுபடுத்தும் செயல் என்று இதற்கு முன்பு பேசியுள்ளார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் குருநாதர் கோல்வால்கர் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு கொடுக்கக்கூடாது; பொருளாதார அடிப்படையில் தான் இடஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று எழுதியுள்ளார். எனவே பா.ச.க. சாதி வாரி கணக்கெடுப்புக்கு எதிராகவே இருக்கும்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ (I.N.D.I.A.) கூட்டணி வெற்றி பெற்றால் சாதி வாரி கணக்கெடுப்பை இந்தியா முழுவதிலும் நடத்தி இடஒதுக்கீட்டை சரியான முறையில் அமல்படுத்த வேண்டும்.

ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியும் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்துவதற்கு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

உச்சநீதிமன்றம் பீகார் மாநில அரசின் சாதிவாரி கணக்கெடுப்புக்கு தடைவிதிக்காத காரணத்தால் தமிழ்நாடு அரசும் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்தி விகிதாச்சார அடிப்படையில் இடஒதுக்கீடு அளிக்க முன்வர வேண்டும்.

இந்தியாவில் சாதிகள் ஏணியின் படிக்கட்டுகள் போல் மேல்-கீழ் என்கிற உயர்வு-தாழ்வு அடிப்படையில் கட்டமைக் கப்பட்டுள்ளன. சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பின்னும் இச்சாதியக் கட்டமைப்பு குலையாமல் நீடிக்கிறது. இந்தியாவில் ஒருவரின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் சாதியே முதன்மையான காரணியாக விளங்குகிறது.

அதனால்தான் மேலே குறிப்பிட்டுள்ளவாறு இந்திய அளவில் 20 விழுக்காட்டினராக உள்ள மேல் சாதியினரே ஆட்சியதி காரத்தில், அரசின் நிர்வாக உயர் பதவிகளில், உயர்நீதித் துறையில், உயர் கல்வியில் ஆதிக்கம் செலுத்துவோராக உள்ளனர். நாட்டின் செல்வத்தில் 80 விழுக்காடு இவர் களிடமே இருக்கிறது. சாதி என்பது இன்றளவும் சமூகத்தில் ஒரு மூலதனமாகவே செயல்படுகிறது. தொழில்களிலும் வணிகத்திலும் இவர்களே பெருமுதலாளிகளாக உள்ளனர். வருண அமைப்பின் கோட்பாட்டின்படி சூத்திர சாதியினரும், பட்டியல் சாதியினரும் பழங்குடியினரும் பார்ப்பன-பணியா-சத்திரிய மேல் சாதியினரையே சார்ந்து வாழும் நிலை நீடிக்கிறது. அண்மையில் வெளிவந்த ஒரு ஆய்வின்படி பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் குடும்பங்களின் பிள்ளைகளில் 80 விழுக்காட்டினர் அன்றாடக் கூலிகளாக அல்லல்பட்டுக் கொண்டுள்ளனர்.



எனவே, இத்தகைய ஏற்றத் தாழ்வு களை திட்டவட்டமான முறையில் கண்டறியவும் எல்லா பிரிவினருக்கும் எல்லா நிலையிலும் உரிய பங்கு கிடைப் பதை உறுதி செய்யும் வகையில் அரசுகள் திட்டம் தீட்டிச் செயல்படுத்தவும் சாதிவாரி மக்கள் தொகைக் கணக் கெடுப்பு உடனடி இன்றியமையா தேவை யாக உள்ளது.

5.12.2023 ❖ - வாலாசா வல்லவன்

# மாநிலக் கட்சிகளை ஒடுக்கும் ஒன்றிய அரசின் அதிகார அமைப்புகள்



பேராசிரியர் **மு.நாகநாதன்**


**கா**லனி ஆதிக்கத்தின் மறுவடிவமாகவே இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிகள் அமைந்துள்ளன என்பதைப் பற்றிப் பல அரசியல் சட்ட வல்லுநர்கள் ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வருகின்றனர்.

ஆர்கியா சென்குப்தா காலனி அரசமைப்புச் சட்டம் உருவான கதை (An Origin Story – The Colonial Constitution, 2023, Juggernaut Books) என்ற நூலை அண்மையில் எழுதியுள்ளார். இந்நூலில் உள்ள பல கருத்துகள் ஏற்கெனவே பல ஆய்வாளர்களால் குறிப்பிடப்பட்டாலும் ஆர்கியா சென்குப்தா புதிய பல தரவுகளை அளித்து இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் வலியுறுத்தப்பட்ட சுயச்சார்பு அரசியல் கொள்கையும் மக்களாட்சி மாண்பைப் போற்றும் விதிகளும் இந்திய அரசமைப்புச் சட்ட விதிகளில் காண்பது அரிதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் பிரித்தானிய அடக்குமுறை ஆட்சியின் மறுவடிவமாக இருப்பதுதான் காரணமாக உள்ளது என்றும் குறிப்பிடுகிறார்.

1833ஆம் ஆண்டு தாமஸ் மெக்காலே இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது ஐரோப்பிய நிறுவனங்களின் அமைப்பு முறைகளையே எதிர்காலத்தில் இந்தியர்கள் பின்பற்றுவார்கள். அது உண்மையாகும் போது அது ஆங்கில வரலாற்றின் பெருமைக்குரிய நிகழ்வாக அமையும். இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் ஆழ்ந்த அடிமைத்தனத்திலும் மூடநம்பிக்கையிலும் மூழ்கிய நிலையில் எல்லாக் குடிமகன்களுக்கும் உள்ள உரிமைகளைத் தருகிற வகையில் நமது ஆட்சி அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தையே நூலின் முதல் பகுதியில் முடிவுரையாக சென்குப்தா குறிப்பிட்டுள்ளார். ஏன் நூலாசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார்?

1935ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் வந்த போது ஜவகர்லால் நேரு இது ஒரு அடிமைச் சட்டம் என்று குறிப்பிட்டார். ஆனால் இந்த அடிமைச் சட்டத்தின்கீழ் 1937ஆம் ஆண்டு காங்கிரசு சென்னை மாகாணம் உட்படப் பல மாகாணங்களில் ஆட்சியமைத்தது. எதிர்த்த காங்கிரசு இதை ஏற்றுக்கொண்டது.

1950ஆம் ஆண்டு இந்திய அரசமைப்புச் சட்டம் 1935ஆம் அரசமைப்புச் சட்டத்தின் மறுபதிப்பாகவே உள்ளது என்பதைப் பல்வேறு தரவுகளோடு நூலாசிரியர் விளக்கியுள்ளார். வெள்ளையர் இந்திய மக்கள் மீது உருவாக்கிய ஆதிக்க மனப்பான்மை அப்படியே அரசமைப்புச் சட்டத்தில் இருப்பதால் ஒன்றிய அரசின் அதிகாரங்கள் எல்லை மீறிச் செல்கின்றன என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.





பிரித்தானிய ஆட்சியின் அடக்குமுறைச் சட்டங்கள் அப்படியே தொடர்கின்றன. அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் இருந்தாலும் பேச்சுரிமை, எழுத்துரிமை, மத உரிமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டாலும் பிரித்தானிய அடிமைச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட அடக்குமுறைச் சட்டங்கள் இன்றும் பின்பற்றப்பட்டுச் சமத்துவத்திற்கு எதிராகவும் சுதந்திர உரிமைகளுக்கு எதிராகவும் செயல்பட ஒன்றிய அரசுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது என்று குறிப்பிடுகிறார்.

ஏற்கெனவே அதிகாரக் குவிப்பின் உச்சநிலையில் உள்ள ஒன்றிய அரசு விடுதலைக்குப் பின்னர் பல சட்டத்திருத்தங்கள் வழியாக ஒரு புதிய சர்வாதிகார ஆட்சியாகவே மாறிவிட்டது. மாநில உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன. கூட்டாட்சி இயல் கொள்கை குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது.

குறிப்பாக ஒன்றிய அரசில் ஆட்சியில் இருக்கும் கட்சி வைத்ததுதான் சட்டம், நீதி, நிர்வாகம் என்ற நிலை மேலோங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாகத்தான் நிர்வாக ரீதியாக நடுநிலையாக இயங்கக்கூடிய வருமான வரி, புலனாய்வு, அமலாக்கத் துறைகள் ஒன்றிய அரசின் அடியாட்களாக மாற்றப்பட்டுவிட்டன. நிர்வாகத் துறையில் நடுநிலை என்பது முழுமையாகச் சாய்ந்துவிட்டது.

பாஜகவினர், பெரு முதலாளிகள், முதலாளித்துவ சாமியார்கள் செய்யும் எல்லாவித நாட்டு விரோத, சமூக விரோத, மக்கள் விரோத பொருளாதாரக் குற்றங்களை

மேற்கூறிய துறைகள் கண்டுகொள்வதே இல்லை. எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் ஆதாரங்களோடு ஆவணங்களோடு சில வழக்குகளை எடுத்துக்காட்டி னால் கண்துடைப்பு நடவடிக்கைகள் கானல் நீர் போன்று காட்சியளிக்கின்றன.




சான்றாக 1963ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிய அரசின் புலனாய்வுத் துறை (Central Bureaue of Investigation) இயங்கி வருகிறது. பொதுவாழ்வில் நெறியைப் பாதுகாக்கவும் பொருளாதாரம் நல்ல நிலையில் இயங்குவதற்கும் இத்துறை உறுதுணை யாக இயங்கும் என்று இவ்வமைப்பின் குறிக் கோளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நாட்டில் நடைபெறும் வங்கி மோசடி, பன்னாட்டுச் செலாவணி மோசடி, கள்ளக்கடத்தல், போதைப் பொருள் தடுப்பு நட வடிக்கைகள் உட்பட அனைத்து பொருளாதாரக் குற்றங் களையும் கண்டறிந்து விசாரணையை மேற்கொண்டு நீதித்துறையின் வழியாக உரியத் தண்டனைகளைப் பெற்றும் தரும் என்றும் இந்த அமைப்பு தொடங்கிய காலத்தில் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

இது எவ்வாறு சீரழிக்கப்பட்டது என்பதற்குச் சான்று பகர்கின்ற வகையில் 2007ஆம் ஆண்டு ஒன்றிய புலனாய்வுத் துறையின் இணை இயக்குநராகப் பணி யாற்றிய பி.ஆர்.லால், ‘ஒன்றியப் புலனாய்வுத் துறை யார் கையில் உள்ளது வெளிப்படையான உண்மை’ (Who Owns CBI- The Naked Truth, 2007) என்ற நூலில் பல அரிய தகவல்களை அளித்துள்ளார். புலனாய்வுத் துறை ஊழலின் சக்தி வாய்ந்த தலைமைப் பீடத்தை உடைப்பதில் தோல்வியைத் தழுவியுள்ளது. காரணம் அதிகாரத்தில் உள்ள உயர் பிரிவினரைப் பாதுகாப்பது தான் புலனாய்வுத் துறையின் எண்ண ஓட்டமாக உள்ளது. இலக்கற்றதாகவும் உரிய உதவியைப் பெற முடியாததாலும் முழுமையாகச் செயல்பட முடியாத தன்மையாலும் புலனாய்வு முகமைகள் சுயநல சக்திகள் மீது வழக்குப் போட முடியாமல் தடுமாறுகின்றன.

புலனாய்வுத் துறையின் உண்மைகள் சில மனிதர்களை அடையாளம் காட்டினாலும் அவர்களை விசாரிக்கக் கூடாது. புலனாய்வு விசராணை நீர்த்துப் போகச் செய்ய வேண்டும் அல்லது திசையை மாற்ற வேண்டும் அல்லது நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். காலப்போக்கில் வழக்கினைச் சாகடித்துவிட வேண்டும் என்பதுதான் புலனாய்வுத் துறையில் எழுதப்படாத சட்டமாக உள்ளது (The unwritten rule was that persons were not to be touched and if the line of investigation reached them, the investigation should be diluted, diverted or dropped and scuttled in due course, p.18)” என்று நூலாசிரியர் லால் குறிப்பிட்டுள்ளார்.

2007இல் குறிப்பிட்ட இந்தக் கருத்துக்கேற்பவே புலனாய்வுத் துறை மட்டுமல்லாமல் வருமான வரித் துறையும் அமலாக்கப் பிரிவும் கடந்த பத்தாண்டுகளாக ஒன்றிய பாஜக ஆட்சியில் செயல்பட்டு வருகின்றன என்பதற்கு இக்கால நிகழ்வுகள் சான்று பகர்கின்றன.

2008ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்தின் மாலேகன் குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்தனர். 82 பேர் படுகாயம் அமைந்தனர். இந்தக் குண்டு வெடிப்பில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் வெளி வந்துள்ள பெண் சாமியார் பிரக்யா சிங் தாகூரை பாஜக நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடச் செய்து அவரை நாடாளுமன்ற உறுப்பினராக்கியது. மேலும் கோட்சே பிறந்த நாளைக் கொண்டாடி, காந்தியைக் கொன்ற குற்றவாளி கோட்சே நாட்டுப் பற்றாளன் என்று தொடர்ந்து அந்தப் பெண் சாமியார் கூறி வருகிறார். இந்தச் செயலைக் கண்டிப்பதற்கு பிரதமர், உள்துறை அமைச்சர் யாரும் முன்வரவில்லை. மதவெறி அரசியல் தூண்டப்படுவதற்கு இதைவிட வேறு என்ன எடுத்துக்காட்டைக் காட்ட முடியும்.

2023 செப்டம்பரில் தேசிய புலனாய்வு முகமை நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் போது இந்தப் பெண் சாமியார் இரண்டு மணி நேரம் காலம் தாழ்த்தி வந்தார். கால் வலியால் நடக்க முடியவில்லை என்று காரணம் கூறினார். நீதித்துறை கால்வலியோடு காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது (இந்து ஆங்கில நாளிதழ் 25 செப்டம்பர் 2023).

மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் நீதிமன்றத் திற்குத் தாமதமாக வந்தால் கடும் கண்டனம் தெரிவிக்கும் நீதிமன்றம் இந்தப் பெண் சாமியார் காலதாமதத்தைப் பற்றிக் கண்டுகொள்ளவே இல்லை. புலனாய்வுத் துறை முதல் நீதிமன்றம் வரை பாஜக ஆட்சியில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதற்கு இது ஒரு சிறிய சான்றாகும்.

பாஜகவின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இந்திய மல்யுத்த சங்கத்தின் தலைவருமான பிரிஜ் புசன் சிங் என்பவருக்கு எதிராக மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் குற்றச்சாட்டுகளை ஆதாரத்தோடு அளித்துப் பல

மாதங்கள் புதுதில்லியில் போராட்டக்களம் அமைத்துப் போராடினர். பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு இந்தியா சார்பில் வெற்றி பெற்ற பல புகழ் மிக்க மல்யுத்த வீரர்களும் விளையாட்டுத்துறையில் ஈடுபடும் வீரர்களும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தனர். இருப்பினும் பிரிஜ் புசன் மீது கடுமையான பிரிவுகளில் கீழ் வழக்குத் தொடரவில்லை. இன்று வரை அவர் மீது எந்த ஒரு கைது நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

மகாராஷ்டிர மாநிலத்தில் தேசியவாத காங்கிரசுத் தலைவர்களில் ஒருவரான அஜித் பவார் ரூபாய் எழுபதாயிரம் கோடி அளவிற்கு நீர்ப்பாசன திட்டங்களில் ஊழல் செய்தார் என்று பிரதமர் நரேந்திர மோடி பல மாதங்களுக்கு முன்பு மேடைக்கு மேடை முழங்கினார். தேசியவாதக் கட்சி ஊழல் கட்சி என்று குற்றம் சாட்டினார். ஆனால் அஜித் பவார் பெரும்பான்மையை இழந்த பாஜக அரசிற்கு ஆதரவாகச் செயல்பட்டவுடன் அவரைத் துணை முதல் அமைச்சராக ஆக்கி ஊழல் வழக்குகளில் இருந்து தப்பிக்க வைத்தார்.

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த முகுல் ராய் திரிணாமுல் காங்கிரசுக் கட்சியின் முன்னணி தலைவர். இதற்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஒன்றிய அரசின் அமைச்சராகவும் பணியாற்றியவர். சாரதா நிதி அமைப்பு தனது உறுப்பினர்களிடமிருந்து 30 கோடி ரூபாய் அளவு நிதியைப் பெற்றுக்கொண்டு மோசடி செய்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. இந்த மோச டியில் முகுல் ராய் ஈடுபட்டார் என்று ஒன்றிய அரசின் வருமான வரி, அமலாக்கத் துறைகள் வழக்குப் பதிவு செய்தன. உடனடியாகக் கட்சி மாறி பாஜகவில் சேர்ந்த வுடன் வழக்குகள் கிடப்பில் போடப்பட்டன.

முகுல் ராய் பாஜக சார்பில் 2021 மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே ஆண்டில் மீண்டும் திருணாமுல் காங்கிரசுக் கட்சியில் இணைந்தார். பாஜக இவரை மிரட்டியதால்தான் முகுல் ராய் உடல்நலம் பாதிக்கப்பட்டார் என்று மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி மேடையிலேயே குறிப்பிட்டார்.

மற்றொரு அரசியல் நிகழ்வில் திருணாமுல் காங்கிரசுக் கட்சியின் அமைச்சராக இருந்த சுவேந்து அதிகாரி 2020இல் ஆசிரியர் தேர்வு வாரிய முறை கேட்டில் ஈடுபட்டார் என்று வருமான வரித்துறையும் அமலாக்கத் துறையும் இணைந்து வழக்குகள் பதிவு செய்தன. கைது செய்யப்பட்டார். அமைச்சர் பொறுப்பில் இருந்து விலக்கப்பட்டார். பின்பு பாஜகவில் இணைந்தார். 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நந்திகிராம் தேர்தலில் மம்தா பானர்ஜிக்கு எதிராக பாஜக சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் மீது இருந்து வழக்குகள் தற்போது என்ன ஆயிற்று என்பது ஒன்றிய அரசுக்கும் பிரதமருக்கும் மட்டுமே தெரிந்த பெரும் இரகசியமாகும். ஊழல் நாயகன் என்று பாஜகவினரால் வருணிக்கப்பட்ட சுவேந்து அதிகாரிதான் மேற்கு வங்க சட்டமன்றத்தின் பாஜக சார்பில் எதிர்க்கட்சித் தலைவரானார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் 2019ஆம் ஆண்டு காங்கிரசு, தேசியவாத காங்கிரசு உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவோடு சிவசேனாவின் தலைவரான உத்தவ் தாக்கரே முதல்வராகப் பொறுப்பேற்றார். மூன்றாண்டுகள் நிறைவடையும் நேரத்தில் ஏக்நாத் ஷிண்டே துணை யுடன் சிவசேனா கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களை பாஜக விலைக்கு வாங்கியது. விலை மதிப்பு பல நூறுகோடிகள் என்று ஊடகங்கள் கணித்தன.

பிளவுபட்ட சிவசேனா சட்டமன்ற உறுப்பினர்களின் துணையோடு ஏக்நாத் ஷிண்டே பாஜக ஆதரவுடன் முதல்வரானார். நாக்பூர் நகரில் அமைந்துள்ள நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தில் 110 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் செய்துள்ளார் என்று பாஜக சட்டமன்ற உறுப்பி னர்கள் இன்று குற்றம் சாட்டியுள்ளனர். இருப்பினும் இதைப் பற்றி ஒன்றிய பாஜக அரசு கண்டுகொள்ள வில்லை.

பாஜக ஒன்றிய அரசில் பொறுப்பேற்ற பிறகு கடந்த 9 ஆண்டுகளாக காங்கிரசு சார்பாகவும் மாநிலக் கட்சிகளின் சார்பாகவும் வெற்றி பெற்றுப் பல அரசுகள் அமைந்த பிறகு 6 மாநிலங்களைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் விலை போயினர். தேர்தலில் தோல்வி அடைந்த பாஜக, ஆட்சிகளைக் கைப்பற்றியது. கட்சி மாறும் தடைச் சட்டங்கள் கண்மூடிக்கொண்டன. நீதிமன்றங்கள் மௌனம் காத்தன.

சான்றாக. மணிப்பூரில் நடைபெற்ற இன அழிப்பு உலக அளவில் விவாதிக்கப்பட்ட நிலையிலும் மணிப்பூர் கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்ட பிறகும் பாஜக முதலமைச்சர் தொடர்ந்து பதவியில் நீடிக்கிறார். ஆனால் மற்ற மாநிலங்களில் சிறுசிறு அற்ப காரணங்களைக் குறிப்பிட்டு எதிர்க்கட்சிகள் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு குலைந்துவிட்டன என்று ஓங்காரக் குரல்கள் சங்கிகளால் எழுப்பப்படுகின்றன.


கோவா, மத்தியப் பிரதேசம், அசாம், கர்நாடகம், அருணாசலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பணம் கொடுத்துச் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் அரசியல் வணிகம் வெளிப்படையாக பாஜக வால் நடத்தப்பட்டது. மாநிலம் விட்டு மாநிலம் சென்று பல சொகுசு விடுதிகளில் கட்சி மாறிய சட்டமன்ற உறுப்பி னர்கள் ஆடிய ஆட்டங்களை ஊடகங்கள் படங்களுடன் வெளியிட்ட பிறகும் ஒன்றிய அரசின் அடியாட்களாகச் செயல்படும் எந்தத் துறையும் விசாரணை செய்யக்கூட முன்வரவில்லை.

நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட தகவல்களின்படி வருமான வரியை உரிய முறையில் செலுத்தாமலும் வருமான சட்டப்பிரிவுகளை மீறியது தொடர்பாகவும் வருமான வரி தீர்ப்பாயங்களில் 92,338 வழக்குகள் நிலுவையில் உள்ளன. உச்ச நீதிமன்றத்தில் 6,357 வழக்குகளும் உயர் நீதிமன்றங்களில் 38,481 வழக்குகளும் டிசம்பர் 2020ஆண்டு வரை நிலுவையில் இருந்தன. இதன் காரணமாக ரூபாய் 5 இலட்சம் கோடி வருமான வரி ஒன்றிய அரசுக்குக் கிடைக்காத நிலையில் உள்ளது.

அமலாக்கப் பிரிவு ஒன்றிய அரசின் துறையாக 1956இல் உருவாக்கப்பட்டது. பிரதமர் நேரு, சாஸ்திரி தொடங்கி வாஜ்பாய் காலம் வரை வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாகப் பணப்பரிமாற்றம் செய்வதைப் புலனாய்வு செய்தது. அந்நியச் செலாவணி மோசடிகளைக் கண்டறிந்து வழக்குகளைத் தொடுத்தது. அந்நியச் செலாவணி பரிமாற்ற மேலாண்மைச் சட்டம் (Foreign Exchange Management Act, 1999 (FEMA)), முறை கேடாகப் பணப் பரிமாற்றத்தடுப்புச் சட்டம் (Prevention of Money Laundering Act, 2002 (PMLA)), பொருளா தாரக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கும் சட்டம் Fugitive Economic Offenders Act, 2018 (FEOA) போன்ற பல சட்டங்கள் வழியாக ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கி வருகின்றன.

தவறான முறையில் பணப்பரிமாற்றம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக இச்சட்டங்களை அமலாக்கத் துறையின் ஆளுகையின் கீழ் ஒன்றிய அரசு கொண்டு வந்தது. குறிப்பாக உலகமயமாக்கல் முறையை இந்தியா பின்பற்றிய பிறகு வெளிநாடுகளுக்குப் பணம் எடுத்துச் செல்லும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இதனைப் பயன்படுத்திப் பல பெரு முதலாளிகளும் பெரு வணிகர்களும் பல அரசியல் தலைவர்களும் பல இலட்சம் கோடி ரூபாயை வெளிநாடுகளில் மறைமுகமாக முதலீடு செய்யத் தொடங்கினர். இதற்கு வெளிநாடுகளில் உள்ள சட்டங்கள் நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஆதரவை அளிக்கும் நிலையில் உள்ளன. சான்றாக சுவிட்சர்லாந்து ஒரு சிறிய நாடாக இருப்பினும் கணக்கில் காட்டாத கள்ளப்பணத்தை வங்கிகளில் சேமிக்கும் முறையைச் சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இன்றளவும் உச்ச நீதிமன்றம் பலமுறை வலியுறுத்திக் கேட்டுக்கொண்ட பிறகும் இந்தக் கள்ளப்பணக் கணக்கை வைத்திருப்பவர்களின் பெயர் பட்டியல்களை சுவிட்சர் லாந்து போன்ற நாடுகளில் இருந்து பெற்ற பிறகும் வெளிப்படையாக ஒன்றிய அரசு வெளியிடவில்லை. உச்ச நீதிமன்றத்திற்கு மட்டும் இந்தப் பட்டியலைக் கமுக்கமாக ஒன்றிய அரசு அளித்துள்ளது.

ஒன்றிய அரசு சட்டங்கள் வழியாக இந்த அமைப்பு களை வைத்துக் கொண்டு பாஜகவிற்கு நிதியளிப்பவர் களுக்குச் சலுகைகளை அளித்து வருகிறது. அரசியலில்




வேண்டாதவர்களைப் பழிவாங்கும் பயமுறுத்தும் முதன்மைக் கருவிகளாகப் பயன்படுத்துகிறது.

முறைகேடாகப் பண பரிமாற்றத்தடுப்புச் சட்டத்தின் (Prevention of Money Laundering Act, 2002 (PMLA)) வழியாக 2004 முதல் 2014 வரை 112 சோதனைகள் அமலாக்கத் துறையால் மேற்கொள்ளப்பட்டன. 104 வழக்குகள் போடப்பட்டு 5,346 கோடி ரூபாய் அளவிற்குச் சொத்துகள் முடக்கப்பட்டன. ஆனால் இதுவரை ஒருவர் கூட தண்டிக்கப்படவில்லை.

2014-2022 வரை 3,010 சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன. இவை காங்கிரசுக் கூட்டணி தலைமையில் நடைபெற்ற ஆட்சிக்காலத்தைக் காட்டிலும் 27 மடங்கு அதிகமாகும். 888 வழக்குகள் பதிவு செய்யப் பட்டன. 99,356 கோடி ரூபாய் சொத்துகள் முடக்கப்பட்டன. 23 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. 869 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டில் அதானி மீது ஹிண்டன்பர்க் அறிக்கை பல இலட்சம் கோடி ரூபாய் மோசடிகளை அம்பலப்படுத்தியது. இதுவரை அமலாக்கத்துறை இந்த மோசடிகள் பற்றி ஆய்வு செய்யக்கூட முன்வரவில்லை. மீண்டும் பைனான்சியல் டைம்ஸ் (Financial Times) ஏடு அதானி குழுமம் செய்த பல ஆயிரம் கோடி நிலக்கரி ஊழல் பற்றி ஆதாரங்களோடு வெளியிட்டது. இந்த ஊழலின் காரணமாக மின்கட்டணம் செலுத்தும் சிறு, குறு / நடுத்தரத் தொழில் முனைவோர்களும் நடுத்தரப் பிரிவினருமே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஹிண்டன்பர்க் அறிக்கையின் மீது இராகுல் காந்தி அதானி குழுமத்திற்கும் பிரதமருக்கும் என்ன தொடர்பு என்ற கேள்வியை எழுப்பியவுடன் அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கம் செய்தது பெரும் அதிர்வலைகளை இந்தியாவில் ஏற்படுத்தியது. இந்த அதிர்வலைகள் வழியாக இரு உண்மைகள் வெளிப் பட்டன. ஒன்று மோடி ஜனநாயகரீதியாக நாடாளுமன்றத்

தைச் சந்தித்து ஊழல் குற்றச்சாட்டு மீது பதிலளிக்கப் பயப்படுகிறார். மற்றொன்று அதானி குழும ஊழலை மறைக்க முயல்கிறார் என்பதே ஆகும்.

இதைப் பற்றி இன்றுவரை ஒன்றிய அரசின் புலனாய்வு அமைப்பும் வருமான வரித் துறையும் அமலாக்கப் பிரிவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை. காரணம் இவர்கள் மோடியின் நண்பர்கள். குறிப்பாக 2014க்குப் பிறகு ஒன்றிய அரசில் பொறுப்பேற்ற பாஜக அரசு எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கு வதற்காகவே ஒன்றிய அரசின் ஊழல் தடுப்பு அமைப்புகள் இயக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தி லேயே வைக்கப்பட்டது.

அதே நேரத்தில் எதிர்க்கட்சிகள் ஆளும் தமிழ்நாடு, மேற்கு வங்கம், இராஜஸ்தான், புதுதில்லி, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் உள்ள அமைச்சர்கள் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் பல வழக்குகளை அமலாக்கத் துறை பதிவு செய்து கடும் நடவடிக்கைகளைப் புயல் வேகத்தில் மேற்கொள்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் பல மாதங்கள் சிறையில் இருந்தும் பிணை அளிப்பதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்று வழக்காடி இவர்களை விடுதலை செய்யக்கூடாது என்று ஒன்றிய அரசின் அமலாக்கத் துறை வாதாடுகிறது. பாஜக சார்பு அரசியல் நிலையில்தான் நாங்கள் இயங்குகிறோம் என்ற உண்மையையும் வெளிப்படுத்துகிறது.

அமலாக்கத் துறையின் முன்னாள் இயக்குநர் சஞ்சய் மிஸ்ராவிற்கு மூன்று முறை பதவி நீட்டிப்பை ஒன்றிய பாஜக அரசு வழங்கியது. மூன்றாவது முறை வழங்கும் போது பதவி நீட்டிப்புக் காலம் இரண்டாண்டுகள் என்பதை மூன்று ஆண்டுகளாக மாற்றியது. ஒன்றிய அரசு இதற்கென்று ஒரு சட்டத்திருத்தத்தினைக் கொண்டு வந்தது. இதை எதிர்த்துச் சிலர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போது இந்தச் சட்டத்திருத்தம் செல்லாது என்று நீதிபதிகள் கூறினர்.

2023 செப்டம்பர் இறுதி வரையாவது இயக்கு நருக்குப் பதவி நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசின் தலைமை வழக்கறிஞர் வாதிட்டார். உச்ச நீதிமன்றம் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. இந்தத் தீர்ப்பின்படி மிஸ்ரா மூன்று முறை பதவி நீடிப்பு பெற்று செப்டம்பர் மாதம் ஓய்வு பெற்றார்.

ஒரு தனிநபருக்காக மூன்று முறை பதவி நீட்டிப்பு வழங்கும் ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசின் தேர்வா ணையக் குழுவின் தலைவர் பதவிக்கு மாநில அரசு சட்டப்படி ஒருவரைப் பரிந்துரை செய்த போது அவருக்கு ஓராண்டுதான் இருக்கிறது என்று கூறி இரு முறை ஆளுநர் கோப்பினைத் திருப்பி அனுப்பினார்.

இந்தியாவில் உள்ள சட்டங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுமா? அல்லது ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பின் காரணமாக ஜனநாயக நெறிகளும் நிர்வாக விதிகளும் மிதிக்கப்படுகின்றனவா? என்ற கேள்விகள் எழுகின்றன.

180 உலகநாடுகளில் ஊழல் வரிசைப் பட்டியலில் இந்தியா 85ஆம் இடத்தில் உள்ளதாக 2022ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் பின்பற்றப்படும் மோசமான அரசியல் சூழ்நிலைகள் இந்த அறிக்கைகளில் சுட்டப்படுவதில்லை. ஆளுங்கட்சி ஊழல் செய்தால் அது ஊழலல்ல. எதிர்க்கட்சிகள் செய்தால் மாபெரும் ஊழல். இதுதான் அறிவிக்கப்படாத ஒன்றிய அரசின் சட்டம். இந்தச் சட்டத்தின்படி தான் எல்லாத் துறைகளும் இயங்கி வருகின்றன.

ஊழலை ஒழிப்பதில் கட்டுப்படுத்துவதில் மற்ற நாடுகள், இந்தியா போன்று அரசியல் சார்போடு இயங்கு வதில்லை. அந்நாடுகளின் நீதிமன்றங்களும் இத்தகைய செயல்களைக் கண்டும் காணாமல் இருப்பதில்லை.

ஊழல் இந்தியாவில் இருந்து துரத்தப்பட வேண்டும். ஊழல் பெருமளவிற்கு ஏழைகளைத்தான் துயரத்திற்கு உள்ளாக்குகிறது (Corruption is paid by the poor) என்று போப் பிரான்சிஸ் ஒரு முறை குறிப்பிட்டார். இக்கருத்து இந்தியாவிற்கு மிகப் பொருத்தமாக அமைகிறது.


ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பொதுச் சபையில் 2018ஆம் ஆண்டு ஊழலைத் தடுப்பதற்கும் தடை செய்வதற்கும் உலகளாவிய ஒருங்கிணைந்த ஒரு அணுகுமுறை தேவை என்று வலியுறுத்தியது. மீண்டும் 2021இல் நடைபெற்ற சிறப்பு பொதுச் சபைக் கூட்டத்தில் ஊழலைத் தடுப்பதற்கு உலகளவிலான ஒரு கூட்டுறவு அமைப்பை வலிமைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது (Our common commitment to effectively addressing challenges and implementing measures to prevent and combat corruption and strengthen international cooperation).

இந்தியாவில் ஒன்றிய அரசு அளவில் லோக்பால் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறையில் இருந்தாலும் தற்போது அதற்கு உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி தலைவராகவும் இரண்டு இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் உறுப்பினர்களாக இருந்தாலும் சிறந்த முறையில் இயங்கும் தன்மையில் அமைய வில்லை.

மேற்கூறிய ஒன்றிய அரசின் தவறான எதிர்மறை நடவடிக்கைகளில் இருந்து இதைப் புரிந்து கொள்ள முடியும். ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு லோக்ஆயுக்தா என்ற அமைப்பு பல மாநிலங்களில் பெயரளவில் இயங்கி வருகின்றன. ஒன்றிய அரசின் பழிவாங்கல் நடவடிக்கை களைத் தடுப்பதற்கும் அரசு நிர்வாகம் நேர்மையாகவும் நடுநிலைமையோடு இயங்குவதற்கும் லோக்பால், லோக் ஆயுக்தா அமைப்புகள் சிறப்பாகச் செயல்படுவதற்கு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ❖

# ஹமாஸ் – இசுரேல் போர்

## சுதந்தர பாலஸ்தீனமே தீர்வு



க. முகிலன்

இரண்டாம் உலகப் போர் (1939-1945) முடிவுற்றது. இனி உலகில் போரே நடக்காது என்று பலராலும் நம்பப்பட்டது. ஆனால் சிறிதும் பெரிதுமாகப் போர்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. இப்போர்களால் இரண்டாம் உலகப் போரில் இறந்தவர்களைவிட அதிக அளவில் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதைவிட பன்மடங்கு ஆயுதங்களும் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவேதான் லெனின், ''போர்கள் முதலாளித்துவத்தின் மூச்சுக்காற்று'' என்று சொன்னார்.

இரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகப் போர் நடந்து கொண்டிருக்கிறது. இப்போரினால் உலக அளவில் வணிகமும் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த அக்டோபர் 7 முதல் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காசாவை ஆட்சி செய்யும் ஹமாசுக்கும் இசுரேலுக்கும் இடையில் போர் நடந்து கொண்டிருக்கிறது. இது உலகின் முதன்மையான பேசுபொருளாகியுள்ளது.

பாலஸ்தீனியர்களுக்கும் இசுரேல் நாட்டுக்கும் இடையே கடந்த 75 ஆண்டுகளாக மோதல்கள்-போர்கள் நடந்து வருகின்றன. பாலஸ்தீனியர்கள் தாங்கள் இழந்த தாயக நிலப்பரப்பையும் உரிமைகளையும் விடுதலை பெற்றதான நாட்டையும் மீட்கப் போரிட்டு வருகின்றனர். ஆனால் இசுரேல், அமெரிக்கா மற்றும் மேற்கு அய்ரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளின் துணையுடன் பாலஸ்தீன நிலப் பரப்பை முற்றிலுமாகக் கைப்பற்றி பாலஸ்தீனியர்களை அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த வரலாற்றுப் பின்னணியைப் புரிந்து கொண்டால்தான் கடந்த அக்டோபர் 7 முதல் ஹமாசு-இசுரேல் இடையே நடைபெற்றுவரும் தாக்குதல்களைப் புரிந்துகொள்ள முடியும்.

2023 அக்டோபர் 7 அன்று காலை 6.30 மணியிலிருந்து இருபது மணித்துளிகளுக்குள் காசா பகுதியிலிருந்து ஹமாசு போராளிகள் ஒரே சமயத்தில் 6,000 இராக்கெட்டுகளை இசுரேல் மீது செலுத்தினர். அதே சமயத்தில் இசுரேல் காசாவுக்கு இடையே இருபது அடி உயரத்திற்குக் கட்டியெழுப்பியுள்ள கான்கிரீட் தடுப்புச் சுவரை புல்டோசர்களைக் கொண்டு தகர்த்து இசுரேலுக்குள் நுழைந்து தாக்கினர். மேலும் பாரா கிளைடர்களைக் கொண்டு தடுப்புச் சுவருக்கு உயரே பறந்து சென்று தாக்கினர்.



உலகிலேயே மிகச்சிறந்த உளவுப் பிரிவையும், உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தற்காப்புக் கருவிகளையும் கொண்டிருப்பதாக இசுரேல் பெருமிதம் கொண்டிருந்தது. இசுரேலிடம் உள்ள 'அயன் ட்ரோம்' (Aine Drome) என்பது ஒரு கொசு பறந்தால்கூட அதன் இராணுவத் தொழில்நுட்பக் கண்காணிப்பிலிருந்து தப்ப முடியாது என்று கூறப்பட்டது. ஆனால் அரைமணி நேரத்திற்குள் ஆறாயிரம் இராக்கெட்டுகளை வீசி, புக முடியாத கோட்டையாகக் கருதப்பட்ட இசுரேல் நிலப் பகுதிக்குள் சென்று, 1,200 பேரைக் கொன்றதுடன் 240 பேரைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வந்தனர் ஹமாசு போராளிகள். இதனால் இசுரேலின் இறுமாப்பு தவிடு பொடியானது. கூனிக்குறுகி அவமானத்தால் துடித்தது. இத்தாக்குதலை மிகத் துல்லியமாகத் திட்டமிட்டு ஹமாசு இயக்கத்தினர் நடத்தினர்.

2022ஆம் ஆண்டு ஆறாவது தடவையாகப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெஞ்சமின் நெதன்யாகு உடனடியாக அமைச்சரவையைக் கூட்டி, ஹமாசு மீது போர்ப் பிரகடனம் செய்தார். ஹமாசு அமைப்பை அடியோடு அழிப்பதே குறிக்கோள் என்று ஆர்ப்பரித்தார். கடந்த 75 ஆண்டுகளில் பாலஸ்தீனிய அமைப்பு எதுவும் இவ்வளவு பெரிய தாக்குதலையும் பேரழிவையும் நிகழ்த்தியதில்லை, அதனால் தீவிர வலதுசாரிக் கொள்கை கொண்ட நெதன்யாகு ஆட்சி காசா மீது கொடிய தாக்குதலைத் தொடுத்தது.

இன்று பாலஸ்தீனம் என்று அழைக்கப்படுவது காசா. மேற்குகரை. கோலன் குன்றுகள் ஆகியவை அடங்கிய நிலப்பரப்பே ஆகும். ஆசியக் கண்டத்தில் தென்மேற்கு பகுதியில் உள்ள லெபனான், ஜோர்டான், சிரியா, சவூதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளின் நடுவில் அமைந்துள்ள சிறிய நாடு பாலஸ்தீனம். பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காசா 40 கிலோ

மீட்டர் நீளமும் 6 முதல் 10 கிலோ மீட்டர் அகலமும் என 363 சதுர கிலோ மீட்டர் நிலப் பரப்பு கொண்ட பகுதியாகும். காசாவில் 23 இலட்சம் மக்கள் வாழ் கின்றனர். உலகிலேயே மக்கள் தொகை அடர்ந்த பகுதி இது.

பாலஸ்தீனத்தின் தன்னிகரற்ற தலைவராக விளங்கிய யாசர் அராபத் ஆயுதப் போராட்டத்தைத் தள்ளி வைத்து விட்டு இசுரேலுடன் சமரசப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதை ஏற்காமல் காசாவில் தொடங்கப்பட்டது தான் ஹமாசு இயக்கம். இதற்கு இசுலாமியப் போராளி இயக்கம் என்று பொருள். இது 1987இல் ஷேக் அகமது யாசின் என்பவரால் தொடங்கப்பட்டது. ஹமாசு ஓர் அரசியல் கட்சியாகவும் ஆயுதப் போராளி இயக்கமாகவும் செயல்படுகிறது. 2006 தேர்தலில் வெற்றி பெற்று அதுமுதல் காசாவை ஆட்சி செய்து வருகிறது.

அக்டோபர் 7 அன்று தாக்கப்பட்டதால் சினந்தெழுந்து போர் முழக்கமிட்ட இசுரேல், காசா மீது வான்வழியாக தொடர்ந்து குண்டுகளை ஏவித் தாக்கியது. வடக்கு காசாவின் நிலப்பகுதியிலிருந்தும் தாக்கியது. இத்தாக்கு தலில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், பள்ளிகள், மசூதிகள் முதலானவை தகர்க்கப்பட்டன. நாள்தோறும் நூற்றுக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். குடியிருப்புகளின் இடிபாடுகளுக்குள் சிக்கி மீட்க முடியாமல் மடிந்தோர் பலர். எண்ணற்றோர் படுகாயமடைந்தனர். அடிப்படைத் தேவைகளான தண்ணீர், மின்சாரம், உணவுப் பொருட்கள், மருந்துகள், எரிபொருள் காசாவுக்குக் கிடைப்பதை இசுரேல் படையினர் தடுத்து நிறுத்தினர். மருத்துவ மனைகளில் மின்சாரம் இல்லாமல் கைப்பேசி ஒளியில் அறுவை செய்தனர். எரிபொருள் கிடைக்கா ததால் ஜெனரேட்டர்களை இயக்க முடியவில்லை. மயக்க மருந்து கொடுக்க முடியாமலே அறுவை செய்யும் கொடுமை நேரிட்டது.

அக்டோபர் 17 அன்று காசாவில் அல்-அஹ்லி அரப் மருத்துவமனை மீது இசுரேல் குண்டு வீசித் தகர்த்தது. இதில் 500க்கும் மேற்பட்ட நோயாளிகளும் மருத்துவப் பணியாளர்களும் மாண்டனர். போரின் போது மருத்துவ மனைகளைத் தாக்கக் கூடாது என்பது பன்னாட்டுச் சட்டம். அதனால் அல்-அஹ்லி அரப் மருத்துவமனைத் தாக்கப்பட்டதில் 500 பேர் மடிந்ததைக் கண்டித்து உலகெங்கிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. எனவே இசுரேல், ஹமாசு வீசிய குண்டு குறி தவறி மருத்துவ மனை மீது விழுந்துவிட்டது என்று கூறியது. விரைவில் இது பொய் என்பது அம்பலமானது. வல்லாதிக்க அரசுகள் தங்கள் கொடுஞ் செயல்களை நியாயப்படுத்த இதுபோன்ற பொய்களைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். ஈராக்கில் சதாம் உசேன் பேரழிவு ஆயுதங்களைப் பதுக்கி வைத் துள்ளார் என்கிற பொய்யைக் கூறி அமெரிக்கா போர் தொடுத்து சதாம் உசேனைக் கொன்றது; ஈராக்கை அழித்தது.



காசாவில் பயிரிடும் பரப்பு மிகவும் குறைவு; தொழிற்சாலைகள் இல்லை; வாழ்வதற்கான பிற ஏந்துகள் இல்லை. அதனால் காசா மக்களில் 60 விழுக் காட்டினர் அய்க்கிய நாடுகள் மன்றம், ஈரான் அளிக்கும் உதவிகளையே நம்பி உயிர் வாழ்ந்து கொண்டிருக் கின்றனர். அதேசமயம் இசுரேல் மக்கள் வளமாக வாழ்கின்றனர். போர் தொடங்கியதும் காசாவுக்கு எகிப்து நாட்டின் எல்லை வழியாக உதவிகள் வரும் வழியை இசுரேல் மூடியது. காசாவில் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட முடியாமல் தடைகளை எழுப்பியது. பன்னாட்டு அளவில் இசுரேலின் மனிதத் தன்மையற்ற இச்செயல் களுக்கு எதிர்ப்பு எழுந்த பிறகே காசாவுக்குள் உதவிப் பொருட்கள் வர அனுமதித்தது.

காசாவில் மக்கள் நாள்தோறும் எப்போது குண்டு விழும்; சாவு நேரிடும் என்ற அச்சத்தில் உறைந்துள் ளனர். அடையாளம் அறியப்படாத பிணமாகப் புதைக் கப்படுவதைத் தவிர்க்க பெற்றோர்கள் தங்கள் குழந் தைகளின் கைகளில் அவர்களின் பெயர்களைப் பச்சை குத்துகின்றனர். இளைஞர்களும் இதுபோல் செய்து கொள்கின்றனர். பெண்கள் தங்கள் பெயர் பொறித்த வளையல்களை அணிந்து கொள்கின்றனர்.

வான்வழி. நில வழித் தாக்குதல் தவிர, காசாவில் இசுரேல் நாட்டால் குடியமர்த்தப்பட்டுள்ள இசுரேலியர் களுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதமும் வழங்கப்பட்டுள்ளன. குடியமர்த்தப்பட்ட இசுரேலியர்கள் இசுரேல் படையின் துணையுடன் பாலஸ்தீனியர்களைத் தாக்கி வருகின்றனர்.

பாலஸ்தீனியர்களின் வீடுகளைப் புல்டோசர்கள் கொண்டு இடிக்கின்றனர். இசுரேலின் ஒருங்கிணைந்த தாக்குதல்களால் காசாவில் இதுவரை (நவம்பர் 26) 13,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப் பட்டுள்ளனர். இவர்களில் குழந்தைகள் மட்டும் 5,500 பேர் இதுபோல் பன்மடங்கினர் படுகாயமடைந்து போதிய மருத்துவம் பெறமுடியாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். காசாவின் வடக்குப் பகுதியில் வாழும் 11 இலட்சம் பாலஸ்தீனியர்களை 24 மணி நேரத்திற்குள் காசாவின் தெற்கு பகுதிக்குச் செல்லுமாறு இசுரேல் ஆணையிட்டது. நவீன கால வரலாற்றில் இதுபோன்ற கொடிய கட்டளை வேறெங்கும் பிறப்பிக் கப்பட்டதில்லை. இதனால் மேலும் இன்னல்களுக்கு ஆளாயினர்.



### இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளின் எதிர்வினை

அக்டோபர் 7 அன்று ஹமாசு - இசுரேல் மீது நடத்திய தாக்குதலைப் பெரும்பாலான நாளேடுகளும் தொலைக்காட்சி ஊடகங்களும், ‘ஹமாசு தீவிரவாதி களின் பயங்கரத் தாக்குதல்’ என்று கூறின. ஆனால் அய்க்கிய நாடுகள் மன்றத்தின் பொதுச் செயலாளர். ஹமாசின் தாக்குதல் நடவடிக்கை ஒரு எதிர்வினை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்; அதேசமயம் பாலஸ்தீன மக்களின் கொடுந்துயரம் ஹமாசின் தாக்கு தலை நியாயப்படுத்தாது என்று கருத்துரைத்தார்.

வரலாற்றில் வலியோர் எளியோரைத் தொடர்ந்து தாக்குவதை எப்போதும் தாங்கிக் கொண்டேயிருந்த தில்லை. சில சமயங்களில் எளியோர் திருப்பித் தாக்கி வந்துள்ளனர். ரோமப் பேரரசுக்கு எதிராக அடிமைகளின் தலைவன் ஸ்பார்ட்டகஸ் முதல் ஹமாசு வரை இதுவே உண்மையாகும். அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலாக கொடிய அடக்குமுறைகளை ஏவிவரும் இசுரேலிய அரசுக்கு எதிராக யாசர் அராபத் உள்ளிட்ட பாலஸ் தீனர்கள் ஆயுதமேந்திப் போராடி வருவது தங்கள் நிலத்தின், மக்களின் சுதந்தரத்தையும், உரிமைகளையும் மீட்டெடுப்பதற்கேயாகும்.

ஆனால் வல்லாதிக்க ஆற்றல்களும், அரசுகளும் இதற்கு பயங்கரவாதம் என்று முத்திரை குத்துகின்றன. ஹமாசு தாக்குதல் தொடுத்த அன்றே அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஜோபைடன் இசுரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்கா எல்லா வகையிலும் துணை நிற்கும் என்று சொன்னார். உடனடியாக இரண்டு போர்க் கப்பல்களை மத்திய தரைக்கடல் பகுதிக்கு அனுப்பினார். பிரதமர் நரேந்திர மோடியும் தொலைபேசி வாயிலாக பயங்கரவாதத்துக்கு எதிராக இந்தியா துணை நிற்கும் என்று கூறினார். அமெரிக்காவின் ஜோபைடன், இங்கிலாந்தின் ரிஷி சுனக், பிரான்சின் இம்மானுவேல் மேக்ரான், இத்தாலியின் அதிபர் உள்ளிட் டோர் அடுத்தடுத்து இசுரேலுக்குச் சென்று நெதன்யா குவிடம் தங்கள் முழு ஒத்துழைப்பைத் தெரிவித்தனர். செருமனியும் முழு ஆதரவு தெரிவித்தது.

இந்த நாடுகள் வலிய ஓடோடிச் சென்று இசுரேலைத் தாங்கிப் பிடிப்பது ஏன்? எண்ணெய் வளம் மிக்க அரபு நாடுகளைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதற்கு இசுரேல் வலிமையான களமாக இருப்பதேயாகும். அதனால் கடந்த சில ஆண்டுகளில் அமெரிக்காவின் துணையுடன் பல அரபு நாடுகளுடன் இசுரேல் நட்புறவு ஒப்பந்தங்கள் செய்து கொண்டது. ஹமாசு தாக்குதலுக்கு முன் சவூதி அரேபிய மன்னருடன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. இசுரேல் காசாமீது தொடுத்துள்ள கடுந்தாக்குதலால் அரபு நாடுகள் பாலஸ்தீனர்களை ஆதரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

அய்க்கிய நாடுகளின் பாதுகாப்பு அவையில் இரஷ்யாவும் சீனாவும் இசுரேல்-ஹமாசு போர் நிறுத்தம் செய்வதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தன. ஆனால் அமெரிக்கா தன் ‘வீட்டோ’ அதிகாரம் மூலம் நிறைவேறாமல் செய்துவிட்டது. இசுரேல் காசா பகுதி மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தியதால், இந்தியா வின் அயலுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், “சுதந்தர பாலஸ்தீனம் அமைய வேண்டும் என்பதும் பாலஸ்தீனமும் இசுரேலும் அருகமை நாடுகளாக அமைதியாக வாழவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்” என்று அறிக்கை வெளியிட்டார். காசாவில் அல்-அஹில் அரப் மருத்துவமனை பெருந் தாக்குதலுக்குள்ளான போது நரேந்திர மோடி பாலஸ்தீன அதிபரிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்தார். இந்தியா விலிருந்து 70 டன் உதவிப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அக்டோபர் 26 அன்று அய்க்கிய நாடுகளின் பொது அவையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும்

என்று தீர்மானம் கொண்டுவரப்பட்டது. மேற்கு ஆசிய - தெற்கு ஆசிய - தென் கிழக்கு ஆசிய - ஆப்பிரிக்க - தென் அமெரிக்க நாடுகள் உள்ளிட்ட 120 நாடுகள் இத் தீர்மானத்தை ஆதரித்தன. 45 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அய்ரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து கொண்டு இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு இடைக்காலப் போர் நிறுத்தத்தைக் கோரியது. நவம்பர் 21 அன்று இணைய வழியில் பிரிக்ஸ் (Brics) மாநாடு நடந்தது. சீன அதிபர் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றார். மோடி இதில் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் ஜெய் சங்கர் தான் கலந்து கொண்டார். போர் நிறுத்தம் தேவை என்பதை வழிமொழியவில்லை. மாறாக, இப்போரில் குடிமக்கள் கொல்லப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்தார். இந்தியா பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன் என்ற போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

வாஜ்பாய் பிரதமராக வந்ததும் அத்வானி இசுரேலுக்குச் சென்றார். அது முதற்கொண்டு இசுரேலுடனான உறவு வலுப்பட்டது. மோடி ஆட்சிக்கு வந்த பின் இசுரேலிடம் ஆயுதங்கள் வாங்குவது, உயர் தொழில்நுட்பக் கருவிகள் வாங்குவது என்பது பன்மடங்கு அதிகமாயிற்று. இரு நாடுகளின் ஆட்சியாளர்களும் அவர்களின் கட்சிகளும் ஆதிக் மனப்பான்மை கொண்டவை; இசுலாமியரை எதிரிகளாகக் கருதுபவை. அதனால் இந்தியாவின் பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டின் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஆயினும் அரபு நாடுகளில் 80 இலட்சம் இந்தியர் வேலை செய்வதால் வெளிப்படையாக இசுரேலை மோடி ஆட்சியால் ஆதரிக்க முடியவில்லை.

**பாலஸ்தீனத்தின் தேய்வும்**
**இசுரேலின் தோற்றமும் - ஆதிக்கமும்**

இன்று இசுரேல் நாட்டின் பகுதியும் பாலஸ்தீனமும் சேர்ந்த நிலப்பகுதி பண்டைய நாளில் பாலஸ்தீனம் என்றே அறியப்பட்டது. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் மோசஸ் எகிப்தில் அடிமைகளாக இருந்த யூதர்களைக் காப்பாற்றி பாலஸ்தீனத்திற்கு அழைத்து வந்தார். டேவிட், சாலமன் ஆகிய யூத மன்னர்களின் பேரரசுகள் சிறப்புற்று இருந்தன; ஜெருசலேமில் யூதர்களின் கோயில் இருந்தது என்று கூறப்பட்டுள்ளதை வரலாறு என்று எடுத்துக்காட்டி, இசுரேலியர்கள் பாலஸ்தீனம் தங்கள் தாயகம் என்று உரிமை கோருகின்றனர்.

ஏசு கிறிஸ்து பிறப்பதற்கு முன் ரோமானியப் பேரரசு பாலஸ்தீனத்தைக் கைப்பற்றியது. அதனால் யூதர்கள் ரோமானிய அரசிடம் பகை பாராட்டினர். ஏசு கிறிஸ்து ஒரு யூதர். அவர் காலத்திலேயே யூதர்களில் 75 விழுக்காட்டினர் பாலஸ்தீனத்திற்கு வெளியில் பல நாடுகளில் வாழ்ந்திருந்தனர்; பாலஸ்தீனம் பாலை நிலமும் வறண்ட பகுதிகளும் கொண்டது என்பதால் வாழ்வாதாரத்திற்காக வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்று இசுரேலிய வரலாற்று ஆய்வாளர் எழுதியுள் ளார். ரோமப் பேரரசு கிறித்துவ மதத்தைத் தழுவிய பின், கிறித்துவத்தின் கொள்கைகளை ஏற்க மறுத்தும், தங்கள் மதக் கொள்கையும் பழக்கவழக்கங்களுமே உயர்ந்தவை என்றும் கருதி, யூதர்களில் பெரும் பகுதி யினர் பிற நாடுகளுக்குச் சென்றனர். ஏசுவைக் கொன்றவன் யூதன் என்பதால் கிறித்துவர்கள் யூதர்களை வெறுத்தனர்.

குடியேறிய நாடுகளில் யூதர்களில் பெரும்பகுதியினர் வணிகத்திலும் வட்டித் தொழிலிலும் ஈடுபட்டனர். கிறித்துவர்கள் யூதர்களை வெறுத்தனர் என்பதுடன், யூதர்கள் தாங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள் என்று கருதி, தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டனர். 14ஆம் நூற்றாண்டில் யூதர்களின் கடும் வட்டியால் வாழ்விழந்த உழவர்கள் அய்ரோப்பாவில் பல நாடுகளில் யூதர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தாக்கினர். யூதர்களில் பெரும்பான்மையினர் செல்வர்களாக இருந்தனர்.

முதலாளிய உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில் மொழி அடிப்படையிலான தேச அரசுகள் (Nation-State) உருவாயின. அதனால் பல நாடுகளில் பிரிந்து வாழும் தமக்கும் ஒரு தேசம் வேண்டும் என்ற எண்ணம் யூதர்களுக்கிடையே ஏற்பட்டது. ஆயினும் பெரும்பாலோர் தாம் வாழும் நாட்டில் நெடுங்காலமாக வளமாக வாழ்ந்து கொண்டிருப்பதை விட்டுவிட்டு, புதிய இடத்திற்குச் செல்வதற்குத் தயங்கினர். அகவை மூத்தோருள் சிலர் தங்கள் புனித இடமான ஜெருசலேமிற்குச் சென்று தங்கள் இறுதி நாட்களைக் கழித்தனர். 19ஆம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் இசுலாமியர் 87 விழுக்காடு; கிறித்த வர்கள் 10 விழுக்காடு; யூதர்கள் 3 விழுக்காடு இருந்தனர்.

1897-இல் முதலாவது யூதப் பேரவை (Zionist Congress) “பாலஸ்தீனத்தில் சட்ட ஏற்புடைய ஒரு நாட்டை உருவாக்கிட பாடுபடுவதே ஜியோனிசத்தின் (யூதவியத்தின்) குறிக்கோள்” என்று அறிவித்தது. 1914 முதல் 1918 வரை முதல் உலகப் போர் நடந்தது. 400 ஆண்டுகள் நீடித்திருந்த துருக்கியரின் ஒத்தாமன் பேரரசு இப்போரில் பிரித்தானியப் படைகளிடம் தோற்றது. போர் நடந்து கொண்டிருந்த போதே 1917 நவம்பர் 2 அன்று பிரிட்டனின் அயலுறவு அமைச்சர் ஆதர் பால்ஃபோர், ‘பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு ஒரு தாயகம் அமைப்பதற்கு பிரிட்டன் துணை நிற்கும்’ என்று அறிவித்தார். 1922இல் சர்வதேச மன்றம் பாலஸ்தீனப் பகுதி பிரிட்டனின் நிர்வாகப் பகுதியாக இருக்கும் என்று முடிவு செய்தது. இரண்டாம் உலகப் போர் (1939-1945) முடியும் வரை பாலஸ்தீனம் பிரிட்டனின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

1918 முதலே அய்ரோப்பிய நாடுகளிலிருந்து யூதர்கள் பாலஸ்தீனப் பகுதியில் குடியேறத் தொடங்கினர். தங்களிடமிருந்த தங்கக் காசுகளைக் கொண்டு பாலஸ்தீனத்தில் நிலங்களை வாங்கினர். 1933இல் செருமனியில் ஆட்சிக்கு வந்த இட்லர் தூய ஆரிய ஜெருமனிய இனத்தைப் பேணுவது என்ற பெயரால் வரலாறு காணாத அளவில் 60 இலட்சம் யூதர்களைக் கொன்றனர். ஆஸ்திரியா, போலந்து போன்ற நாடுகளிலும் யூதர்கள் தாக்கப்பட்டனர். அச்சமயத்தில் இலட்சக்கணக்கில் யூதர்கள் பாலஸ்தீனத்திற்குச் சென்றனர். இட்லர் அறுபது இலட்சம் யூதர்களைக் கொள்ளாமல் இருந்திருந்தால் இஸ்ரேல் என்கிற நாடே உருவாகி இருக்காது என்று இசுரேலிய வரலாற்று ஆய்வாளர் எழுதியுள்ளார். பெரும் எண்ணிக்கையில் யூதர்கள் குடியேறுவதை எதிர்த்து பாலஸ்தீன அராபியர்கள் போராடினர். பிரித் தானியப் படைகள் இப்போராட்டங்களைக் கடுமையாக ஒடுக்கியது.

வரலாறு நெடுகிலும் மாறிவரும் சமூக-அரசியல் சூழலைத் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள் வதில் வல்லவர்களானப் பார்ப்பனர்களைப் போன்றவர் களே யூதர்களும். இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தானியப் பேரரசைவிட வலிமை மிக்கதாக அமெரிக்கா வளர்ந்தது. எனவே 1942-இல் உலக யூத மாநாடு, அமெரிக்காவுடன் உறவை மேம்படுத்தி இனி அமெரிக்காவை மய்யமாகக் கொண்டு இயங்குவது என்று தீர்மானித்தது. அதனால் இன்று அமெரிக்காவின் நிதி, அரசியல், அதிகாரம் முதலானவற்றில் பெரும் ஆதிக்கம் செலுத்துவோராக யூதர்கள் விளங்குகின்றனர்.

அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட முதலாளித்துவ நாடுகளின் அழுத்தத்தால் அய்க்கிய நாடுகள் அவை பிரிட்டனின் கட்டுப்பாட்டில் இருந்த பாலஸ்தீனத்தை பாலஸ்தீனம், இசுரேல் என்று இரு நாடுகளாகப் பிரிக்கும் தீர்மானத்தை 1947 நவம்பர் 27 அன்று இயற்றியது. பாலஸ்தீனத்தில் அப்போது 30 விழுக்காட்டினராக இருந்த இசுரேலியர்களுக்கு 55 விழுக்காடு நிலப்பகுதி யையும், 70 விழுக்காட்டினராக இருந்த பாலஸ்தீனியர் களுக்கு 43 விழுக்காடு நிலப்பகுதியையும் ஒதுக்கியது.

1948 மே 14 அன்று பிரிட்டன் பாலஸ்தீனத்தி லிருந்து தன் ஆட்சியை விலக்கிக் கொள்வதாக அறி வித்தது. அதே நாளில் யூதத் தலைவர்கள் இசுரேல் நாடு அமைக்கப்பட்டதாக அறிவித்தனர். அதே நாளில் இசுரேலின் முதல் பிரதமராக டேவிட் பென் குரியன் பதவி ஏற்றார். இதனால் கொதித்தெழுந்த பாலஸ்தீனர் களின் அரபு விடுதலைப் படையினர் இசுரேல் மீது தாக்குதல் தொடுத்தனர். அடுத்த நாள் எகிப்து, ஜோர்டான், சிரியா, லெபனான், ஈராக் உள்ளிட்ட அரபு நாடுகளின் படைகள் இசுரேலைத் தாக்கின. இதற்கு முன்பு பாலஸ்தீனத்திற்குக் குடியேறிய யூதர்கள் நவீன ஆயுதங்களுடன் பிரித்தானியக் கப்பல்களில் வந்தனர். இத்தாக்குதலை எதிர்கொள்ள யூதர்கள் முன்பே திட்ட மிட்டிருந்தனர். அமெரிக்கா, சக்தி வாய்ந்த விமானங்களை அளித்தது. பிரிட்டனும் பிரான்சும் அதிநவீன ஆயுதங் களை இசுரேலுக்கு அளித்தன. அதனால் அரபுப் படைகள் இப்போரில் தோற்றன.

வெற்றி பெற்ற இசுரேல் பாலஸ்தீனத்தின் 78 விழுக்காடு நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டது. பாலஸ்தீனர்களின் 530 கிராமங்களைத் தகர்த்து அவ்விடங்களில் வயல்களையும் காடுகளையும் உருவாக் கியது. இப்போரில் ஏழு இலட்சம் பாலஸ்தீனியர்கள் அவர்களின் வாழ்விடங்களிலிருந்து அடித்து விரட்டப் பட்டனர். இவர்கள் பல அயல்நாடுகளில் அகதிகளாக வறுமையில் உழன்று கொண்டிருக்கின்றனர். ஆயினும் இப்போரின் முடிவில் காசா பகுதியை எகிப்தும் மேற்கு கரைப் பகுதியை ஜோர்டனும் கைப்பற்றின. காந்தியார் 1938இல் பாலஸ்தீனத்தில் யூதக்குடியேற்றத்தைக் கண்டித்தார். ‘இங்கிலாந்து எப்படி ஆங்கிலேயர்களுக்கு உரிமையான நாடோ அதேபோல் பாலஸ்தீனம் பாலஸ்தீனியர்களுக்கு உரியது’ என்று கூறினார்.

1965 முதல் யாசர் அராபத் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) பாலஸ்தீன விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடி வந்தது. 1967ஆம் ஆண்டு அரபு நாடுகளுக்கும் இசுரேலுக்கும் இடையே நடந்த ஆறு நாட்கள் போரில் இசுரேல் வென்றது. எகிப்திடமிருந்து காசாவையும் ஜோர்டனிட மிருந்து மேற்குகரைப் பகுதியையும் கைப்பற்றியது. 1973இல் நடந்த போரில் சிரியாவிடமிருந்து கோலன் குன்றுகள் பகுதியைக் கைப்பற்றியது. மேற்குக் கரைப்பகுதியில் இசுரேல் ஆறு இலட்சம் யூதர்களைக் குடியேற்றி 90 விழுக்காடு நிலங்களைக் கைப்பற்றியது. காசாவிலும் ஆயிரக்கணக்கான யூதர்கள் குடியமர்த்தப் பட்டனர். இசுரேல் 2002இல் மேற்குக்கரையில் பாலஸ்தீனக் குடியிருப்புகளைச் சுற்றி சுவர் எழுப்பியது. 2006இல் காசாவில் ஹமாசு ஆட்சிக்கு வந்தபின் இதேபோல் இருபது அடி உயரத்திற்கு சுவர் எழுப்பி, அதையொட்டி வேலிகளும் அமைத்தது. இவ்விரு பகுதிகளிலும் வாழ்ந்து வரும் பாலஸ்தீனர்களின் உரி மைகள் பறிக்கப்பட்டு, நாள்தோறும் பலவகையான கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

இட்லர் யூதர்களுக்குக் கொடுமைகள் இழைத்தது போலவே இப்போது இசுரேல் அரசு பாலஸ்தீனயர்களை ஒடுக்கி வருகிறது. இது ஓர் இன அழிப்பு நடவடிக் கையே ஆகும்.

1987இல் காசாவில் அகதிகள் முகாமில் இருந்த பாலஸ்தீனர்கள் இசுரேலியப் படைக்கு எதிராக ஆயுதம் ஏதும் இல்லாமல் ‘இன்டிபதா’ என்று அழைக்கப்படும் பேரெழுச்சிப் போராட்டத்தை நடத்தினர். இதில் 400 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். 1988இல் அல்ஜிரி




யாவிலிருந்து செயல்பட்ட யாசர் அராபத் பாலஸ்தீன நாடு அமைக்கப்பட்டதாக அறிவித்தார். 1993-95 காலக்கட்டத்தில் இசுரேலுக்கும் அராபத் அமைப்புக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையின் முடிவில், இசுரேல் கைப்பற்றியுள்ள பகுதியில் சுதந்தர பாலஸ்தீனம் அமைப்பது என்பது ஏற்கப்பட்டது. இது ஆஸ்லோ ஒப்பந்தம் எனப்படுகிறது. இசுரேல் பிரதமர் ராபினும் அராபத்தும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர். இந்த ஒப்பந்தப்படி காசா மற்றும் மேற்குக்கரைப் பகுதியிலிருந்து இசுரேலியப் படைகள் படிப்படியாக வெளியேறும். 1995இல் இசுரேலியப் பிரதமர் ராபின் தீவிரவாத இசுரேலியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆஸ்லோ ஒப்பந்தத்தை இசுரேல் மதித்து நடக்கவில்லை. யாசர் அராபத்தின் சமரச ஒப்பந்தத்தை ஏற்க மறுத்த இளைஞர்கள் ஹமாசு இயக்கத்தைத் தொடங்கினர்.

07.10.2023 அன்று ஹமாசு தாக்கியதால் தான் இசுரேல் தற்காப்புக்காகத் திருப்பித் தாக்குகிறது என்று கூறுவது ஒரு ஏமாற்று. கடந்த 75 ஆண்டுகளில் பாலஸ்தீனர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை அறிந்த எவரும் இதை ஒப்பார்.

நவம்பர் 26 முதல் நான்கு நாட்களுக்குப் போர் நிறுத்தமும் பிணைக் கைதிகள் பரிமாற்றமும் அறிவிக் கப்பட்டுள்ளது. இது நீடித்த போர் நிறுத்தமாக ஆக வேண்டும். காசாவில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியவர்கள் வீடு திரும்ப உடனடியாக அனு மதிக்க வேண்டும். உதவிப் பொருட்கள் தேவையான அளவில் காசாவுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். தகர்க்கப்பட்ட வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள் மீண்டும் கட்டியெழுப்ப உலக சமூகம் உதவிட வேண்டும்.

தற்போதுள்ள பாலஸ்தீனப் பகுதிகளில் இசுரேலியக் குடியேற்றங்களை அகற்றி, சுதந்தர பாலஸ்தீனத்தை அமைப்பது மட்டுமே அரபு மண்ணில் நீடித்த அமை திக்கு வழிகோலும். ஒடுக்கப்படும் மக்களின் பக்கம் நிற்பதே மாந்தநேயத்தையும் மனித உரிமைகளையும் சனநாயகத்தையும் காப்பதாகும். ●

# வேலூரில் பாலஸ்தீனத்தின் மீதான போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்





மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி உள்ளிட்ட முற்போக்கு அமைப்புகள் இணைந்து ‘‘பற்றி எரியுது பாலஸ்தீனம்! பதைபதைக்கிறது உலகம்’’ என பாலஸ்தீனத்தின் மீது இசுரேல் நடத்தும் போரை நிறுத்திடக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

வேலூரில் 15.11.2023 அன்று கீழ்க்காணும் முழக்கங்களை முன்வைத்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத் திற்கு பாலாறு பாதுகாப்பு சமூக விழிப்புணர்வு இயக் கத்தின் ஒருங்கிணைப்பாளர் ச.ந.ச.மார்த்தாண்டன் தலைமை ஏற்றார். மா.பெ.பொ.க. தோழர்கள் பங் கேற்றனர். மா.பெ.பொ.க. சார்பில் சா.குப்பன் உரை யாற்றினார்.

* அமெரிக்காவின் அடியாளான இசுரேலே! பாலஸ் தீனத்தின் மீது நடத்தும் அடவாடிப் போரை நிறுத்து!
* உலக நாடுகளே! பாலஸ்தீனத்தைத் தனி நாடாக அங்கீகரிப்பீர்!
* மேற்குலக நாடுகளே! இசுரேலின் ஆக்கிரமிப்புக்கு உதவி செய்யாதே!
* இந்திய அரசே! குழந்தைகள், பெண்கள் அனை வரையும் கொல்லும் இன அழிப்புக் குற்றவாளி இசுரேலை ஆதிரிக்காதே!

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் மா.பெ.பொ.க. வேலூர் மாநகரச் செயலாளர் மீ.டில்லிபாபு நன்றி நவின்றார்.

# பொது மக்கள் நலம் நாடும் பத்திரிகையாளர் படும்பாடு!



- சா.குப்பன்

நியூஸ் கிளிக் என்ற வலைதள ஊடகத்தின் நிறுவனரும் முதன்மை ஆசிரியருமான பிரபீர் புர்காயஸ்தாவையும் அந்நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி அமித் சக்கரவர்த்தியையும் 03.10.2023 அன்று புதுதில்லியில் ஒன்றிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் தில்லி காவல் துறையினர் கைது செய்து, 'உபா' (UAPA) உள்பட பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளனர்.



தில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு 2009 முதல் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் செய்திகளைத் திரட்டி, ஆங்கிலத்திலும், இந்தியிலும், மராத்தியிலும் செய்திகளை விமர்சனங்களுடன் வெளியிட்டுக் கொண்டுள்ள வலைதளச் செய்தி ஊடக நிறுவனம் 'நியூஸ் கிளிக்' ஆகும். பிரபீர் புர்காயஸ்தாவையும் அமித் சக்கரவர்த்தியையும் 03.10.2023 அன்று கைது செய்த தில்லி காவல் துறையினர் 13.10.2023 வரை கைது செய்ததற்கான காரணத்தை முறைப்படி எழுத்து மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை; முதல் தகவல் அறிக்கையின் நகலையும் அவர்களுக்கு அளிக்கவில்லை. 04.10.2023 அன்று காவல் துறையினர் கோரியபடி தில்லி சிறப்பு நீதிமன்றம் அவர்களைச் சிறையிலிட உத்தரவிட்டது தவறு என தில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். ஆனால் 16.10.2023 அன்று உயர்நீதிமன்றம் இதில் தலையிட மறுத்துவிட்டது.

எனவே பிரபீர் புர்காயஸ்தாவும் அமித் சக்கரவர்த்தியும் தங்களைச் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (UAPA) கீழ் கைது செய்தது தவறு என்று உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர். இவ்வழக்கு நீதிபதி பி.ஆர். கவாய் மற்றும் பி.கே. மிஸ்ரா அமர்வு முன்னிலையில் 19.10.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தில்லி காவல் துறையினரால் பிரபீர் புர்காயஸ்தா மற்றும் அமித் சக்கரவர்த்தி ஆகிய இருவர் மீதும் சீனாவில் இருந்து நியூஸ் கிளிக் நிறுவனம் நிதி பெற்றது என்றும் சீனாவிற்குச் சார்பாக கருத்துப் பரப்புவதற்காகத்தான் நிதி பெறப்பட்டது என்றும் உபா (UAPA) சட்டத்தின் பிரிவுகள் 13, 16, 17, 18 மற்றும் 22இன்கீழ் வழக்குப் பதியப்பட்டுள்ளது. மேலும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதற்காக நிதி திரட்டியது எனவும் இ.த.ச. பிரிவு 153ஏஇன்படி வேறுபட்ட மதக்குழுவினரிடையே பகைமையை வளர்த்தாகவும், 120பிஇன்படி குற்றவியல் சதித் திட்டம் தீட்டியதாகவும், 2019-20இல் தில்லியில் நடந்த குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு (சிஏஏ) எதிரானப் போராட்டத்தையும் 2020-21இல் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தையும் தொடர்ந்து நீடிக்கத் தூண்டியதாகவும் அப்போது இன்றியமையாப் பண்டங்கள் வரத்திற்கு இடைஞ்சல் விளைவித்ததாகவும், நாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் விரோதமாகச் செயல்பட்டதாகவும் அச்சுறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது. எந்த ஒரு குற்றச்சாட்டுக்கும் ஆதாரம் எதுவும் காட்டப்படவில்லை; குற்றச்சாட்டுகளும் திட்டவட்டமாகவோ, தெளிவாகவோ இல்லை.

முதலில் சிறையில் தள்ளிவிட வேண்டும்; பின்னர் விசாரணை-தீர்ப்பு என்பதே ஒன்றிய அரசின் நேரடிக் காட்டுப்பாட்டில் உள்ள தில்லி காவல் துறையினரின் நோக்கம் ஆகும்.

நியூஸ் கிளிக் நிறுவனத்தின் தில்லி அலுவலகத்தில் இருந்த மின்னணு சாதனங்கள் தில்லி காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு அதன் முன்வாயிலை மூடி, முத்திரையிடப்பட்டது. அந்நிறுவனத்தில் பணியாற்றும் பத்திரிகையாளர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டன. 46 பேர்களிடமிருந்து கைப்பேசிகள், மடிகணினிகள் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பிரபீர் புர்காயஸ்தா, காவல் துறையினர் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யாக இட்டுக்கட்டப்பட்டவை, போலியானவை, அடிப்படையற்றவை, ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றும் சீனாவிடமிருந்து ஒரு காசும் பெறவில்லை என்றும் மறுத்துள்ளார்.

பா.ச.க. மோடி அரசின் திறமையற்ற ஆட்சியையும் மோடியின் நண்பர்களாக உள்ள கார்பரேட்டு தொழில்-வணிகக் குழுமங்களுக்குச் சாதகமானச் செயல்பாடுகளையும் இந்துத்துவ சக்திகளின் மேலாதிக்கத்தையும் விமர்சனம் செய்பவர்களை அச்சுறுத்துவதற்காக வகுத்தளிக்கப்பட்ட - கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறை

போலீசு இராச்சியத்தின் கயமையான, அறிவற்றச் செயல்களின் வெளிப்பாடே மேற்சொன்ன நடவடிக்கை களாகும்.

நடந்தது என்னவென்றால், 2018 மார்ச்சில் அமெரிக் காவில் பணக்கார வணிகரான நவெலிராய்சிங்கம் என்பவருக்கு உரிமையான டபுள்யூ.எம்.எச். (World Media Holding) என்ற அமெரிக்க நிறுவனம், நியூஸ் கிளிக் நிறுவனத்தில் முதலீடு செய்தது. அந்த முதலீடு இந்தியச் சட்டங்களுக்கு உட்பட்டுச் செய்யப்பட்டதாகும். W.M.H. என்ற நிறுவனம் பி.எஸ்.எப். (People's Support Foundation) என்ற அமெரிக்காவில் உள்ள நிறு வனத்தின் துணை நிறுவனமாகும்.

நியூஸ் கிளிக் நிறுவனம் W.M.H. நிறுவனத்திட மிருந்து முதலீடு பெற்றது தொடர்பாக 2021இல் பொருளாதாரச் சட்டச் செயலாக்கத் துறை (E.D.) மற்றும் வருமான வரித் துறையும் சோதனை நடத்திய போது நியூஸ் கிளிக் நிறுவனம் முதலீடு பெற்றது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் அளித்தது.

இப்போது நியூயார்க் டைம்ஸ் எனும் அமெரிக்க நாளேட்டில் 05.08.2023 அன்று வெளியிட்டச் செய்தி, நவெலிராய் சீனாவிடமிருந்து நிதி பெற்றிருக்கலாம் என்று கருதும்படியானதாக இருந்தது. 'நியூயார்க் டைம்ஸ் வேண்டுமென்றே தவறான செய்தி வெளியிட் டுள்ளது' என நவெலிராய் கூறுகிறார். 'அந்தச் செய்தியில் உள்ளதை முழுமையாக மறுக்கிறேன்' என்றும் கூறி யுள்ளார். நியூயார்க் டைம்ஸில் வெளியான இந்தச் செய்தியின் அடிப்படையில் தான் தில்லி காவல் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

**தகர்ப்புக்கு உள்ளாகியுள்ள நான்காவது தூண்**

சனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாகக் கருதப்படும் பத்திரிகைகள்-செய்தி ஊடகங்கள் ஆட்சியா ளர்களின் மிரட்டல்கள், நெருக்குதல்கள் இல்லாமலும் இந்துத்துவ சேனைகளின் அச்சுறுத்தல்கள் இல்லாமலும் சுதந்திரமாக இயங்க முடிகிறதா என்பதே வினா? நேர்மையாகவும் அச்சமின்றியும் செய்திகளையும் அரசியல், பொருளியல், சமூக நடப்புகளைத் திறனாய்வு செய்து, கருத்துகளை வெளியிடும் விரல் விட்டு எண்ணக் கூடிய சில நாளேடுகள், வார-மாதப் பருவ இதழ்கள், தொலைக்காட்சி ஊடகங்கள் மற்றும் வலைதள ஊடகங் களை ஆட்சியதிகாரத்தில் உள்ளோர் பகையாகக் கருது கிறார்கள். இத்தகைய சுதந்திரமான ஊடகங்களின் குரல்களை ஒடுக்கிட பல வழிகளில் அச்சுறுத்தப்படு கின்றன.

நியூஸ் கிளிக் நிறுவனத்திற்கு எதிரான ஒன்றிய அரசின் காவல் துறை நடவடிக்கையை இந்தியச் செய்தியாசிரியர்கள் சங்கம் (Editors Guild of India), நியூயார்க்கில் உள்ள பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு (Committee to Protect Journalist) முதலான அமைப்புகள் கண்டித்துள்ளன. நியூஸ் கிளிக் ஊடகத்தின் பிரபீர் புர்காயஸ்தா மற்றும் அமித் சக்கரவர்த்தி இருவ ரையும் உபா (UAPA) சட்டத்தின்கீழ் தில்லி காவல் துறை கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து இந்தியப் பத்திரிகையாளர் சங்கம் (Press Club of India) 05.10.2023 அன்று புதுதில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. ஆர்ப்பாட்டத்தின் போது 'தி ஒயர்' செய்தி ஊடகத்தைச் சேர்ந்த சித்தார்த் வரதராசன், 16 ஊடக நிறுவனங்கள்-பத்திரிகையாளர் அமைப்புகள் கூட்டாக உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தையும் படித்துக் காட்டினார். இடது சாரி மாணவர்களும் குடிமைச் சமூகத்தினரும் ஆர்ப் பாட்டம் நடத்தினர். 11.10.2023 அன்று சென்னையில் பத்திரிகையாளர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ரொமிலா தாப்பர் உள்ளிட்ட 700 புகழ்பெற்ற இந்தியக் குடிமக்கள் கூட்டாக சுதந்திரச் செய்தி ஊடகமான நியூஸ் கிளிக் நிறுவனத்திற்கு ஆதரவு தெரிவித்து 16.10.2023 அன்று அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

**பத்திரிகைச் சுதந்திரத் தரவரிசையில் இந்தியா**

ஆண்டுதோறும் உலகப் பத்திரிகைச் சுதந்திரக் குறியீட்டுத் தரவரிசை-மொத்தம் 180 நாடுகளின் நிலை நிரல்படுத்தபபட்டு வெளியிடப்படுகிறது. அவற்றுள் இந்தியாவின் நிலை :

| ஆண்டு | | தர இடம் |
|---|---|---|
| 2002 | – | 80 |
| 2012 | – | 131 |
| 2017 | – | 136 |
| 2018 | – | 138 |
| 2019 | – | 140 |
| 2020 | – | 142 |
| 2022 | – | 150 |
| 2023 | – | 161 |

2002இல் 80ஆம் இடத்தில் இருந்த இந்தியா 10 ஆண்டுகளில் 2012இல் 51 நாடுகளுக்குக் கீழே இறக்கம் கண்டது. அடுத்த 10 ஆண்டுகளில். 2022இல் 19 நாடு களுக்குப் பின் எனச் சரிந்துள்ளது. கடந்த ஒரே ஆண்டில் 11 நாடுகளுக்குக் கீழே தரவரிசையில் 161ஆம் இடத்தில் இந்தியா இடம்பெற்றுள்ளது. அரசியல், பொருளியல், நாடாளுமன்ற, சட்டமன்றச் செயல்பாடுகள், சமூகவியல், பாதுகாப்பு எனப் பல கூறுகளின் அடிப்படையில் கணிக் கப்பட்டு மேற்படித் தரநிலை வரிசைப்படுத்தப்படுகிறது. இதில் தாலிபான்கள் ஆட்சி நடத்தும் ஆப்கனிஸ்தானை (152) விட இந்தியா 9 இடங்களுக்குக் கீழே உள்ளது. இதுபோல் உலக அளவில் நடத்தப்படும் ஆய்வுகளைப் பொய்யானவை என்று ஒன்றிய அரசு கூறி மழுப்பி வருகிறது.




ஒன்றிய ஆட்சியதிகாரத்தில் பா.ச.க. நரேந்திர மோடி அமர்ந்த 2014க்குப் பின் மோடியின் நண்பர் முகேஷ் அம்பானியின் கட்டுப்பாட்டில் 70 தொலைக் காட்சி ஊடகங்கள் இயங்குகின்றன. இவற்றை 80 கோடி மக்கள் காண்கின்றனர். 1996 முதல் இயங்கி வரும் இந்த ஊடகங்கள் 2014இல்தான் முகேஷ் அம்பானியின் கைக்கு மாறின. என்.டி.டி.வி (நியு டெல்லி டெலிவிஷன்) 1988 முதல் இயங்கி வருகிறது. பல ஊழல்களை வெளிக்கொணர்ந்து, அதற்காக விருது பெற்ற ஊடகம். 2022இல் நரேந்திர மோடியின் அணுக்க நண்பர் கவுதம் அதானிக்குக் கைமாறியது. இந்த ஊடகம் 14.01.2023இல் வெளியான இன்டன்பர்க் ஆய்வறிக்கைப் பற்றி விவாதிக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா?

நியூஸ் கிளிக் போன்ற சில ஊடகங்களே கார்பரேட் ஊடகங்கள் வெளியிடாத பல செய்திகளை மக்களுக்குத் தந்து கொண்டுள்ளன. அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சி ஊடகங்கள், வலைதள ஊடகங்களுக்கு மோடி அரசு அரசியல் உள்நோக்கத்துடன் பல கட்டுப்பாடுகளை அதிக அளவில் விதித்து வருகிறது. ஒன்றிய மோடி அரசின் தவறான கொள்கைகளை விமர்சிக்கும் ஊடக வியலாளர்களுக்கு ‘தேச விரோதி’ என முத்திரை குத்தி, தேசத் துரோக வழக்கு, சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (UAPA) கீழ் வழக்கு, அவதூறு வழக்கு என பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தி வழக்குகள் தொடுக்கப்படுகின்றன.

பி.பி.சி. நிறுவனம், 2002இல் குசராத்தில் இசுலாமியர் களுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத் அமைப்பினர் நடத்திய கொடிய வன்முறையை நரேந்திர மோடி தலைமையில் இருந்த குசராத்து மாநில அரசு தடுத்திட முயலவில்லை என்பது பற்றி ஆவணப் படம் தயாரித்து, India : The Modi Question என்ற பெயரில் முதல் பகுதியை 17.01.2023இலும் அதன் 2ஆம் பகுதியை 24.01.2023இலும் வெளியிட்டது. அதற்கு எதிர்வினையாக நரேந்திர மோடி அரசின் வருமான வரித்துறை யினர் 14.02.2023 அன்று பி.பி.சி.இன் புதுதில்லி, மும்பை அலுவல் இடங்களை வரிஏய்ப்பு நடந்துள்ளதாகச் சோதனை செய்தது.

**கொல்லப்படும், சிறையிலிடப்படும் பத்திரிகையாளர்கள் :**

2014-19க்கு இடையில் 40 பத்தி ரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 198 பத்திரிகையாளர்கள் மீது கடுமை யானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 2019இல் மட்டும் 36 தாக்கு தல்கள் நடத்தப் பட்டுள்ளன. 2019 நாடாளுமன்றத் தேர்தல் நடந்த ஆண்டு ஆகும். வன்முறையை நிகழ்த்திய வர்கள் காவல் துறையினர், அரசியல் குண்டர்கள், குற்றவியல் கும்பல்கள், ஊழலில் திளைக்கும் உள்ளூர் அதிகாரிகள் என்பது வெளிப்படை.

2013ஆம் ஆண்டில் 8 பத்திரிகையாளர்கள் கொல்லப் பட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 3 அல்லது 4 ஊடக வியலாளர்கள் கொல்லப்படுகின்றனர். எல்லா கொலை களும் வன்முறைத் தாக்குதல்களும் பத்திரிகையாளர்கள் மேற்கொண்டுள்ள தொழில் காரணமாக நடந்தவை ஆகும். 07.02.2023 அன்று சாக்ஷிகாந்த் வாரிஷி என்பவர், நாக்பூரைச் சேர்ந்த உள்ளூர் மராத்தி நாளேட்டில் எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டத்திற்கு உள்ளூர் மக்களின் எதிர்ப்புப் பற்றி செய்திக் கட்டுரை எழுதினார். அந்த நாளேட்டில் அச்செய்தி வந்த அன்றே, பட்டப் பகலில் ஊர்தி ஏற்றி அவர் கொல்லப்பட்டார்.

உலகத்திலேயே இந்தியா பத்திரிகையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடு என்று பெயர் பெற்றுள்ளது. பெண் பத்திரிகையாளர்கள் மிகவும் அதிகத் தொல் லைக்கு உள்ளாகின்றனர். பத்திரிகையாளரும், கட்டு ரையாளரும், எழுத்தாளருமான சாகரிகா கோஸ், தற்போது டைம்ஸ் ஆப் இந்தியாவின் ஆலோசனை ஆசிரியர். அவருக்கு இணைய வழியாக கற்பழிப்பு, கொலை மிரட்டல் எனத் துன்புறுத்தல் தரப்படுகிறது.

அரசின் கொள்கைகளை விமர்சித்தவரும் மக்கள் குரலை எதிரொலித்தவருமான பத்திரிகையாளர் இரவீஷ் குமார் 26 ஆண்டுகளாக என்.டி.டி.வி.இல் பணியாற்றிய மூத்த நிர்வாக ஆசிரியர். அப்பொறுப்பிலிருந்து விலகச் செய்யப்பட்டார். 2018 செப்டம்பரில் ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ உரிமையாளர் ஷோபனா பார்டியா, பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த சிறிது நேரத்தில் அந்த ஏட்டின் ஆசிரியராக இருந்த பாபிகோஷ் பதவி விலகினார்.

2011க்குப் பின் கைது செய்யப்பட்ட 31 பேர்களில் 29 பேர்கள் மீது அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சிறைக்கு அனுப்பப் பட்டனர். 2021, 2022 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 7 பேர் என சிறையில் தள்ளப்பட்டனர். 2011க்குப் பிறகு கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர்களில் 93 விழுக்காட்டினருக்கு பேர்களுக்கு எதிராக, அரசுக்கு எதிரானச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளனர். 2021இல் கைது செய்யப்பட்ட 7 பேர்களில் 6 பேர்கள் மீது அரசுக்கு எதிராகச் செயல்பட்டதாகக் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன.


2010-2020 பத்தாண்டில் 'பேச்சுச் சுதந்திரக் கூட்டகம்' (Free Speech Collective) அமைப்பும் 'சிறைக் கம்பி களுக்குப் பின்னால்' (Behind Bars) அமைப்பும் நடத்திய ஆய்வுப்படி 154 பத்திரிகையாளர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். 9 வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

'காஷ்மீர் செய்திகள்' ஏட்டின் செய்தியாளர் ஆசிப் சுல்தான் 27.8.2018 முதல் சிறையில் உள்ளார். 'தி காஷ்மீர் வாலா' ஏட்டின் ஆசிரியர் பகத்ஷா 04.02.2022 முதல் சிறையில் உள்ளார். மற்றும் ரூபாஷ் குமார், சஜ்ஜத்குல், இர்பான் மெகராஜ், மனன்தர் முதலானோர் காஷ்மீரில் செய்தி சேகரித்ததற்காக சிறையில் அடைக் கப்பட்டுள்ளனர்.

சந்தோஷ் யாதவ் என்பவரை 2015இல் கைது செய்து சிறையில் வைத்து 02.01.2020இல் விடுதலை செய்யப்பட்டார்; 16 பேர் 'உபா' சட்டத்தில் சிறையில் உள்ளனர்; சித்திக் கப்பன் (உபா) 2 ஆண்டுகள் சிறை யில் இருந்த பின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்; 'உபா' சட்டத்தில் கைது செய்யப்பட்ட 7 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுபோல் சிறையில் உள்ள பத்திரிகையாளர் பட்டியல் நீள்கின்றது. இப்படியாக சிறையில் உள்ளவர்கள், கொல்லப்பட்டவர்கள், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் - யார், யார்? எப்படி, எப்படி துன்புறுத்தப்பட்டனர் என்றுள்ள விவரங்களைத் தொகுத்தால் ஒரு நூல் ஆகிவிடும்.

மோடி அரசு பெரிய செய்தி ஊடகங்களை ஆளுவோ ருக்கு இசைவாக செயல்பட ஏற்பாடு செய்துவிட்டப் பின்னரும் சிறு ஊடகங்களையும், வலைதள ஊடகங் களையும் நசுக்கிட முரட்டுத்தனமானச் செயல்களை ஒளிவுமறைவு இன்றி அரசின் துறைகளை அடக்கு முறை ஆயுதங்களாகப் பயன்படுத்தி வருகிறது.

ஒருமுறை பிரதமர் நரேந்திர மோடியிடம் கேட்கப் பட்ட ஒரு வினாவிற்கு, "பத்திரிகையாளர்களைச் சமாளிப்பதில் பலவீனமாக உள்ளேன்" என்று தன் கருத்தை மறைக்காமல் வெளிப்படுத்தினார். ஆனால்




உண்மையில்-நடப்பில் மோடி அரசுதான் சட்ட விரோதமாக நடந்து கொள் கிறது. பத்திரிகைகள் - ஊடகங்கள் வெளியிடும் செய்திகள் வேறுபட்ட இரு மத, இனக் குழுவினருக்கு இடையில் பகைமையை வளர்த்து, அமைதியைக் குலைப்பதாக அரசு குற்றஞ் சாட்டுகின்றது. மாறாக இந்துத்துவக் குழுக்கள், பா.ச.க.வினர் ஆட்சிப் பதவிகளில் இருப்பவர்கள் ஆகியோரின் வெறுப்புப் பேச்சுகள் அல்லவா பகை மையை மூட்டுகின்றன? அமைதியை குலைக்கின்றன?

சனநாயக நாட்டில் மக்களுக்குச் செய்திகளையும், தகவல்களையும் தரும் தூதுவர்களாக விளங்கும் பத்திரிகையாளர்கள் அச்சமின்றி தங்கள் பணிகளைச் செய்ய முடியாது என்ற நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. ஊடகங்கள் வெளியிடும் செய்திகளின் நம்பகத்தன்மை மிகவும் குறைந்து வருகிறது. 2012 முதல் வளர்ந்து வரும் வலைதள ஊடகங்களே மக்களின் நம்பிக்கை யைப் பெற்று வருகின்றன. அரசியல் மற்றும் நிர்வாகத் தோல்விகளை மறைப்பதற்கும் ஆளுமை வழிபாட்டைப் பேணுவதற்காகவும் மாறுபட்ட கருத்துகளை அடக்கு வதில் மோடி அரசு மிகவும் முனைப்புடன் இருப்பதில் வியப்பில்லை. மோடி அரசு விரைந்து முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை மிகுந்து வருகிறது. "எதிர்காலம் இந்த (மோடி) அரசை மன்னிக்காது" என்று இந்தியப் பொது வுடைமைக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான பினாய் விசுவம் கூறியுள்ளது உண்மையாக வேண்டும். ❖

## திருச்சி ஓவியர் சாமி கங்காதரன் அவர்களின் 14வது நினைவு நாள்



பெரியார் கொள்கையாளர் வே.ஆனைமுத்து அய்யா அவர்கள் மீது பற்றுக் கொண்டவர். அவர் 01.12.2009 அன்று மறைவுற்றார். 01.12.2023 அன்று அவரது நினைவு நாளையொட்டி அவருடைய துணைவியார் க. சரோஜா அவர்கள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கினார்.

# தமிழ்நாட்டு அரசின் இந்துச் சமய அறநிலையத் துறை ஆலயங்களை விட்டு வெளியேற வேண்டுமா?



- வாலாசா வல்லவன்

சில ஆண்டுகளுக்கு முன்பு கோவை ஈ.ச மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ், பா.ச.க.வின் தமிழ்நாட்டு மாநிலத் தலைவர் அண்ணாமலை ஆகியோர் இந்து அறநிலையத் துறை கோவில்களை நிர்வகிப்பதை விட்டு வெளியேற வேண்டும் என்று பேசி வருகின்றனர். தெலங்கானா மாநிலத்திற்கு அக்டோபர் மாதம் தேர்தல் பரப்புரைக்கு வந்திருந்த இந்திய அரசின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தமிழ்நாடு அரசு இந்துக் கோவில்களை ஆக்கிரமித்துள்ளது என்று பேசினார். தற்போது நவம்பர் 2இல் இந்திய அரசின் நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் தமிழ்நாட்டு அரசு கோவில் பணத்தைக் கொள்ளை அடிக்கிறது என்று பேசினார். இவர்கள் வேண்டுமென்றே தமிழ்நாட்டு அரசின்மீது வீண்பழிச் சுமத்துகின்றனர்; இந்து அறநிலையத் துறை ஏற்படுத்தப்பட்டதே கோவில்கள் மடங்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கேயாகும். சங்க காலத்தில் தமிழ்நாட்டில் பெரிய கோயில்கள் எதுவும் இல்லை.

பல்லவர் ஆட்சிக் காலத்தில்தான் கற்கோயில்கள் கட்டப்பட்டன. பல்லவ அரசர்களால் கோயில்களுக்கு நிலங்கள் பெருமளவில் கொடையாக அளிக்கப்பட்டன. பார்ப்பனர்களுக்கும் நிலக்கொடை வழங்கப்பட்டது.

பிற்காலச் சோழர்கள் ஆட்சியில் பெரிய, பெரிய கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களுக்குப் பெருமளவில் நிலங்களும் பொன்னும் பொருளும் கொடையாக அளிக்கப்பட்டன. பிரமதேயம், சதுர்வேதி மங்கலம் என்ற பெயர்களில் பார்ப்பனர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. கோயில்கள் மன்னராட்சிக் காலத்தில் அரசர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தன.

பார்ப்பனப் பூசாரிகள் கோயில் நகைகளைத் திருடுவது சோழர் ஆட்சிக்காலத்திலேயே இருந்தது என்பதைக் கல்வெட்டுச் சான்றுகளின் மூலம் பிற்காலச் சோழர் வரலாறு எனும் நூலில் சதாசிவப்பண்டாரத்தார் குறிப்பிட்டுள்ளார். கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள சிவபுரத்தில் கி.பி.1239-இல் எழுதப்பட்டுள்ள கல்வெட்டொன்று அவ்வூர் கோயிலைச் சேர்ந்த இரண்டு சிவப்பிராமணர்கள் சிவப்புரத்தெழுந்தருளியுள்ள இறைவியின் அணிகலன்களை கவர்ந்து தம் காதற்பரத்தைக்குக் கொடுத்தும், தம்மிடம் அளிக்கப்பட்டிருந்த கோயிற்குரிய நிவந்தப் பொருளை வேறு வகையில் செலவிட்டும் வந்ததை கண்டுபிடித்து, மகேச்சுவரராலும் ஊர் சபையினராலும் தண்டிக்கப்பட்டனர். (Ins 287 of 1927; Annual Report on South Indian Epigraphy for 1927, Part II, Para 30) (பிற்காலச் சோழர் வரலாறு சதாசிவப் பண்டாரத்தார், பக்கம் 431, தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகம்).

இதன்மூலம் தமிழ்நாட்டில் கோயில்களில் திருடுவது, கோயில் சொத்துகளை அரசனுக்குத் தெரியாமல் விற்பது போன்ற செயல்கள் ஆயிரம் ஆண்டுகாலமாக நடந்து வந்தது தெரிய வருகிறது.

பிற்கால மன்னராட்சிக் காலங்களிலும் இதே நிலைதான் நீடித்து வந்தது.

கிழக்கிந்திய வணிகக் குழுமத்தின் ஆட்சி ஏற்பட்ட பிறகு கோவில் சொத்துகள் கொள்ளைப் போவதை தடுப்பதற்கு சில சட்டங்களை இயற்றினர்.

1795இல் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராக இருந்த லெயன்ஸ் ப்ளேஸ் என்பவர் காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவிலுக்கு சில வைரம், பொன் நகைகளை காணிக்கையாக அளித்தார். சில மாதங்கள் கழித்து அவர் சென்று பார்த்த போது அவர் அளித்த நகைகள் அங்கு இல்லை. எனவே கோவில்களில் மிகப்பெரும் ஊழல்கள் நடக்கின்றன. கோவில் நிர்வாகத்தை அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரவேண்டும் என்று கிழக்கிந்திய வணிக குழும நிர்வாகத்திற்குக் கடிதம் எழுதினார். வேறு சில மாவட்ட ஆட்சியர்களும் கடிதம் எழுதியுள்ளனர். அதன் அடிப்படையில் 1817ஆம் ஆண்டு கோயில் நிர்வாகத்தை வருவாய்த் துறையின்கீழ் கொண்டு வந்தனர். சென்னை மாகாணத்தில் 8292 கோயில்கள் கிழக்கிந்திய வணிகக் குழும நிர்வாகத்தின் (அரசின்) நேரடி கட்டுப்பாட்டிற்குள் வந்தன.

1858இல் பிரித்தானியரின் கிழக்கிந்திய வணிகக் குழுமத்தின் ஆட்சி முடிவுற்றது. ஆங்கில அரசின் நேரடி ஆட்சி இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டது. அதன்பிறகு பிரிட்டிஷ் அரசும் 1863இல் கோயில்களை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. புதிய இந்து மத அறநிலையச் சட்டத்திலும் பல ஓட்டைகள் இருந்தன. கோயில் சொத்துகள் கொள்ளை போவது தொடர்கதையாகவே இருந்து வந்தது.

பெரியார் அவர்கள் காங்கிரசுக் கட்சியில் இருந்த போது 1915ஆம் ஆண்டு சூலை மாதம் 24, 25 நாள்களில்

டாக்டர் டி.எம்.நாயர் தலைமையில் காங்கிரசு கட்சியின் கோயம்புத்தூர் மாவட்ட இரண்டாவது மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. பெரியார் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றினார். அந்த மாநாட்டில் 2ஆவது தீர்மானமாகக் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

“தர்ம ஸ்தாபனங்கள் மத சம்பந்தமான தேவாலயங்கள் சரிவர பரிபாலனம் செய்யப்படாததால் கிராமமாய் நடக்கும் வண்ணம் இப்போதிருக்கிற சட்டத்தைக் கொஞ்சமேனும் தாமதிக்காமல் சீர்திருத்தம் செய்து மாற்றிட வேண்டுமென்று கவர்ன்மெண்ட்டாரை இம் மாநாடு வற்புறுத்துகிறது” (இந்தத் தீர்மானத்தை ஸ்ரீமான் B.V. நரசிம்மய்யர்தான் முன்மொழிந்திருக்கிறார் என்பது நமது ஞாபகம். - பெரியார் ஈ.வெ.ரா. (குடிஅரசு 22.11.1925).

அதன்பிறகு நீதிக்கட்சி என்னும் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் 1916 திசம்பர் 20ஆம் நாள் தொடங்கப்பட்டது. முதல் பார்ப்பனரல்லாதார் மாநாடு 19, 20.08.1917 நாள்களில் கோயம்புத்தூரில் நடைபெற்றது. அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 5ஆவது தீர்மானம் வருமாறு :

சமஸ்கிருதப் பள்ளிகளை உருவாக்க சத்திரம் மற்றும் இதர அறக்கட்டளை நிதிகளைப் பயன்படுத்துவதற்கு இந்த மாநாடு எதிர்ப்புத் தெரிவிக்கிறது. எங்கெல்லாம் இயலுமோ, அங்கெங்கெல்லாம் இந்த நிதிகளைக் கொண்டு தொடக்கப் பள்ளிகளை உருவாக்க வேண்டும் என்று அரசுக்கும் அறக்கட்டளைகளின் அறங்காவலர்களுக்கும் இந்த மாநாடு பரிந்துரைக்கின்றது.

சமஸ்கிருதப் பள்ளிகளால் பார்ப்பனர் சமுதாயம் மட்டுமே பயனடைகிறது என்பதை மருத்துவர் டி.எம். நாயர் சுட்டிக்காட்டினார். “திருப்பதி மடத்தின் கணக்குகளை எவரேனும் பரிசீலித்துப் பார்த்தால் அதற்குக் கிடைத்த நிதியில் 99.5 விழுக்காடு பார்ப்பனரல்லாத மக்களிடமிருந்தே வந்திருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு பார்ப்பனர்களுக்கான சமஸ்கிருதப் பள்ளிகளை மட்டுமே தொடங்கியுள்ளனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது” என்றும் டி.எம். நாயர் பேசினார்.

1917 திசம்பர் 28, 29 நாள்களில் நீதிக் கட்சியின் முதல் மாகாண மாநாடு சென்னையில் நடைபெற்றது. அதில் உரையாற்றிய வெங்கிடகிரி ராசா மத அறக்கட்டளைகள் தொடர்பான ஒரே வழக்கில் எட்டு இலட்சம் ரூபாய் வழக்குரைஞர் கட்டணமாகப் பார்ப்பனருக்குக் கொடுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டினார். பார்ப்பனரல்லாதாருடைய சொத்துகளைப் பார்ப்பனர்கள் கொள்ளையடிப்பதை தடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டத் திட்டத்தின்படி இரட்டை ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டு 1920இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, 20.12.1920 அன்று சென்னை மாகாணத்தில் ஆட்சி அமைத்தது. தங்கள் கொள்கைகளைப் பார்ப்பனரல்லாதார் நலன் கருதி ஒவ்வொன்றாக நிறைவேற்றும் வகையில் வகுப்புரிமை ஆணைகள், கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழு என்று ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்தினர்.

1922ஆம் ஆண்டு திசம்பர் 18ஆம் நாள் இந்துமத அறநிலையச் சட்டத்தை அப்போதைய முதலமைச்சர் பனகல் அரசர் முன்மொழிந்தார். அதை சட்டமன்றத்தில் 22.12.2022 அன்று ஆதரித்துப் பேசிய திராவிடர் சங்கத்தை தோற்றுவித்த மருத்துவர் நடேசனார் தம் உரையில், “கோவில் குளங்கள் என்ற பெயரால் பெரும் பணத்தைக் கொட்டிக் கொடுத்து அவைகளின் வருவாயை ஒரு சமுதாயத்தின் உற்றாரும், சுற்றத்தினரும் அனுபவித்து வரும்படி நம் முன்னோர்கள் விட்டுவிட்டனர். இப்படி விடப்பட்ட சொத்துச் சுதந்தரங்களுக்கு அவர்களே உரிமையும் கொண்டாடிக் கொள்ளவும் ஆகிவிட்டது, செத்துப் போய்விட்ட மொழியான சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கு தர்ம ஸ்தாபனங்களின் சொத்து தண்ணீரெனச் செலவழிக்கப்பட்டது, அன்றும், இன்றும், என்றும் இயங்கி, இயங்குகிற, இயங்கும் கலைச் செல்வமாம் தமிழ் இலக்கியங்களைப் படுபாதாளத்தில் புதைத்தனர். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. நமது மாண்புமிக்க முதல் அமைச்சர் பனகல் அரசர் துணிந்து இம்மசோதாவைக் கொண்டு வந்துள்ளார். அறநிலையங்களைச் சீர்திருத்தம் செய்வதோடு மட்டுமின்றி, அறநிலையச் சொத்துக்கள் யாவும் எல்லா மக்களுக்கும் கல்வி புகட்டுவதற்காகவும், சுகாதார வசதி செய்து கொடுப்பதற்காகவும், மருத்துவ விடுதி, பிரசவ விடுதி, குழந்தைப் பாதுகாப்பு விடுதி ஆகிய நற்காரியங்கள் காண்பதற்காகவும், இம்மசோதாவைக் கொண்டு வந்துள்ளார். இப்படிப்பட்ட உபயோகமுள்ள காரியங்களைச் செய்வதற்கென இம்மசோதாவை கொண்டு வந்துள்ள முதல் மந்திரியை நாம் யாவரும் பாராட்ட வேண்டும்” என்று பேசினார்.

பனகல் அரசரின் இந்த மசோதா அவ்வளவு எளிதில் நிறைவேறிவிடவில்லை. நீண்ட விவாதங்கள், பல திருத்தங்கள், சட்டமன்றத்திற்கு வெளியேயும் எதிர்ப்புகள் என எல்லாவற்றையும் மீறி 1923இல் நிறைவேற்றப்பட்டது. ஆளுநர் மாளிகையிலும், வைசிராய் மாளிகையிலும் பணியாற்றியப் பார்ப்பனர்கள் வைசிராய் இதில் கையொப்பமிடாமல் பார்த்துக் கொண்டனர்.

அப்போதெல்லாம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும். 1924-இல் நீதிகட்சி வெற்றி பெற்று பனகல் முதலமைச்சரானார். 1924 ஏப்ரலில் இந்து அறநிலைய மசோதாவை மீண்டும் சட்டமன்றத்தில்

அறிமுகப்படுத்தினார். இம்முறை சுயராச்சிய கட்சியின் தலைவரான எஸ். சத்தியமூர்த்தி அய்யர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவர் மத விவகாரங்களில் அரசு தலையிடக்கூடாது எனக் கடுமையாகப் பேசினார். அவர் ஒருவர் மட்டுமே 475 திருத்தங்களைக் கொடுத்தார். மிக நெடிய விவாதத்திற்கு பிறகுதான் சட்டமன்றத்தில் இச்சட்டம் நிறைவேறியது.

இந்தச் சட்டம் சட்டமன்றத்தில் விவாதத்தில் இருந்த போது பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளைக் கண்டித்து பெரியார் தமது குடிஅரசு ஏட்டில் கீழ்க்காணும் தலைப்புகளில் கட்டுரைகள் எழுதி பனகல் அரசருக்கு மக்கள் ஆதரவைத் திரட்டினார்.

1. தேவஸ்தான மசோதா 22.11.1925.
2. இந்து தேவஸ்தான சட்டம் 7.3.1926.
3. மதமும் மத தர்ம பரிபாலனமும் சென்னை சட்டமும் அதன் விரோதிகளும் 30.5.1926.
4. தேவஸ்தான சட்டம் பார்ப்பனர் குட்டு வெளியாய்விட்டது (15.8.1926).
5. தேவஸ்தான மசோதா குறிப்பு 5.9.1926.
6. இந்து மத பரிபாலன மசோதாவும் பார்ப்பனர்கள் சூழ்ச்சியும் பனகல் ராஜாவுக்கு ஜே! (26.9.1926).

‘‘தென்னாட்டுப் பார்ப்பனர்களின் எவ்வளவோ சூழ்ச்சிக்கும் தப்பி இந்துமத பரிபாலன மசோதா என்று சொல்லப்படும் தேவஸ்தான மசோதா சட்ட சபையில் சட்டமாக நிறைவேறிவிட்டது. தேவஸ்தான சட்டம் சட்ட சபைக்கு வந்தவுடன் பலர் அதை வெட்டித் தள்ளிவிட என்ன என்னமோ சூழ்ச்சிகள் செய்து பார்த்தும் சுமார் 500 திருத்தப் பிரேரேபணைகளைக் கொண்டு வந்து தங்களால் ஆனவரையில் அதை ஒழிக்கப் பார்த்தார்கள். கடைசியாகப் பொது ஜனங்களின் அதிகப்படியான பிரதிநிதிகளும் சர்க்காரும் இவைகளுக்குக் கொஞ்சமும் மனந்தளராமல் ஒரே உறுதியாய் இருந்து சட்டத்தை நிறைவேற்றிவிட்டார்கள்’’ என்று பெரியார் எழுதினார் (குடிஅரசு 26.9.1926).

இதற்கு ஆதரவாளரான சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி டி.வி. சதாசிவ அய்யர் அவர்களை இந்த வாரியத்தின் தலைவராகப் பனகல் அரசர் நியமித்தார். இதனால் கோயில் சொத்துகள் கொள்ளைப் போவது ஓரளவு தடுக்கப்பட்டது.

அதன்பிறகு மீண்டும் சென்னை மாகாண அரசின் முதலமைச்சர் ஓமந்தூரார் இராமசாமி ஆட்சியில் இச்சட்டத்திற்கு மேலும் வலிமையூட்டி வாரியம் என்பதை துறையாக மாற்றப்பட்டது. 11.7.1947இல் சட்டமன்றத்தில் இதற்கான சட்ட முன்வரைவின் மீதான விவாதத்தின் இறுதியில் ஓமந்தூர் இராமசாமி பேசிய போது, 35 கோயில்களில் நடைபெற்ற ஊழல் பட்டியலை கையில் வைத்துள்ளேன். அதை தடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரமில்லை. தஞ்சாவூர் ஜில்லாவில் வேதாரண்ய ஈஸ்வரர் தேவஸ்தானத்துக்கு 16,000 ஏக்கர் நிலம் கொண்ட 45 கிராமங்கள் சொந்தமாக இருந்துங்கூட ஆண்டு வருமானம் வெறும் ரூ.75,000 மட்டுமே கணக்கில் காட்டப்படுகிறது’’ என்று இதுபோன்ற நீண்டப் பட்டியலைப் படித்துக் காட்டி இவற்றைத் தடுப்பதற்காகவே இச்சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று கூறினார்.

‘‘மேலும் ஓமந்தூர் இராமசாமி சென்னை மாகாணத்தில் கோயில் மடங்களுக்கு எட்டு இலட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றிலிருந்து ஆண்டுக்கு மூன்றரை கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. அதைப் பராமரிக்க அதிகாரமும் பொறுப்புமுள்ள ஒரு சட்டமும் தேவையாக இருக்கிறது. அதைத்தான் இந்த மசோதாவின் மூலம் செய்து வருகிறோம்’’ என்று கூறினார்.

இப்போது உள்ள இந்து அறநிலையச் சட்டம் 1959ஆம் ஆண்டு காமராசர் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டதாகும்.

தி.மு.க. அரசின் இந்துச் சமய அறநிலையத் துறை மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது. சிதம்பரம் நடராசர் கோயில் ஆண்டு வருமானம் தீட்சிதர்கள் கட்டுப்பாட்டில் இருந்த போது ரூ.37,199 என்றும் செலவு ரூ.37,000 என்றும் மீதம் ரூ.199 ரூபாய் நீதிமன்றத்தில் கணக்குக் காட்டப்பட்டது. அதே கோயில் கலைஞர் முதல்வராக இருந்தபோது தமிழ்நாட்டு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த போது 15 மாத வருமானம் ரூ.25,12,485 ஆகும். கோயில் நிர்வாகம் தனியாரிடம் வழங்கினால் என்ன நடக்கும் என்பது இதன்மூலம் உறுதியாகிறது.

தற்போதைய தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கோயில் சொத்துக்களின் ஆவணங்கள் அடங்கிய நான்கு கோடி பக்கங்கள் படப்படி எடுக்கப்பட்டு (Scan) இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அறநிலையத் துறை ஒன்பது கலைக் கல்லூரிகளை, ஒரு தொழில்நுட்ப கல்லூரி, இருபத்தைந்து மேல்நிலை மற்றும் உயர் நிலைப் பள்ளிகளை நடத்துகிறது அதில் இருபத்து அய்ந்து ஆயிரம் மாணவர்கள் பயிலுகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் தி.மு.க. அரசு பழைய கோயில்களைப் புதுப்பிப்பதற்காக இருநூறு கோடி ரூபாய் மானியமாக வழங்கியுள்ளது. கிராமப்புற சிறுகோவில்கள் பராமரிப்புப் பணிக்காக ஒரு கோவிலுக்கு இரண்டு இலட்சம் வீதம் 5000 கோயில்களுக்கு நூறு கோடியை அரசு மானியமாக வழங்கி உள்ளது. இரண்டு ஆண்டுகாலத்தில் ஒரு ஆயிரத்து நூறு ஏழைகளுக்கு இலவயத் திருமணத்தை நடத்தி வைத்துள்ளது. கோயில் உண்டியல் பணம் பலர் முன்னிலையில் எண்ணப்


பட்டு வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. கோயில் பணத்தை அரசோ, தனியாரோ எடுத்துக் கொள்ளாத வகையில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன. இதுவரை தி.மு.க. அரசு இரண்டு ஆண்டு காலத்தில் 621 கோடி ரூபாய் மானியமாக இத்துறைக்கு அளித்துள்ளது. 38 மாவட்டங்களுக்கும் மாவட்ட அறங் காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 5000க்கும் மேற்பட்ட கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

**எல்லாவற்றையும்விட முதன்மையானது கடந்த 2 ஆண்டுகளில் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்து 5,500 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டு, அந்தந்த கோவில்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாட்டு அரசின் இந்து சமய அறநிலையத் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. தத்துவ அடிப்படையில் பா.ச.க.விற்கு எதிராக இருக்கும் தி.மு.க. அரசின் மீது வீண்பழிச் சுமத்தி பக்தர்களிடையே கெட்ட எண்ணத்தை உருவாக்கவே தலைமை அமைச்சர் முதல் பா.ச.க.வின் கடைசி தொண்டர்கள் வரை திட்டமிட்டு பொய்ச் செய்தி களைப் பரப்பி வருகின்றனர். பக்தர்களை திராவிட கருத்தியலுக்கு எதிராகத் திருப்பிட இந்தக் கருத்தை ஆர்.எஸ்.எஸ். கையில் எடுத்துள்ளது. தமிழ்நாடு அரசின் அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் தக்க பதிலடி கொடுத்து வருகின்றனர். நிர்மலா சீத்தா ராமனுக்கு இருப்பது பக்தி அல்ல; பகல் வேடம் என முதல்வர் பதிலடி கொடுத்துள்ளார்.

நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட இந்து அறநிலையத் துறை கோவில் சொத்துக்களைப் பாதுகாத்து வருகிறது. கோவில்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதே கோயில்களுக்கும் அவற்றின் சொத்துக்களுக்கும்-ஏன் கடவுளர்களுக்கும் (சிலைகளுக்கும்) பாதுகாப்பு ஆகும்.

## சம்பந்த சிவக்குமார்
### 76ஆவது பிறந்த நாள்



காஞ்சிபுரம் மா.பெ.பொ.க. தோழர் சம்பந்த சிவக்குமார் அவர்கள் 75 ஆண்டு நிறை வடைந்து 9.11.2023 அன்று 76ஆவது ஆண்டில் அடியெ டுத்து வைத்துள்ளார். அதன் மகிழ்வாக புதிய சிந்தனை யாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கினார்.

## இரா. எழில் மகிழ்நன்-காமினி (எ) மகிழினி



கோலார் தங்கவயல் இராபர்ட்சன்பேட்டை அன்பிற் கரசு (எ) இராதாகிருட்டிணன் - இர. அமுதசெல்வி (எ) விசயலட்சுமியின் மகள் இரா. எழில் மகிழ்நன் அவர்களுக்கும் கோலார் தங்கவயல் ஊர்காம்பேட்டை இரா. மாதவன் - பூங்கோதை இணையரின் மகள் காமினி (எ) மகிழினிக்கும் தங்கவயல் ரெட்டி திருமண மண்டபத்தில் 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தோழர் சி. இராசன் தலைவர், க.த.ம.இ. அவர்கள் தலைமையில் வாலாசா வல்லவன் திரு மணத்தை நடத்தி வைத்தார். தோழர் கோ. குடிஅரசு வரவேற்புரையாற்றினார். தோழர்கள் த. குமணன், கு.அறிவழகன், ஆ.இராவணன், க.மா. இளங்கதிரவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். த. உளங்கவர மூகன் (எ) மனோகரன் நன்றியுரையாற்றினார். புதிய சிந்தனையாளன் இதழ் வளர்ச்சி நிதியாக மணமகளின் தந்தை த. அன்பிற்கரசு ரூ.1000 வழங்கினார்.

## பெங்களூர் தமிழ்ச்சங்கக் கட்டடத்தில்
## — கலந்துரையாடல் கூட்டம் —



23.11.2023 அன்று பெங்களூர் சென்ற வாலாசா வல்லவன் அங்குள்ள கர்நாடக தமிழ் மக்கள் இயக்கம் தோழர்கள் பொ.சண்முகம், சி.இராசன் மற்றும் பு.இ.மு. தோழர் அரசன், மா.பெ.பொ.க.தோழர் கோ.மு.கறுப்பய்யா உள்ளிட்டோர் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் வாலாச வல்வன் பங்கேற்றார். தி.க., தி.வி.க., பு.இ.மு., க.த.ம.இ. தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டு தமிழ்த் தேசியம் மற்றும் திராவிடம் குறித்து கருத்துரையாடினர்.

# வள்ளலார் கண்ட தமிழ்நெறி



- பேராசிரியர் **இர. நடராசன்**

**த**மிழ்நாடு அரசாங்கம் கடந்த ஐம்பத்திரண்டு வாரங்களாக "வள்ளலார்-200" என்ற பெயரில் முப்பெரு விழாக்களைத் தமிழ்நாடெங்கும் நடத்தி முடித்திருக்கிறது. இதன் உடனடிப் பயன் தமிழ்நாடெங்கும் வள்ளலார் அறியப்பட்டிருக்கிறார் என்பதாகும். சமூக வலைதளங்களில் குறிப்பாக "யூ-டியூப்களில்" கருத் தரங்குகள், சொற்பொழிவுகள் என இதுவரை இல்லாத அளவிற்கு வள்ளலாரைப் பற்றிய செய்திகள் வந்த வண்ணமுள்ளன.

"அரசியல் வேறு; இலக்கியம் வேறு" என்று என்ன தான் கூறிக்கொண்டாலும், அரசியலைச் சுற்றித்தான் இலக்கியங்கள் சுழலும் என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக் காட்டுதான் வள்ளலார் பற்றிய தற் போதைய தேடல் என்று கூறலாம்.



இவ்வாறு, வள்ளலாரை மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமை தமிழ்நாடு அர சையே சாரும். மேலும், வள்ளலாரைப் பற்றிய பல்வேறு ஆய்வுகளுக்கும் 'அரசின் வள்ளலார் 200' வழிவகுத்திருக்கிறது. வள்ளலாரை அப்படியே பின்பற்றும் சன் மார்க்க அன்பர்கள் மட்டுமல்ல, சன்மார்க்கஞ் சாராத தமிழ் உணர்வாளர்கள்கூட வள்ள லாரைப் பற்றிய கருத்துகளைப் பொது வெளியில் விவாதிக்கும் ஆரோக்கிய மான போக்கு முகிழ்த்திருக்கின்றது. இது மிகவும் வரவேற்கத்தக்கது.

இவ்விடத்தில், வள்ளலாரை மேலும் மேலும் அறிந்து தெளிவடைவதற்கு அடிப்படையாக அவருடைய காலச்சூழலையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

தமிழ்மொழி குறித்த அப்போதைய பார்வை எவ்வாறிருந்தது?

இலக்கணக் கொத்து நூலாசிரியரான ஈசான தேசிகர் ஒரு பாடல் எழுதியுள்ளார் :

"பல்கால் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்; ஆண்டினும் இலையேல்
வடமொழி வெளிபெற வழங்கும் என்க."

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது தொல் காப்பியம், திருக்குறள், திருக்கோவையார் ஆகிய நூல் களுக்குப் பெருமை சேர்ப்பதுபோல இப்பாடல் படிப்ப வர்க்குத் தோற்றமளிக்கும். ஆனால், இப்பாடலில் முக்கியமான கருத்து ஒன்று வலிந்து திணிக்கப்பட் டுள்ளது. 'இந்நூல்களில்' இல்லையென்றால் "வடமொழி வெளிபெற" வழங்கும். அவரே, வடமொழி, தமிழ் மொழி எனுமிரு மொழி யிலும் இலக்கணம் ஒன்றே என்று நம்மை 'எண்ணிக் கொள்' என்றும் ஆணையிடுகிறார்.

இன்றைக்கு ஓரளவிற்கு விவரம் தெரிந்தவர் களுக்குக்கூட, தமிழ்மொழியும் வடமொழியும் வேறு வேறானவை என்ற அடிப்படை உண்மை தெரியும்.

கலைமகளின் வலக்கண் சமற் கிருதம், இடக்கண் தமிழ் என்று கூறுபவர்களைப் பார்த்து, மனோன் மணீயம் சுந்தரனார், கலைமகள் உத்தமமான கிழக்கு திசையைப் பார்த்துக் கொண்டிருக்கிறாளெனின், எது வலக்கண், எது இடக்கண் என்று வினவி இடது வலம் தெரியாதவர்கள் இவர்கள் என்று ஏளனம் செய்கிறார்.

"பத்துப்பாட்டாதி மனம் பற்றினார்
பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும்
கற்பனையே!"

இலக்கணமில்லாக் கற்பனை என்று சுந்தரனார் இடித்துரைத்த பின்னரும் பாரதியார் பாடுவதைப் பாருங்கள்!

"ஆதிசிவன் பெற்றுவிட்டான் – என்னை
ஆரிய மைந்தன் அகத்தியனென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்."

இலக்கணமே இல்லாத மொழிபேசும் நாட்டவன் இங்கு வந்து இலக்கணம் செய்து கொடுத்தானாம்! என்ன ஒரு பம்மாத்து!

வரலாற்றுத் திரிபுகள் கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலும் வசதிக்கேற்றவாறு திரித்து பல நூறு ஆண்டுகளாக வெளியிடப்பட்டு வருகின்றன.

திருமூலர் சமயத்தின் பேரால் நடக்கும் போர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அன்பும் சிவமும் ஒன்றே எனக் கூறினார். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்றார். மக்களிடையே செல்வாக்குப் பெற்றார். உடனே அவரைச் சொந்தங் கொண்டாட ஒரு கூட்டம் கிளம்பியது. தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திப் பாடநூல்களில் கூட ஒரு கதையைப் பரப்பி விட்டார்கள்.

"கயிலையில் நந்தியம்பெருமானிடம் ஞான நூல்களைப் பயின்று திருமூலர் தென்னாட்டிற்கு வந்தார். ஆநிரை மேய்க்கும் மூலன் இறந்து கிடக்கும் காட்சியையும், பசுக்கூட்டம் கதறியழும் காட்சியையும் காணப்பொறாமல், மூலன் உடம்பில் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து அவ்வுடலிலேயே தங்கி 3000 ஆண்டுகள் வாழ்ந்து 3000 பாடல்களை எழுதினார்."

நம்பிக்கை சார்ந்த செயல்களைக் கேள்விக்கு உட்படுத்துதல் கூடாது என்பது மரபு. ஆனால் "இறைவன் தன்னைப் படைத்ததே தமிழில் தன்னைப் பாட வேண்டும் என்பதற்காக என்று சொன்ன திருமூலர், அதைச் சொல்வதற்கு வடநாட்டிலிருந்து கிளம்பி இங்கு வந்தார் என்பது எவ்வளவு பெரிய புரட்டு!" தமிழ் நாட்டிலிருந்து ஒருத்தர் திருமந்திரம் நூலை எழுதினார் என்பதைக்கூட இவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"எதிர்ப்பது, எதிர்க்க முடியாவிட்டால் அந்தக் கருத்தைத் தனதாக்கி வளைத்துக் கொள்வது" என்பது பார்ப்பன நரித்தந்திரம். இதனைத்தான் உள்வாங்கிச் செரித்துக் கொள்வது என்று கூறுவர். இது காலங்காலமாக நடந்துகொண்டுதான் இருக்கிறது.

சுவாமிநாத தேசிகர், சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர் போன்றோரைச் சமயத்தின் பேரால் பயன்படுத்திச் சங்க இலக்கியங்களையும், சமண, பௌத்த இலக்கியங்களையும் படிக்கக்கூடாது என்று ஒரு "தடையாணையை" இங்கு பெற்றிருந்தார்கள். குறிப்பாகச் சைவர்கள் இவற்றை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது என்பது சட்டமாக இருந்தது. சேலம் இராமசாமி முதலியார் இல்லையெனில் சங்க இலக்கியங்கள் இருந்தன என்பதே உ.வே.சா. அவர்களுக்குத் தெரியாமல் போயிருக்கும்!

"தீக்குறளைச் சென்றோதோம்" என்பதனை திருக்குறள் என்று புரிந்துகொண்டு திருக்குறளைப் படிக்க வேண்டாம் என்று கூறிய சமயத் தலைவர்களும் உண்டு. அவர்களே அதனை மறுத்துவிட்ட அறிக்கைகளும் உண்டு. திருக்குறள் உலக மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உலகோர் அனைவரும் அதன் பெருமையைப் பாராட்டிப் பேசிய பின்னர், திருக்குறள் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் பின்பற்றி எழுதப்பட்ட நூல் என்றும் சிறந்த இலக்கியங்களை வேதம் என்று கூறுவது மரபு என்றும் அந்த வகையில் திருக்குறள் தமிழ்வேதம் என்று பாராட்டப்படுகிறது என்றும் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். இவ்வாறு வேதத்தையும் அர்த்தசாஸ்திரத்தையும் மனுஸ்மிருதியையும் திருக்குறளோடு இணைத்து "உள்வாங்கிச் செரிப்பதற்கு" நாள்தோறும் முயற்சிகள் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

அப்படிப்பட்ட ஒரு முயற்சிதான் "வள்ளலார் சனாதனத்தின் உச்சம்" என்ற கூற்று. முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டிய கூற்று.

இன்றுகூட உச்சி வேளைக்கும் பின்னர்தான் தமிழில் பேசுவேன்; அதற்கு முன்னர் யாராக இருந்தாலும் தமிழில் பேசமாட்டேன்; ஏன் எனில் தமிழ் நீச பாஷை என்னும் சங்கராச்சாரியர்களும், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினால் எழுந்து நிற்கமாட்டேன் என்று "தியானத்தில்" இருப்பவர்களுக்கும் இடையில்தான் வள்ளலார் தமிழை "இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி" என்றும், தமிழ் ஒன்றே அதிசுலபமாகச் சுத்த சிவானுபூதியை அளிக்கவல்லது என்று இறைக்கருணையினையே தமிழால்தான் பெறமுடியும் என்றும் கூறினார். தமிழுக்கு ஐந்து நிலை அலகிட்டு உரையெழுதினார். எளிய தமிழ்நடையில் பாடல்கள் எழுதினார். இறைவன் கல்லார்க்கும் கற்றவர்க்கும் பொதுவானவன் என்று கூறினார். திருக்குறளை ஊர்தோறும் பரப்பினார்.

"இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெருமறைப்பையும், போதுபோக்கையும் உண்டாக்கும் ஆரிய முதலிய பாஷைகளில்" தன் மனதைச் செலுத்தவொட்டாமல் பயிலுதற்கும் அறிதற்கும் துதித்தற்கும் இலேசுடைய தமிழ்மொழியினிடத்தே மனம் பற்றச் செய்வித்த இறைவனுக்குத் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். தமிழ்நாட்டில் பிறப்பித்தமை குறித்து மகிழ்கிறார். இப்படிப்பட்டவரை வேறு கதைகள் புனைந்து உள்ளே இழுக்க வாய்ப்பில்லை. அதனால் சனாதனத்தோடு அவரை ஒரு கூட்டம் இணைத்துப் பார்க்க முயல்கிறது.

"உடையால் தமிழ்மரபு", "மக்களோடு கலந்து வாழ்தல்". "மக்களின் துயரங்கண்டு பதைத்தல்", "பசியினால் இளைப்பவரைக் கண்டு வருந்தும் கருணை". "ஆரவாரம் என்பது மருந்துக்கும் இல்லாத அடக்கம்" இவ்வளவு அரிய குணங்களைக் கொண்ட கருணை வள்ளலை இன்றைய "ஜகத்குருக்களோடு" ஒப்பிட்டுப் பாருங்கள்!

தாழ்ந்த சாதியினர் என்று உழைக்கும் மக்களை ஊரை விட்டே ஒதுக்கி வைத்துத் தெருவில் அவர்கள் நடக்கக்கூடாது; ஒருவேளை அவர்கள் நடந்தாலும் அவர்கள் காலடித்தடம் தெரியக்கூடாது; அப்படித் தெரியாதிருக்க ஒரு புதர்ச் செடியை தங்களுக்குப் பின்னால் இழுத்துக் கொண்டே நடக்க வேண்டும். 'தாழ்த்தப்பட்டவன்' பொதுவெளியில் நடக்கும் போது கழுத்தில் ஒரு பானையைக் கட்டிக் கொண்டு செல்ல வேண்டும். எச்சில் துப்பக்கூடாது. துப்ப நேர்ந்தால் வெளியில் துப்பக்கூடாது. கழுத்தில் கட்டியுள்ள பானையில்தான் துப்பிக்கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட சமுதாயச் சூழலில்தான் வள்ளலார் பூணூல் இல்லாமல் வந்த ஆடூர் சபாபதி சிவாச்சாரி யாரையும், அமாவாசை என்னும் தாழ்த்தப்பட்டவரையும் ஒன்றாக வைத்து வழிபாடு நடத்தினார்.

"தானே உருவாக்கிய நான்கு வருணங்களைத் தான் நினைத்தால்கூட மாற்ற முடியாது" என்று ஸ்ரீகிருஷ்ணர் வாய் மூலம் சொல்ல வைத்தவர்களுக்கு எதிரே நின்று, "வருணாசிரமமெனும் மயக்கமுஞ் சாய்ந்தது" என்கிறார் வள்ளலார்.

"நால் வருணம் ஆசிரமம் ஆசாரமுதலா
நவின்ற கலைச்சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே"

என்று வெகுண்டு கூறுகிறார்.

தான் முதலில் சைவ சமயத்தின்பால் மிகுந்த பற்று கொண்டிருந்ததாகவும், அதனை விட்டுவிட்ட தாகவும் கூறும் வள்ளலாரின் கூற்று பொருள் பொதிந்த கூற்று.

சைவமும், வைணவமும் மக்களை எப்படி நடத்தியது?

"அறுத்தலே தருமங் கண்டாய்
அரங்க மா நகருளானே"

என்று சமணர்களின் தலையை அறுப்பதே 'தருமம்' என்று தருமநீதியை விளக்குகிறார் ஒருத்தர். மணிவண் ணர்க்கு அன்புடையவர் என்றால்,

"குலம்தாங்கு சாதிகள் நான்கினினும் கீழிழிந்த
சண்டாள சண்டாளர்களையும்"

ஏற்றுக்கொள்வதாக மற்றொருவர் கூறுகிறார். சாதி இழிவைத் துடைத்தெறிவதற்குப் பதிலாக அவர்களை ஏற்றுக்கொள்ள நிபந்தனைகள் விதிக்கிறார்கள்!

"ஆவுரித்துண்ணும் புலையரே யாயினும்" என்கிறார் வேறொருவர்.

"பிண்டத்திரளையும்
பேய்க்கிட்ட நீர்ச்சோறும்
உண்டற்கு வேண்டி
ஓடித்திரியாதே" என்று எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

வள்ளலார் கூறுகிறார் :

"வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம். மண்ணுலகதிலே உயிர்கள் தாம் வருந்தும் வருத்தத் தைக் கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும் கணமும் நான் சகித்திட மாட்டேன்" என்று உயிர்களுக்கிரங்கும் வள்ளலாரின் நெறி பொதுமையை அடிப்படையாகக் கொண்டது.

எமது தெய்வம் எமது தெய்வம் என்று கலகக் குரல் எழுப்பிச் சமூக அமைதியைக் கெடுக்கும் இவர் களிடையே வள்ளலார் சமயச் சார்பின்மையை எப்படி வெளிப்படுத்துகிறார் என்று இப்பாடல் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

"பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல்என் கின்றாய்
அருகர்புத்தர் ஆதிஎன்பேன் அயன்என்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன் ஆதிசிவம் என்பேன்
பருகுசதா சிவம்என்பேன் சத்திசிவம் என்பேன்
பரமம்என்பேன் பிரமம்என்பேன் பரப்பிரம்மம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம்என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பேன்இவை சித்து விளையாட்டே!"
(6:5801)

நாயகன்-நாயகி பாவனையில் எல்லாக் கடவுளர் களையும் இணைக்கும் வள்ளலாரின் நேர்த்தி இன்றைய காலச்சூழலுக்கு மிகவும் தேவையானது.

சமய நல்லிணக்கத்தையும் சாதி ஒழிப்பையும் வலியுறுத்தி வந்த பெரியார் அதனால்தான் வினவினார்:

"இராமகிருஷ்ணரைப் போற்றும் அன்பனே! சிந்தித்துப் பார். உன் இராமலிங்கம் எந்தவிதத்தில் அவரைவிடத் தாழ்ந்தவர்? அவரை எந்த வடநாட்டா னாவது போற்றக் கண்டுள்ளாயா?"

சாமி. சிதம்பரனார் தெரிந்தெடுத்த நூறு வள்ளலார் பாடல்களைப் பெரியார் குடியரசு இதழில் வெளியிட்டது புதிய செய்தியன்று.

பாவேந்தர் மிக எளிய வினாவொன்றையும் விடுத்தார்:

"சொற்கோவில் நற்போற்றித்
திருஅகவல் செந்தமிழில் இருக்கும்போது
கற்கோயில் உள்புறத்தே
கால்பதித்ததெவ்வாறு!"

'சுயமரியாதை' என்பதனைக் கொள்கையாய்க் கொண்ட தமிழர்கள் வள்ளலாரின்பால் மிகுந்த ஈர்ப்பு டையவர்களாக இருந்திருக்கின்றார்கள்; இன்னும் இருக்கிறார்கள்.

அதேபோல, சைவத்தின்பால் ஈடுபாடு கொண்டிருந்த திரு.வி.க. சுயமரியாதை இயக்கத்தின் வேர்களை வள்ளலாரின் சன்மார்க்க இயக்கத்தினின்று தேடியுள்ளார். சைவப் பெரியாரான மறைமலையடிகள் வள்ளலாரின் பக்கத்தில் நின்றவர். தனித்தமிழ்இயக்கம் உருவாகவே வள்ளலார்தான் காரணம் எனக் கூறியவர்.

தமிழறிஞர் செய்குதம்பிப் பாவலர் வள்ளலாரின் மரணமில்லாப் பெருவாழ்விற்கு அளித்த விளக்கம் காலத்தை வென்று நிற்கக் கூடியது.

மேற்காண் தகவல்களினடிப்படையில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய செய்தி ஒன்றுளது.

இவர்கள் அனைவரும் ஒரு புள்ளியில் இணைந் துள்ளனர். அப்புள்ளி 'தமிழர்கள்' என்று அனைவரை யும் இணைக்கிறது. தமிழ்மக்கள் அனைவரும் சாதி,

மதங் கடந்து தமிழர்களாய் ஒருங்கிணைய வேண்டும் என்று சொல்கிறது.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் எழுதிய கவிதை இக்கட்டுரைக்கு முத்தாய்ப்பாய் அமையும்.

“சாதி பேதங்களை
சமய விரோதங்களை
சமூகக் கேடுகளைச் சாடும்
அருட்பா வரிகளில் எல்லாம்
ஆடி அசைகிறது
பெரியாரின் தாடி!
ஆம் – அருட்பா செய்கிறது
புரட்சிக்கு அறிமுகம்.
கருணை இல்லா ஆட்சி
கடுகி ஒழிக என்று
பாடும்போது, கைகட்டி நிற்கும்
வள்ளலார் கைகள் கலகக்!
கொடியை உயர்த்துகின்றன.
தமிழனுக்கு இரண்டு கண்கள்
ஒன்று சைவம் வடலூரார்
மற்றொன்று அசைவம் ஈரோட்டார்
இருகண்களும் உள்ள தமிழனுக்கு
இதயம் வள்ளுவம்!”

## 22.7.2023 அன்று மறைந்த
## கி.வெற்றிச்செல்வன் இல்லம்
## சென்று ஆறுதல் கூறுதல் நிகழ்வு



22.07.2023 அன்று மறைவுற்ற தோழர் கி. வெற்றிச் செல்வன் அவர்கள் உ.த.க.வின் முதன்மொழி இதழுக்கு பொறுப்பேற்று நடத்தி வந்தார். அதற்கு முன்பு புலவர் கி.த. பச்சையப்பன் அவர்களைக் ஆசிரியராகக் கொண்டு தமிழ் உரிமைக் கூட்டமைப்புக்காக நடத்தப்பட்ட தமிழியக்கம் இதழையும் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிட்டு வந்தார். சிந்தனையாளன் அலுவலகத்திலும் சிறிது காலம் பணியாற்றினார்.

தோழர் வாலாசா வல்லவன் அவர்கள் கோலார் தங்கவயலில் உள்ள மறைந்த தோழர் கி.வெற்றிச் செல்வன் அவர்களின் இல்லம் சென்று 24.11.2023 அன்று அவர் படத்திற்கு மாலை அணிவித்து, உறவினர்களிடம் ஆறுதல் கூறினார். உ.த.க. தோழர்கள் உடன் வந்தனர்.


வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பில் வாணியம்பாடியில்

## தந்தை பெரியார் 145ஆம் பிறந்தநாள்
## ஏன் ஒழிக்கப்பட வேண்டும் பார்ப்பனிய சனாதனம் பொதுக்கூட்டம்



திருப்பத்தூர் மாவட்ட வாழ்வுரிமை கூட்டமைப்பு சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் தோழர் ந.வேலு தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் திருப்பத்தூர் மாவட்ட துணை செயலாளர் தோழர் இரா.பகுத்தறிவாளன் வரவேற்புரை யாற்றினார். பெரியாரியத்தை உயர்த்தி பிடிப்போம் சனா தனத்தை வீழ்த்துவோம் என்ற தலைப்பில் மக்கள் தமிழகம் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நா.செவ்வேள் அவர் களும், ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற தலைப்பில், இந்திய பொதுவுடைமைக் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் தோழர் இரா.முல்லை அவர்களும், சட்டவிரோதமாக திருத்தப் பட்ட முப்பெரும் குற்றவியல் சட்டம் என்ற தலைப்பில் தமிழ் நாடு தொழிற்சங்க நடுவத்தின் பொதுச் செயலாளர் தோழர் உரூபன் அவர்களும், பாம்செப் அமைப்பின் தமிழ்நாடு செயல்தலைவர் தோழர் கசேந்திரன் அப்பாதுரை அவர்களும், வர்ணாசிரமம் வழிகாட்டும் விசுவகர்மா திட்டம் என்ற தலைப்பில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் நா.மதனகவி ஆகியோர் உரை யாற்றினார்கள். இறுதியாக தோழர் கா.புருசோத்தமான் அவர்கள் நன்றி யுரையோடு கூட்டம் நிறைவுற்றது.

## காஞ்சிபுரம் தீ.லலிதாம்பாள் மறைவு



காஞ்சிபுரம் மா.பெ.பொ.க. மாவட்டத் துணைச் செயலாளர் தீ. கோபாலகிருட்டிணன், தீ.கௌதமன், தீ.பாஸ்கரன், தீ.பாலகுகன், தீ.ரமாபாய் அவர்களின் தாயார் தீ.லலிதாம்மாள் அவர்கள் 11.11.2023 அன்று மறைவுற்றார். மா.பெ.பொ.க. தோழர்கள் சி. நடராசன், சா. குப்பன், வாலாசா வல்லவன், மோ.சி. சங்கர், க.குப்புசாமி, இரா. நாராயணமூர்த்தி ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

# இந்தியாவில் இந்துத் திருமணச் சீர்திருத்தத்தில்

# ஒரு மைல்கல்



- எஸ். ஆனந்தி
எஸ். சூரியா

1967ஆம் ஆண்டு இந்துத் திருமணச் (தமிழ்நாடு திருத்த) சட்டம் (சுயமரியாதைத் திருமணம்) சட்ட மாக்கப்பட்டு 56 ஆண்டுகள் ஆகின்றன. 1953-ஆம் ஆண்டில் சிதம்பரம் செட்டியார் எதிர் தெய்வானை வழக்கில் இந்துத் திருமணச் சடங்குகளைச் செய்யாமல் நிகழ்த்தப்பட்டத் திருமணம் என்பதால் சட்டப்படிச் செல் லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேற்சுட்டிய சட்டத்தின்படி ஏற்கத்தக்க சுயமரியாதைத் திருமணம் நிகழ்த்திக் கொண்ட தமிழ்நாட்டு இளைஞர் இளவரசன் தன்னுடையத் திருமணத்தை இப்போதும் (05.05.2023இலும்) செல்லாது என்று அதே சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் என்று நினைத்திருக்க மாட்டார்.*

சுயமரியாதைத் திருமணத்தை ஆதரிக்கும் சட்டம் உள்ள இப்போதைய நிலையில் எதிர்ப்பு எழுவதற்கும் இந்துக்களிடையே சடங்குகளற்ற முற்போக்குச் சீர்திருத்தச் சட்டம் சென்னை மாகாணத்தில் இல்லாத நிலையில் 1953இல் எதிர்ப்பு இருந்ததற்கும் அடிப்படையில் வேறு பாடு உண்டு. நீதிபதிகள் மநுஸ்மிருதியை மேற்கோள் காட்டி, இந்துத் திருமணச் சட்டத்தின்படி முறையாக திருமணத்தை புரோகிதர் நடத்தி வைத்தலும் மணஇணையர் ஏழு அடிகள் (சப்தபதி) ஒன்றாக எடுத்து வைத்தலும் தேவையாகும். இந்துவாகத் தங்களைக் கருதுபவர்களி டையே நடைபெறும் சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படிச் செல்லாதவை என்று 1953, ஆகஸ்டு 28 அன்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். மேலும் இந்துச் சட்டத் திற்கு இணக்கமாக நடக்காததாலும் இத்திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டவை அல்ல என்பதாலும் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் இந்துச் சட்டத்தின்கீழ் சட்டப்படி யானவர்கள் அல்ல என்றும் தீர்ப்பில் கூறினர்.

1958இல் மற்றுமொரு வழக்கில், செல்லையா என்பவருடன் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்ட இராசாத்தி பிரிந்திருந்ததால், இணையர் சேர்ந்து வாழும் உரிமையை மீட்டுத் தருமாறு நீதி மன்றத்தை நாடினார். 1955ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தின்படி அவர்களின் திருமணம் செல்லாது என்பத னால் திருச்சி மாவட்ட நீதிமன்றம் இராசாத்தியின் உரிமையை மறுத்துவிட்டது. மாறாக, சட்ட விரோதமான திருமணம் செய்து வைத்து, அந்த இளம்பெண்ணை இந்த அவல நிலைமைக்கு ஆளாக்கியதாக நீதிமன்றம் சுயமரியாதை இயக்கத்தைப் பழிதூற்றியது. நீதித் துறையின் இத்தகுக் கண்ணோட்டமானது அவ்விணை யரின் சேர்ந்து வாழும் உரிமையை மறுப்பதில் முடிந்தது.

நீதிமன்றங்களில் இதுபோன்ற விளக்கங்கள் சீர்திருத்தத் திருமணங்களுக்குள்ள நன்மதிப்பைக் கெடுப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். பெரும்பாலும் சாதி மறுப்புத் திருமணங்களாகவே நிகழ்த்தப் பெறும் இவை பெண்களின் உரிமைகளைக் காப்பதையும் தோழமையை வளர்ப்பதையும் இலக்காகக் கொண்ட வையாகும். இந்த மாதிரித் தீர்ப்புகளால் நீதித்துறையும் பிராமண இந்துக்களும் நடைமுறையில் உள்ள சுய மரியாதைத் திருமண முறையைச் சிறுமைப்படுத்திட இத்தகையத் திருமணங்களை மேற்கொள்ளும் பெண் களை வைப்பாட்டிகள் எனவும் பிறக்கும் பிள்ளைகள் முறைகேடாகப் பிறந்தவர்கள் எனவும் முத்திரைக் குத்து வதற்கு வித்திட்டது. இந்துத் திருமண வழக்கங்களுக்கு மாற்றாகத் திராவிடக் கருத்துகளைக் கொண்ட புரோகித மறுப்புத் திருமண நடைமுறைகளை எதிர்கொள்ள தங்கள் பிடியில் உள்ள மேலாதிக்க இந்துத் திருமண வழக்கங்களைக் காப்பாற்ற எப்படி நீதித் துறையில் உள்ள சிலர் அணிதிரண்டுள்ளனர் என்பதை மேற்படித் தீர்ப்புகள் மூலம் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

## சுயமரியாதை இயக்கத்தின் ஓர் அடிப்படை

இந்துத் திருமணங்களின் அனைத்து மரபுகளும் வழக்காறுகளும் குறிப்பாகப் பார்ப்பனப் புரோகிதமும் சாதிய மேலாதிக்கத்தையும் ஆண்களின் ஆணாதிக்கத் தையும் நிலைநிறுத்துவதாக உள்ளது என்பது சுயமரி யாதை இயக்கத்தின் முக்கியக் கூற்றாகும். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் உறவை மேற்கொள்வது எந்தச் சமய வழக்கங்கள் படியும் இணங்கி வாழ்ந்தாக வேண்டும் என்றில்லாமல் பிரிந்து கொள்ளக் கூடிய உரிமையுடைய ஒப்பந்தம் என்பதைச் சுயமரியாதை இயக்கம் வலியுறுத்துகின்றது.

இந்து ஆண்கள் இருதார மணம் புரிந்து கொண்டி ருந்தச் சூழலில் சுயமரியாதை இயக்கம் அனைத்துத் திருமணங்களும் பதிவு செய்திடல் வேண்டும் என்பதையும் பெண்கள் மணமுறிவு பெறும் உரிமையும் மறுமணம்

* குறிப்பு : திருமண வயதை எட்டிய இளவரசன்-மதித்ரா இருவரும் மனம் ஒத்து சான்றினர் முன்னிலையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும் அத்திருமண நிகழ்வு பலர் முன்னிலையில் விழாவாக நிகழாமல் வழக்குரைஞர் அலுவலகத்தில் நிகழ்த்தப்பட்டதால், செல்லாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

செய்துகொள்ளும் உரிமையும் சொத்தில் பங்கு கோரிடும் உரிமையும் இருத்தல் வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது. ஆனால் நீதிமன்றமோ நேர்மாறாக சுயமரியாதைத் திருமணத்தை ஏற்க மறுத்து, இராசாத்தியின் சேர்ந்து வாழும் உரிமையையும் மறுத்துவிட்டது. 1967ஆம் ஆண்டு இந்துத் திருமணத் திருத்தச் சட்டம் சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட ஏற்புக்கு வழிசெய்த பின் மீண்டும் 1969இல் இராசாத்தி சேர்ந்து வாழும் உரிமையை மீட்டிட, புதிதாக விசாரணைக் கோரி, அதில் வெற்றியும் பெற்றார்.

### ஒரு போராட்டம்

சென்னை மாகாணத்தில் திராவிடர் இயக்கத்தின் நெடிய போராட்டத்தின் விளைவாக இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல் அனைத்திந்திய அளவிலும் இந்துச் சட்ட முன்வரைவு உருவானது. 1944இல் பி.என். ராவ் தலைமையில் இந்துச் சட்டக் குழுவினர் (Hindu Law Committee) இந்துச் சட்ட வரைவினை உருவாக்குவதற்காக அனைத்து மாகாணங்களுக்கும் சென்று சான்றுகளைத் திரட்டினர். அப்போது அக்குழுவினரிடம் திராவிட இயக்கத் தலைவர்களும் செயல்வீரர்களும் எழுத்து மூலமாகவும் வாய்மொழியாகவும் சான்றுகளை அளித்தனர். அவற்றில் இந்துச் சட்டத்தில் சிறிது, சிறிதாக மாற்றம் என்றில்லாமல் பொதுவாக இந்துப் பெண்கள் தொடர்புடைய அனைத்துச் சட்ட உரிமைகளும் அடங்கியதாக இந்துச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தனர்.

**சுயமரியாதை இயக்கத்தவரான குஞ்சிதம் குருசாமி அவர்கள் இந்து என்ற வரையறையில், தங்களை இந்து என்று ஒத்துக்கொள்ளாதவர்களையும் மதமற்றவர்களையும் புதிய இந்துச் சட்டத்தில் தனியாக அங்கிகரிப்பது தேவையாகும் என்றும் அப்படி இல்லாமல் எல்லோரையும் இந்து என்று வரையறுப்பது முழுமையானது அல்ல என்றும் எடுத்துரைத்தார்.**

இவரின் இந்தக் கோரிக்கைகளை 1947ஆம் ஆண்டு ராவ் குழு அறிக்கையில் ஏற்றுக்கொள்ளாதது வருந்தத்தக்க ஒன்று ஆகும். ஆனால் அந்தக் குழுவினரின் அறிக்கையில் வீரசைவ, பிரம்ம சமாஜ, ஆரிய சமாஜ, பிரார்த்தனை சமாஜ திருமண முறைகளை அங்கீகரித்துச் சட்டத்தில் உறுதி செய்தது; இதன் காரணமாக 1955 இந்துத் திருமணச் சட்டத்தில் மேற்கூறியுள்ள சீர்திருத்தத் திருமணங்களுக்குச் சட்ட ஏற்பளிக்கப்பட்டது.

1955ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டம் பிரிவு 7இல் இந்துச் சமயச் சடங்குகளையும், 'சப்தபதி' (இணையர் 7 அடிகள் சேர்ந்து நடத்தல்) உள்ளிட்டச் சடங்குகளையும், வழக்கமான சடங்குகளையும், 'தாலி கட்டுதல்' போன்ற வழக்காறுகளுக்கு



மட்டும் முக்கியத்துவம் அளித்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது; சடங்குகளற்ற மற்றும் புரோகித மறுப்பு இந்து வாழ்க்கைத் துணை ஒப்பந்தத் திருமணங்களை அங்கீகரிக்கவில்லை. சுயமரியாதைத் திருமணங்கள் 1954ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்திடல் வேண்டும் என்பதே நாடாளுமன்றமும் நீதித்துறையும் அளித்த ஒருமுகமான பதிலாகும். இத்திருமண இணையரின் சொத்துரிமைப் பற்றியும் இந்துக் கூட்டுக் குடும்பத்திலிருந்துப் பிரிந்து வாழ்பவர்களுக்கு மூதாதையர் சொத்தில் உரிமை மறுப்புப் பற்றியும் கருத்தில் கொள்ளாமலே நாடாளுமன்றத்தில் இச்சிறப்புத் திருமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

சிதம்பரம் செட்டியார் எதிர் தெய்வானை வழக்கில் காங்கிரசுக் கட்சித் தலைமையிலான அப்போதைய சென்னை மாகாண அரசுக்குச் சுயமரியாதைத் திருமணங்களை முறைப்படுத்திடச் சட்டமியற்றிடுமாறும் சமயச் சார்பற்றத் திருமண முறையைப் பின்பற்றும் இந்துக்களின் சொத்துரிமையைப் பாதுகாக்குமாறும் சென்னை உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தது. 1953இல் சென்னை மாகாண அரசு '1954ஆம் ஆண்டு இந்துத் திருமண மரபைப் பின்பற்றாதத் திருமணச் சட்ட முன்வரைவை' அறிமுகப்படுத்திடத் தீர்மானித்தது. ஆனால் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருந்த நிலையில் 1954ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தில் சுயமரியாதைத் திருமணங்களையும் உள்ளடக்கி இருப்பதால் இச்சட்டம் தேவையில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் மசோதா திரும்பப் பெறப்பட்டது.

1959ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம்.அண்ணாமலை 'சென்னை சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்கும் சட்ட முன்வரைவை'-கடந்த காலத்தில் நடந்தத் திருமணங்களுக்கும் சட்ட ஏற்பளிக்கும் வகையில் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். இச்சட்ட முன்வரைவை காங்கிரசுக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்த்ததாலும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி உறுப்பி

னர்களும் பிரஜா சோசலிஸ்டுக் கட்சி உறுப்பினர்களும் நடுநிலை வகித்ததாலும் சட்ட முன்வரைவுத் தோல்வி அடைந்தது.

1965ஆம் ஆண்டு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாதவன் இந்துச் சட்டத்தின்கீழ் சுயமரியாதைத் திருமணங்களுக்கு அங்கீகரிப்பும் இந்துத் திருமணச் சட்டத்தின்கீழ் செல்லத்தக்கத் திருமணங்களாகச் செய்திடும் நோக்கத்தில் ஒரு சட்டமுன்வரைவைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்தார். இந்தத் திருமணங்கள் சட்டப்படிச் செல்லாதவை என்பதால் இம்முறையில் திருமணம் செய்து கொண்ட மனைவியானவர் பாதகமான விளைவு களுக்கு உள்ளாகின்றார் என்று தி.மு.க. எடுத்துரைத்தது. மணவிலக்குப் பெறுவதற்கான உரிமை பெண்களுக்கு வேண்டும் என்பதையும் இருதாரச் சிக்கல் எழும் போது தீர்வு பெறுவதற்கு வாய்ப்பு வேண்டும் என்ப தையும் நோக்கமாகக் கொண்டே தி.மு.க. சுயமரியாதைத் திருமணங்களுக்கு இந்துச் சட்டத்தின்கீழ் சட்ட அங்கீகாரம் கோரிற்று. ஆனால் அந்தச் சட்ட முன்வரைவு சட்டமா காமல் போனது.

1967 தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்ததும் இந்துத் திருமணச் சட்டத்தின்கீழ் 'பிரிவு 7அ' ஆக 'இந்துத் திருமண (தமிழ்நாடு திருத்த)ச் சட்டம் 1967' என சட்ட முன்வரைவு சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது. இந்தச் சட்டம் சடங்குகளற்ற இந்துத் திருமணங்கள் அனைத்தும் செல்லத்தக்கன என்று ஆக்கியது; இந்துத் திருமணத்திற்குப் பார்ப்பனப் பொருள் விளக்கங்களைக் கேள்விக்குள்ளாக்கியது.

**இப்போதும் உள்ளத் தடங்கல்கள்**

ஒன்றிய அரசையும் அதேபோல நீதித் துறையையும் (அண்மை ஆண்டுகளில்) தொல்லைப்படுத்தும் அளவிற்கு மேற்கூறிய சட்டத் திருத்தம் முற்போக்கானதாக உள்ளது. உயர்நீதித்துறை இந்தச் சட்டத் திருத்தத்தின் செல்லத்தகு நிலையைத் தள்ளுபடிச் செய்யவோ, சட்டத் திருத்தத்திற்கு பொருள் விளக்கவோ அல்லது சடங்குகளின்றியும் சாதி மறுத்தும் கருத்தொருமித்து நிகழும் திருமணங்களை ஊக்கமிழக்கச் செய்யவோ இயலாமல் குழம்புகிறார்கள் என்பது தெள்ளத்தெளி வாகப் புலனாகிறது.

இரண்டு எடுத்துக்காட்டுகள் மேலே கூறியுள்ளதைப் புலப்படுத்தும். 2017ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகம் சாதி மறுப்புத் திருமணம் புரிந்துகொண்ட இணையர்க்கு அளிக்கவிருந்த பரிசு/விருது பெறுவதற்கு தமிழ்நாட்டில் இருந்து விண்ணப்பித்தார்கள்; விண்ணப்பித்தவர்கள் இந்துத் திருமணச் சட்டம் பிரிவு 7இன்படி சுயமரியா தைத் திருமணம் செய்துகொண்ட இணையர்கள்; இவர்கள திருமணங்கள் 1955ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தின்கீழ் பதிவு செய்திடவில்லை என்ற காரணத்திற்காக அங்கீகரிக்காமல் அவ்விண்ணப் பங்கள் மறுக்கப்பட்டன. தமிழ்நாட்டுச் சட்டத்தை ஏற்க மறுத்த ஒன்றிய அரசின் அமைச்சகத்திற்கு அச்சட்டம் செல்லுபடியாகத்தக்கது என்பதைச் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளைத் தெளிவூட்டியது.

மத வழக்கப்படி நிகழ்த்திக் கொள்ளாவிட்டாலும் பொது நிகழ்வாக இல்லாவிடினும் உறவினர்கள், நண் பர்கள், மற்றவர்கள் முன்னிலையில் திருமணத்தை அறிவித்தால் தமிழ்நாட்டில் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணம் செல்லத்தக்கது என 29.08.2023 அன்று உச்சநீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றத்திற்கு நினைவூட்டியது. எவ்வாறாயினும் நினைவில் நிறுத்த வேண்டியது ஒன்று; அதாவது தமிழ்நாட்டில் பெண் களுக்குச் சட்டப்படியான சீர்திருத்தங்களின் ஒட்டு மொத்தத் தாக்கம் சென்னை உயர்நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்புகள் பலவற்றில் வெளிப்பட்டது. மேலும் சென்னை உயர்நீதிமன்றம் இந்தியாவில் உள்ள மற்ற நீதிமன்றங் களைவிட பாலின உரிமைகளைக் காப்பதில் மிகவும் முற்போக்கான தீர்ப்பினை வழங்கியுள்ளது. அதாவது இந்துத் திருமணச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட திருநங்கையர், திருநம்பியர் (transgender) திருமணத்தை ஏற்றுக்கொண்டு அளித்தத் தீர்ப்பு முன்னோடியானத் தீர்ப்பு ஆகும்.

(29.09.2023 The Hindu நாளேட்டில் வெளியான கட்டுரை
தமிழில் : **சா.குப்பன்**

(இக்கட்டுரை ஆசிரியர்கள் எஸ். ஆனந்தி, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் மேனாள் பேராசிரியர். எஸ். சூரியா, சென்னை சமூகப் பணி பள்ளி எனும் தன்னாட்சிக் கல்லூரியில் உதவிப் பேராசிரியர்)

❖


## கோலார் தங்கவயலில் கலந்துரையாடல் கூட்டம்



24.11.2023 அன்று கோலார் எழில் மகிழ்நன் - ம.காமினி (எ) மகிழினி திருமணம் நிகழ்ந்த திருமணக்கூடத் தில் முற்பகல் 11 மணிமுதல் 1 மணிவரை கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. உ.த.க. தோழர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். தி.க., அம்பேத்கர் இயக்கம் க.த.ம.இ. தலைவர் சி.இராசன், உ.த.க. செயலாளர் துரைச்செல்வன் நிகழ்வை ஒருங்கிணைத்தார். இக்கலந்துரையாடல் நிகழ்வில் வாலாசா வல்லவன் பங்கேற்றார்.

# வாச்சாத்தி வன்கொடுமை வழக்கின் தீர்ப்பு

## வரலாறு படைத்த பழங்குடியினப் பெண்கள்



- க. முகிலன்

வாச்சாந்தி வன்கொடுமை வழக்கில் 215 அரசு அலுவலர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உறுதி செய்து சென்னை உயர்நீதிமன்றம் 30.9.2023 அன்று தீர்ப்பளித்தது. சுதந்தர இந்தியாவில் அரசு அலுவலர்கள் இத்தனை பேர் ஒரே சமயத்தில் தண்டிக்கப்பட்டதில்லை. சமுதாயத்தின் கடைக்கோடியில் வாழும் எளிய பழங் குடியினப் பெண்கள் மீது முப்பது ஆண்டுகளுக்குமுன் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்கொடுமைகள், தாக்குதல் களுக்காகத் தொடுக்கப்பட்ட வழக்கில் வர லாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.




தருமபுரி மாவட்டம், அரூர்-பாப்பிரெட்டிப் பட்டி இடையே கல்வராயன் மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது வாச்சாத்தி எனும் சிற்றூர். வாச்சாத்தி மக்கள் சந்தன மரங்களை வெட்டிப் பதுக்கி வைத்துள்ள னர் என்கிற செய்தியின் அடிப்படையில் 1992 சூன் 20 அன்று வனத்துறையினர் 155 பேர், காவல் துறையினர் 108 பேர், வருவாய்த் துறையினர் 6 பேர் என மொத்தம் 269 பேர், 665 பேர் வாழும் வாச்சாத்தியை முற்றுகையிட்டனர்.

இத்தனை பேர் ஊர்திகளில் வருவதைக் கண்டதும் வாச்சாத்தியில் இருந்த ஆண்கள் ஓடிப்போய்க் காடு களில் பதுங்கிக் கொண்டனர். பெண்களைத் தாக்க மாட்டார்கள் என்று அவர்கள் நம்பினர். ஆனால் காவல்துறையினரும் வனத் துறையினரும் வீடுகளுக்குள் புகுந்து பண்டம் பாத்திரங்களையெல்லாம் அடித்து உடைத்தனர். 90 பெண்கள், 28 சிறுவர்கள், 15 ஆண்கள் என 133 பேரை ஊரின் நடுவில் உள்ள ஆலமரத்தடிக்கு இழுத்து வந்தனர். அவர்களில் 18 இளம்பெண்களைத் தேர்வு செய்து, பதுக்கி வைக்கப் பட்டுள்ள சந்தன மரக்கட்டைகளைக் காட்டுவதற்காக என்று கூறி, அப்பெண்களை ஊர்தியில் ஏற்றி ஏரிக் கரைப் பக்கம் அழைத்துச் சென்றனர். பெண் காவலர்கள் தாங்களும் உடன் வருவதாகக் கூறினர். ஆனால் ஆண் அதிகாரிகள் வேண்டாம் என்று மறுத்துவிட்டனர்.

18 பெண்களையும் மாறி, மாறி கூட்டு வன்புணர்வு செய்தனர். எட்டாம் வகுப்புப் படிக்கும் 13 அகவை சிறுமி, ‘அய்யா, நான் பள்ளியில் படிக்கிறேன்; என்னை விட்டுவிடுங்கள்’ என்று கதறி அழுத போதும், கொடிய விலங்கு மனம் கொண்ட அதிகாரிகளின் மனம் இரங்க வில்லை. எட்டு மாதம் கருவுற்றிருந்த பெண்ணையும் அந்த விலங்குகள் விட்டுவைக்கவில்லை. அச்சுறுத்தவும், இழிவுபடுத்தவும், பழிவாங்கவும் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கும் ஆணாதிக்க மனப்போக்கு, சட்டம் ஒழுங்கையும் மக்களையும் காக்க வேண்டிய அரசு அலுவலர்களிடம் இருப்பது இந்திய சனநாயகத் திற்கே இழுக்காகும்.

அடுத்த நாள் 90 பெண்களையும், 15 ஆண்களை யும் அரூர் வனத்துறை அலுவலகத்தில் அடைத்து வைத்தனர். ஊர்க் கவுண்டர் என்று அழைக்கப்பட்ட வாச்சாத்தி சிற்றூரின் தலைவரை அங்கிருந்த பெண் களின் ஆடைகளைக் களையுமாறு கட்டாயப்படுத்தினர். பிறகு அப்பெண்கள் ஊர்க் கவுண்டரைத் துடைப்பத்தால் அடிக்கச் செய்தனர். வாச்சாத்தியின் பழங்குடியினரை இவ்வாறு கொடுமைப்படுத்தியது ஏன்?

வாச்சாத்திக்கு அருகில் கலசம்பாடி என்கிற சிற்றூர் உள்ளது. வனத்துறையினரும் அ.தி.மு.க.வினர் சிலரும் கூட்டுச்சேர்ந்து சந்தன மரங்களை வெட்டிக் கடத்தி வந்தனர். கூலிக்கு சந்தன மரத்தை வெட்டும் வேலையில் கலசம்பாடி ஆட்களும் வாச்சாத்தியில் சிலரும் இருந்தனர். இவ்வாறு வெட்டி ஏற்றி அனுப்பப்பட்ட சந்தன மரங்களில் 30 முதல் 60 டன் சந்தன மரங்கள் கணக்கில் வரவில்லை. இந்த மரங்கள் வாச்சாத்தியில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்கிற செய்தியின் அடிப்படையில்தான் 269 அரசு அலுவலர்கள் வாச்சாத்தி யை முற்றுகையிட்டுத் தாக்கினர்.

1992 சூன் 20, 21, 22 ஆகிய மூன்று நாட்களும் வனத்துறையினரும் காவல் துறையினரும் வாச்சாத் தியில் தங்கி பல அட்டூழியங்களைச் செய்தனர். கோழி, ஆடுகளை வெட்டி சமைத்து உண்டனர். வீடுகளில் இருந்த அரிசியுடன் மண்ணெண்ணையைக் கலந்தனர். கிணறுகளில் ஆடு, கோழிகளின் கழிவுகளைக் கொட்டினர். பல வீடுகளை இடித்தனர்.

அச்சமயத்தில் தமிழ்நாடு மலைவாழ் பழங்குடியினர் சங்கம் என்பது அமைக்கப்பட்டிருந்தது. அது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் துணை அமைப்பாக இருந்தது. இச்சங்கத்தின் தலைவர் சண்முகத்திற்கு பல நாட்கள் கழித்துதான் வாச்சாத்தியில்நடந்த கொடுமை தெரிய வந்தது. சண்முகம் 1992 சூலை 14 அன்று வாச்சாத் திக்குச் சென்று அக்கொடுமைகளைக் கேட்டறிந்தார். அரூர் காவல் நிலையத்துக்குச் சென்று இதுகுறித்து புகார் அளித்தார். ஆனால் காவல்துறை அதை ஏற்க மறுத்துவிட்டது.

அதன்பின், பழங்குடியினர் சங்கத் தலைவர் சண்முகம், மாநிலங்களவை உறுப்பினராக இருந்த நல்லசிவம், இந்திய சனநாயக மாதர் சங்கத்தின் தலைவராக இருந்த மைதிலி சிவராமன் ஆகியோர் வாச்சாத்தி வன்கொடுமை குறித்து அப்போது முதலமைச்சராக இருந்த செயலலிதா வுக்கு தனித்தனியே மடல் எழுதினர். கருணை மிகுந்த தாயுள்ளத்துடன் செயலலிதா அதன்மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்டப் பேரவையில் வாச்சாத்தி வன்கொடுமை குறித்து வினா எழுப்பிய போது, வனத்துறை அமைச்சராக இருந்த செங்கோட்டையன், 'சந்தன மரக்கடத்தலைத் தடுக்கவே அரசு அலுவலர்கள் வாச்சாத்திக்குச் சென்றனர். சந்தன மரக் கடத்தல்காரர்கள் வேண்டுமென்றே பாலியல் வன்கொடுமை நடந்ததாக இட்டுக்கட்டிக் கூறுகின்றனர்' என்று முழுப்பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பது போல் கூறினார்.

வாச்சாத்தி வன்கொடுமையைக் கண்டித்து 1992 செப்டம்பர் 24 அன்று சென்னையில் குறளகம் எதிரில் பெண்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. வாச்சாத்தியிலிருந்து 60 பெண்கள் இதில் பங்கேற்றனர். அ.தி.மு.க. ஆட்சி எதற்கும் அசையவில்லை. அதனால் பழங்குடியினர் சங்கத்தின் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வாச்சாத்தி வன்கொடுமையை வழக்காக விசாரிக்கக் கோரி விண் ணப்பம் அளிக்கப்பட்டது. அப்போது உச்சநீதிமன்றத்தின் முதலாவது பெண் நீதிபதியாக அமர்த்தப்பட்ட நீதிபதி பத்மினி ஜேசுதுரை முன் இது விசாரணைக்கு வந்தது. படித்துப் பதவியில் இருப்பவர்கள் இதுபோன்ற இழிசெயல் களில் ஈடுபடமாட்டார்கள் என்றுகூறி நீதிபதி பத்மினி ஜேசுதுரை அந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்து விட்டார். இது வெள்ளையாக இருப்பவன் பொய்ப் பேசமாட்டான் என்பது போன்றதாகும். கீழ்வெண்மணி வழக்கின் தீர்ப்பிலும் பண்ணையார் தலித்துகள் வாழும் சேரிப் பகுதிக்கு வந்து குடிசைக்குத் தீயிட்டிருக்க மாட்டார் என்று கூறப்பட்டது.



இந்நிலையில் ஒரு திருப்புமுனை நிகழ்ந்தது. இந்திய சனநாயக மாதர் சங்கம் வாச்சாத்தி வன்கொடுமை குறித்து விசாரிக்குமாறு பட்டியல் வகுப்பினர் - பழங் குடியினர் நலனுக்கான தேசிய ஆணையத்திற்கு எழுதிய மடலின் அடிப்படையில் அந்த ஆணையத்தின் தென்மண்டலத் துணை இயக்குனராக இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பாமதி வாச்சாத்திக்கு வந்து பாதிக்கப்பட்ட வர்களிடம் பேசி உண்மையை அம்பலப்படுத்தும் வகையில் அறிக்கை அளித்தார். இந்த அறிக்கையின் அடிப்படையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவையின் உறுப்பினர் ஏ. நல்லசிவம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். உச்சநீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்றத்தை விசாரிக்குமாறு ஆணை யிட்டது. அதன்பின் உயர்நீதிமன்றம் இதை சி.பி.ஐ. விசாரிக்குமாறு அறிவுறுத்தியது.

1995இல் சி.பி.ஐ. இதை வழக்காகப் பதிவு செய்தது. 1996இல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது. இந்த வழக்கு தருமபுரி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. இந்த வழக்கில் வாச்சாத்திக்கு 1992 சூன் 20 அன்று சென்ற அரசு அலுவலர்கள் 269 பேரும் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். வழக்கு விசாரணைக் காலத்தில் வாச்சாத்தியில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மலைவாழ் பழங்குடியினர் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைத்து வகையிலும் உறுதுணை யாக இருந்தனர். சங்கத்தின் தலைவர் சண்முகம் ஒவ் வொரு விசாரணை நாளிலும் நீதிமன்றத்தில் இருந்தார்.

**தமிழ்நாட்டு அரசின் முழு அரவணைப்பு இருந்த தால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி, குற்றஞ்சாட்டப்பட்ட அரசு அலுவலர்கள் தண்டனையிலிருந்து தப்பிக்க முயன்றனர். ஆனால் சி.பி.ஐ.இன் விசாரணை அதிகாரியாக அமர்த்தப்பட்ட காவல் துறை துணைக்**

**கண்காணிப்பாளர் ஜெகந்நாதன், சிறப்பு வழக்கு ரைஞர் ஜெயபாலன் ஆகியோர் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத்தர வேண்டும் என்பதில் நேர்மையுடனும் திறமையாகவும் செயல் பட்டனர்.**

இவ்வழக்கில் தருமபுரி மாவட்ட முதன்மை நீதிபதி எஸ்.குமரகுரு 2011 செப்டம்பர் 29 அன்று தீர்ப்பு வழங்கினார். குற்றம் சாட்டப்பட்ட 269 பேரில் அப்போது உயிருடன் இருந்த 215 பேருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. பாலியல் வன்கொடுமையில் 17 பேர் ஈடுபட்டதாக உறுதி செய்யப்பட்டது. அவர்களில் 12 பேருக்கு 10 ஆண்டுகள், 5 பேருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு 1 முதல் 3 ஆண்டுகள் வரை என்று சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

ஆனால் தண்டிக்கப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அ.தி.மு.க. ஆட்சியும், தி.மு.க. ஆட்சியும் காவல்துறை, வனத்துறை, வருவாய்த் துறை ஆகியவற்றின் உயர் அதிகாரிகளும் வாச்சாத்தியில் கைது செய்யப்பட்டவர்கள் சந்தன மரங்களை வெட்டிக் கடத்துவதையே தொழிலாகக் கொண்டவர்கள் என்பதால் அதைத் தடுக்கச் சென்ற அரசு அலுவலர்கள் மீது பாலியல் குற்றச்சாட்டைச் சுமத்துகின்றனர் என்கிற கருத்தை உயர்நீதிமன்றத்திலும் தொடர்ந்து வலியுறுத்தினர். ஆனால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு நீதி கிடைக்க வேண்டும்; குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதிப்பாட்டுடன் இருந்தனர். பழங்குடியினர் சங்கமும், சமூகச் செயற்பாட்டாளர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் பழங்குடியினப் பெண்களுக்கு உறுதுணையாகச் செயல்பட்டனர். மேலும் பத்து ஆண்டுகளுக்கு மேல் இவ்வழக்கு இழுத்தடிக்கப்பட்டது.

உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கின் விசாரணை முடிந்த பின், இவ்வழக்கை விசாரித்த நீதிபதி வேல்





முருகன் வாச்சாத்திக்குச் சென்று கள ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட பெண்களைச் சந்தித்து உரையாடினார். அதன்பின் 29.9.2023 அன்று உயர்நீதிமன்ற நீதிபதி வேல்முருகன், தருமபுரி மாவட்ட முதன்மை நீதிமன்றம் அளித்த தண்டனையை உறுதி செய்து தீர்ப்பு வழங்கினார். அத்தீர்ப்பில் நீதிபதி வேல்முருகன், **"உண்மையில் சந்தன மரங்களைக் கடத்துபவர்களையும் பெரும் புள்ளிகளையும் காப்பாற்றுவதற்காக வனத் துறையினரும், காவல் துறையினரும், வருவாய்த் துறையினரும் கூட்டுச் சேர்ந்து இந்த நாடகத்தை நடத்தி உள்ளனர். இதனால் ஏதுமறியாத அப் பாவிப் பழங்குடியினப் பெண்கள் பாதிக்கப்பட்டனர். தற்போது உயிருடன் உள்ள குற்றவாளிகள் அவர்களின் மீதமுள்ள தண்டனைக் காலத்தைச் சிறையில் கழிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.**


31 ஆண்டுகளுக்குப்பின் குற்றவாளிகள் தண்டிக்கப் பட்டு, நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது என்று வாச்சாத்தி மக்களும், முற்போக்கு அமைப்பினரும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் நீதிபதி வேல்முருகன் எழுதிய தீர்ப்பின் மை காய்வதற்கு முன்பே, தண்டிக்கப்பட்டவர்களுள் ஓய்வுபெற்ற இந்திய வனப்பணி அதிகாரி எல்.நாதன் உள்ளிட்ட 30 பேர் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். உச்சநீதிமன்ற நீதிபதி பங்கஜ் மித்தல் 10.11.2023 அன்று மேல்முறையீடு செய்த 30 பேரின் தண்டனையை நிறுத்தி வைத்து, அவர்களுக்குப் பிணை வழங்கி, சரணடைவதிலிருந்து விலக்கு அளித்து ஆணையிட்டுள்ளார்.

**ஆட்சி அதிகாரமும், எதையும் தன் விருப்பத்திற்கு ஏற்ப வளைக்கக் கூடிய செல்வாக்கும், பண வலிமையும் கொண்டவர்கள், எத்தகைய குற்றத்தைச் செய்தாலும், தம் வாழ்நாளில் அதற்கான தண்டனையைப் பெறாமல் தப்பித்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் இந்நாட்டின் அரசியலும், அதிகார அமைப்பும், நீதித் துறையும் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதே உண்மையாகும். ஆனால் இந்தக் கட்டமைப்பு ஏழை-எளிய மக்களை நசுக்கிப் பொசுக்கி வருகிறது.** ❖

# பெரியாரின் சிந்தனைப் பெருக்கு!



பேராசிரியர் **இரா. சோதிவாணன்**



மான் இடத்தில் புலிதனது பசிக்குப் பிச்சை
கேட்பதில்லை; மதத்தின்மீது
ஆணியடிக்கும் 'புரட்சி'க்கு
மதகோமன்களையே அலறவிட்டார்
வான் இடத்தில் கேட்டுவிட்டு முகில்கூட்டம்
பொழிவதில்லை; வையம்தன்னில்
கூன்விழுந்த மனத்தினரைக் கேட்டுவிட்டுப் (பெரியார்)
புரட்சிமழை கொட்டவில்லை.

தொடை இடையில் கற்பென்னும் கடும்பூட்டைப்
பெண்மட்டும் தாங்கவிட்டார்
கொடை விளைவாய்க் கருப்பைதனைப்
பிள்ளைபெறும்
எந்திரமாய்க் குலைத்துவிட்டார்.
இடைவிடாத புரட்சியாளர் பெரியாரே
வஞ்சமிதை இடித்துக்காட்டி
நடைமுறையில் கருப்பைதனை நீக்கிவிடப்
பெண்ணுரிமை நலம் விழைந்தார்.

வழிவிட்டு வழிவிட்டு ஆரியத்தின்
கால்பட்டுப் புழுங்கவிட்டு
மொழிவிட்டுக் கலக்கவிட்டுத் தனித்தமிழின்
சீர்கெட்டுப் போகவிட்டு
இழிபட்டுச் சாதிமதப் போர்க்களப்பட்டு
இந்நிலத்து மானுட வேர்கள்
அழிபட்டுத் தமிழ்நாடு பெரியாரின்
விழிபட்டுப் புரட்சி ஆர்க்கும்.

பாட்டாளி வேர்வையிலே விளைந்தவற்றைப்
பெருச்சாளிப் பார்ப்பனர்கள் உண்ண ஆகும்.
தீட்டாளி எனஅவரை ஒதுக்கிஇழி
கோடாளியால் வெட்டுவாராம்.
கூட்டாளி ஆன மனுநீதிப் பூணூலார்
கோலோச்ச மட்டும் தானாம்.
கட்டாளி அரிமாவே நரிகளுடைய
கயமைதனைச் சுட்டி வீழ்த்தும்.

மலைமுகட்டில் இருந்து வீழ்நீர்
அருவி மண்ணில் ஆறாய்ஓடி
இலை உதட்டின் மலர்முதல் மானிடவுடல்
உயிர்வரை ஈரம் ஊட்டும்
அலைபுகட்டும் 'அயராமைப் பாடம்போல்'
அடுக்கடுக்காய் பெரியார் தம்மின்
தலைமுகட்டில் இருந்துகொட்டும் சிந்தனைஅலை
திராவிடத்தில் உயிர்ப்பைப் பூக்கும்.

பேராசிரியர் த. செயராமன் அவர்கள் எழுதிய **தமிழ்த் தேசத்தின் எதிரி யார்?**

**தமிழ் இந்து : இந்துத்துவ இந்தியாவுக்கு இணக்கமான முன்னெடுப்பு**

## நூல் வெளியீட்டு விழா




பேராசிரியர் த. செயராமன் அவர்கள் எழுதிய தமிழ்த் தேசத்தின் எதிரி யார்? மற்றும் தமிழ் இந்து : இந்துத்துவ இந்தியாவுக்கு இணக்கமான முன்னெடுப்பு ஆகிய நூல்கள் வெளியீட்டு விழா மேடவாக்கம் பாவலரேறு தமிழ்க் களத்தில் 28.10.2023 காரி (சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. தோழர் பொழிலன் தலைமைத் தாங்கினார். காஞ்சி அமுதன் வரவேற்புரையாற்றினார். தோழர் கொளத்தூர் தா.செ. மணி நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். தோழர்கள் வன்னி அரசு, வாலாசா வல்லவன், மா.பூங்குன்றன், சீராளன், அமிர்தா ஆகியோர் உரையாற்றினர். பேரா. த. செயராமன் ஏற்புரையாற்றினார். தமிழக மக்கள் முன்னணி நிகழ்வை ஒருங்கிணைத்தது.

## புலவர் குறளன்பன் மறைவு



தன்வாழ்நாளெல்லாம் தந்தை பெரியாரின் கொள்கை வளர்ச்சிக்கு பாடுபட்டவரும், தனித்தமிழ், திராவிட இயக்கத்தில் பற்று கொண்டவருமான புலவர் குறளன்பன் (79) 23.11.2023 கோவை சூலூரில் இயற்கை எய்தினார். இவர் தமிழ் அறிஞர் புலவர் செந்தலை கவுதமன் அவர்களின் சம்மந்தியும் ஆவார். 1965ல் இந்தி எதிர்ப்பில் கலந்துகொண்டவர். இவரது மனைவி திருச்சி கலாவதி மகள் இசைஅமுது, மகன் இளந்தமிழன். சிந்தனையாளன் முதல் இதழில் ‘‘விழி,எழு, செயற்படு’’ திருக்குறளின் ஈர்ப்பால் கோவிந்தசாமி என்ற தன் இயற்பெயரை ‘‘குறளன்பன்’’ என்று மாற்றியவர். திருச்சி தமிழ்நாடு தனிப் பயிற்சி (T.N.T.C) கல்லூரியில் பணியாற்றியபோது அறிஞர் ஆனைமுத்து சொல்ல, சொல்ல ‘‘இந்திய அரசியல் சட்டம் ஒருமோசடி’ என்ற நூலை ஒரு வாரத்தில் தன் கைப்பட எழுதிகொடுத்தவர்.

1973இல் தமிழ்முனை என்ற மாத இதழையும், கவிஞர்மடல், ஈரோட்டு சிந்தனைகள், பெண்ணுரி மையும் பெரியாரும், கேள்விகணைகள், விடுதலைக் கேள்விகள், பெரியார் பாட்டு, பெரியார் பாவை, பாரதிதாசன் கேட்கிறேன், கம்பனின் மணக்கோலம் ஆகிய நூல்களையும் வெளியிட்டார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி 30.7.2004இல் ஓய்வு பெற்றபோது ‘‘பெரியார் அழைக்கிறார்!, என்ற படைப்பிலக்கியமும்-பாராட்டு இலக்கியமும்’’ நூல் வெளியிடப்பட்டது. எளிமையான தோற்றமும் இனிமையாக பழகும் இயல்புகொண்ட புலவர் குறளன்பன். எச்சூழலிலும் தாம்கொண்ட கொள்கையிலிருந்து எள்ளவும் மாறாதவர், தன் வாழ்நாள் முழுவதும் பெரியார் வழியில் பகுத்தறிவுவாளாராக வாழ்ந்தவர்.

**புலவர் குறளன்பன் அவர்களுக்கு புகழ்வணக்கம்.**

**- திருச்சி ந.கருணாகரன்**

## இந்திய விடுதலைப் போராட்ட வீரர், தொழிலாளர்கள் தலைவர், பத்திரிகை ஆசிரியர், பொதுவுடைமைக் கட்சித் தலைவர்

# தோழர் என்.சங்கரய்யா மறைவு!



1941இல் மதுரை அமெரிக்கன் கல்லூரி இளங்கலைப் பட்ட இறுதி யாண்டுத் தேர்வுக்கு 15 நாட்களுக்கு முன் பிப்ரவரி கடைசி நாளன்று கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். மதுரை மாணவர் சங்கச் செயலாளர் என்.சங்கரய்யா, 18 மாத சிறை வாழ்க்கைக்குப் பின் விடுதலை செய்யப்பட்ட சங்கரய்யா மாணவர் சங்கத்தின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

காந்தியாரின் 'வெள்ளையனே வெளியேறு' அறிவிப்பைத் தொடர்ந்து திருநெல்வேலியில் இருந்த மூன்று கல்லூரி மாணவர்கள் இணைந்து நடத்திய ஊர்வலத்தின் மீது காவல்துறையினர் நடத்தியத் தடியடியினால் பலத்த அடிகளுக்கு ஆளானார் சங்கரய்யா. மீண்டும் கைது செய்யப்பட்டு தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மதுரை சிறையில் அடைக் கப்பட்டவர் கண்ணூர் சிறைக்கு மாற்றப்பட்டார். சங்கரய்யா கண்ணூர் சிறையில் இருந்தபோது அங்கு பொதுவுடைமைக் கொள்கையர் நால்வர் தூக்கிலிடப்பட்டனர். விடுதலைக்குப் பின் தொழிலாளர் சங்க நடவடிக் கைகளில் ஈடுபட்டார். 1946இல் 'மதுரைச் சதிவழக்கில்' கைது செய்யப்பட்டவர்களின் முதல் குற்றவாளி பி.இராமமூர்த்தி, இரண்டாவது குற்றவாளி சங்கரய்யா.

14.08.1947இல் சிறையில் இருந்து விடுதலையான பின் பொதுவுடைமைக் கொள்கைக் குடும்பத்தைச் சேர்ந்த கிறித்தவரான நவமணி அவர்களும் சங்சரய்யாவும் இல்வாழ்க்கைத் துணை ஏற்றனர்.

1948 முதல் 1951 வரை பொதுவுடைமைக் கட்சித் தடை செய்யப்பட்டிருந்தபோது 2 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த சங்கரய்யா 1951இல் கைது செய்யப்பட்டு 6 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். மீண்டும் 1965இல் இந்திய ஆட்சியினரால் பொதுவுடைமைக் கட்சியினர் நசுக்கப்பட்டனர். அப்போது சங்கரய்யா 16 மாதங்கள் சிறையில் வைக்கப்பட்டார்.


ஆக இவரது வாழ்வில் 8 ஆண்டுகள் சிறையில். 1966இல் பொதுவுடைமைக் கட்சி ஏடான 'தீக்கதிர்' நாளேட்டின் ஆசிரியரானார்.

1940இல் மதுரையில் பொதுவுடைமைக் கட்சித் தொடங்கிய போது உறுப்பினர்களான 9 பேர்களில் ஒருவரான சங்கரய்யா 1986இல் இ.பொ.க.(மா) கட்சியின் நடுவண் குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1995 முதல் 2002 வரை கட்சியின் தமிழ்நாட்டுச் செயலாளராகச் செயல்பட்டார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதால் பட்டம் பெறமுடியாமல் போன சங்கரய்யாவுக்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'மதிப்புறு முனைவர்' பட்டம் வழுங்கத் தீர்மானித்தும் ஆளுநர் ஆர்.எஸ்.இரவி ஒப்புதலளிக்க மறுத்ததனால் அது இயலாமல் போனது.


15.07.1922இல் பிறந்து 15.11.2023இல் தனது 102ஆம் அகவையில் மறைந்த தோழர் என்.சங்கரய்யாவுக்கு புதிய சிந்தனையாளன் வீரவணக்கத்தை உரித்தாக்குகிறது. ❖

## சக்கிலியர் வரலாறு நூல் அறிமுக விழா



கவிஞர் ம. மதிவண்ணன் எழுதிய சக்கிலியர் வரலாறு நூல் அறிமுக உரையாடல் நிகழ்வு 19.11.203 ஞாயிறு மாலை 6 மணிக்கு சென்னை அண்ணாசாலை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நடைபெற்றது. கருப்பு நீலகண்டன் அறிமுக உரையாற்றினார். தோழர்கள் மு. குணசேகரன், கவிஞர் மனுஷ்ய புத்திரன், தமிழ்க் காமராசன், வாலாசா வல்லவன் ஆகியோர் நூலைத் திறனாய்வு செய்து உரையாற்றினர். கவிஞர் மதிவண்ணன் ஏற்புரையாற்றினார்.

## கடலியல் ஆய்வாளர் ஒரிசா பாலு என்கிற சி.பாலசுப்பிரமணி மறைவு



ஒரிசா பாலு எனப் பலராலும் அறியப்படும் சி.பால சுப்பிரமணி, தமிழின்-தமிழர்களின் தொன்மையை உலக அளவில் கடல்வழியில் தேடியவர். 1963இல் திருச்சி, உறையூரில் பிறந்த இவர் வரலாற்றை, புவி யியலை அடிப்படையாகக் கொண்டு நவீன தொழில் நுட்பங்களுடன் ஆய்வுகள் மேற்கொண்ட பொறியாளர் ஆவார்.

ஒருங்கிணைந்த பெருங்கடல் ஆய்வு நடத்தியவர். குமரிக்கண்ட (இலெமூரியா) கடல் ஆய்வுகளில் ஈடுபட்டவர். தமிழர்களின் கடல்சார் தொன்மை தொடர்பான ஆய்வு களைத் தொடர்ந்து செய்து வந்தவர். ஒரிசா புவனே சுவர் தமிழ்ச் சங்கத்தில் இணைந்து அங்குள்ள தமிழர் களை ஒருங்கிணைத்தவர்.

'தமிழ்நாட்டுத் தொல்லியல் ஆய்வுகள்-ஆதிச்ச நல்லூர்ச் சிறப்பும் எதிர்காலத் திட்டங்களும்' என்ற தலைப்பில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பெரியார் ஈ.வெ.இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளையும் இணைந்து தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் முன்னெடுப்பில் 2009 மார்ச்சு 4, 5, 6 ஆகிய நாள்களில் சென்னையிலும் 2010 சனவரி 22, 23, 24 ஆகிய நாள்களில் திருநெல்வேலியிலும் நடத்திய கருத்தரங்குகளில் கடலியல் ஆய்வாளர், பொறியாளர் சி.பாலசுப்பிரமணி (ஒரிசா பாலு) அவர்கள் பங்கேற்று கடலில் மூழ்கிய தமிழகப் பகுதிகள்" என்ற பொருளில் கருத்துரைகள் நிகழ்த்தினார். அவர் 06.10.2023 அன்று தம் 60ஆம் அகவையில் மறைவுற்றது பேரிழப்பாகும்.

புதிய சிந்தனையாளன் அவருக்கு புகழ்வணக்கம் செலுத்துகிறது.

## சர்வதேச சமூகமே காசா மீதனா போரை உடனடியாக தடுத்து நிறுத்து

# ஆர்ப்பாட்டம்




வாழ்வுரிமை கூட்டமைப்பின் சார்பில், பாலஸ்தீனத்தின் மீதான இசுரேலின் இன அழிப்பு போரை சர்வதேச சமூகமே உடனடியாக தடுத்து நிறுத்து என்ற முழக்கத்தோடு கூட்ட மைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் ந.வேலு தலை மையில் 18.10.2023 வாணியம்பாடி கனரா வங்கி எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, மக்கள் தமிழகம் கட்சி, இந்திய யூனியன் முசுலிம் லீக், தமிழ்நாடு முசுலீம் முன்னேற்றக் கழகம், வெல்ஃபேர் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, புரட்சிகர இளைஞர் முன்னணி, திராவிடர் விடுதலைக் கழகம், மக்கள் அதிகாரம், தமிழ்நாடு பாம்செப், இந்திய பொதுவுடைமைக் கட்சி மற்றும் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம் ஆகிய இயக்கங்களின் தோழர்கள் ஆர்ப்பாட் டத்தில் பங்கேற்று கண்டன உரையாற்றினார்கள்.

## காரை கு.அருளானந்தம் துணைவி அ.மைதிலி இயற்கையெய்தினார்



சமூகச் செயற்பாட்டாளர் காரை. கு.அருளானந்தம் துணைவி அ.மைதிலி, வயது (65) 7.11.2023 அன்று இயற்கை எய்தினார். அன்று மாலை உடல் அடக்கம் செய்யப்பட்டது. கு.அ.அருட்செல்வி என்ற மகளும், கு.அ.அறிவழகன் என்ற மகனும் உள்ளனர். அவர்கள் இருவருக்கும் பேரா. மா.நன்னன் தலைமையில் சுயமரியாதை திருமணம் நடைபெற்றது.

நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு விழா 17.11.2023 வெள்ளிக்கிழமை அன்று காஞ்சிபுரம் எம்.எம்.விடுதியில் நடைபெற்றது. புஞ்சை கோதண்டன் (எ) வில்லவன் அம்மை யாரின் படத்தை திறந்து வைத்தார். தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், க.சுந்தர் தி.மு.க., ச.ம.உ., க.செல்வம், நா.ம.உ., காஞ்சி அமுதன், சி.நடராசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நினைவேந்தல் உரையாற்றினர்.

# தமிழை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக்குக! தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என பெயர் மாற்றம் செய்திடுக! எனும் முழக்கங்களை வலியுறுத்தி தொடர்முழக்கக்கூட்டம்!

நாள்: நவம்பர் 1, 8, 17, 24, டிசம்பர் 1 ஆகிய நாட் களில் காலை - 11 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர் முழக்கக்கூட்டம்,''சென்னை உயர்நீதிமன்ற ஆவின் நுழைவு வாயிலில் நடைபெற்றது. ''இப் போராட்டம் முதலில் 2010இல் சென்னையில் வழக்கு ரைஞர் அங்கயற்கண்ணி அவர்களின் முன்னெடுப் பிலும், மதுரையில் வழக்குரைஞர் பகத்சிங் முன்னெ டுப்பிலும் தொடங்கியது.

2010 இல் பெண் வழக்குரைஞர்கள் அங்கயற் கண்ணி, பொற்கொடி, சக்திராணி, காசிநாதபாரதி, சேசுபாலன் ஆகியோர் உண்ணாப் போராட்டம் நடத்தி சிறை சென்றனர். சிறை சென்றும் உண்ணாப் போராட்டம் தொடர்ந்து 10 நாட்களுக்கு பிறகு சிறை யிலிருந்து வெளியே வந்தனர். அதன் பிறகு 2014 இல் தொடர் உண்ணாப் போராட்டம் நாள்தோறும் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

பிறகு 2015 இல் மீண்டும் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியின் நீதிமன்றத்தில் காலைத்தொடங்கி இரவு வரை முற்றுகையிட்டு வழக்கறிஞர்கள் பகவத்சிங், செந்தமிழ்ச்செல்வன், செல்வகுமார் உள்ளிட்ட இருபதிற்கும் மேற்பட்ட வழக்குரைஞர்கள் இரவு 11 மணியளவில் கைது செய்யப்பட்டு 28 நாட்களுக்கு மேல் சிறையிலிருந்து வந்தனர். இந்தச் சூழலில் தலைமை பதிவாளர் தமிழில் வழக்காடலாம் என வாய்மொழி உத்தரவு அளித்தார். அத்தோடு பல்வேறு நெருக்கடிக்கு இடையில் மீண்டும் 2023 அக்டோபர் மாதம் 13 ஆம் நாள் உயர்நீதிமன்றத்தில் தமிழ் எனும் தலைப்பில் கருத்தரங்கம் ஒழுங்கமைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக தற்போது நவம்பர் 1, 8, 17, 24, டிசம்பர் 1 ஆம் நாள் ஆகிய நாள்களில் தொடர் முழக்கக் கூட்டம் அனைத்துக்கட்சி இயக்கத் தலைவர் களை அழைத்து நடைபெற்றது, இப்போராட்டம் வழக்கு ரைஞர்களின் வாழ்வுரிமைக்கான போராட்டமல்ல, தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமை சிக்கல் என அனைவரும் உணர்ந்து அனைத்து அரசியல் இயக் கங்கள் தாங்கள் தங்கள் அமைப்புகள் மக்கள் போராட்ட மாக மாற்ற வேண்டும். ஏற்கனவே இருந்த அ.தி.மு.க அரசும் தற்போதைய தி.மு.க அரசும் தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தும் தட்டிக்கழித்த ஒன்றிய அரசு, தற்போது மேனாள் மாநிலங்களவை உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் அவர்களின் சட்ட ஆணைக் குழுவின் பரிந்துரைப்படி நாடாளுமன்ற நிலைக்குழு அறிக்கைகள் தெளிவுபடுத்தியபடி, உச்சநீதிமன்றத்தின் கருத்துக் கேட்பிற்கு அனுப்பாமல், அரசியலமைப்புச்



சட்டப் பிரிவு 348(2)இன் படி தமிழை உயர்நீதிமன்ற அலுவல் மொழியாக ஆக்கிட, தமிழ்நாட்டு அரசின் கோப்பினை, நேரடியாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இசைவு பெற்றிடவும்! மெட்ராஸ் உயர்நீதி மன்றத்தின் பெயரைத் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என மாற்றிட சிறப்புச் சட்டத்தினை இயற்றிடவும்! வேண்டுகை முன் வைக்கப்பட்டது.

8.11.2023 அன்று மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தார். ❖

# மு.மதியழகன் மறைவு



அரியலூர் மாவட்டம், கண்டராதித்தம் கிராமம், மேனாள் மக்கள் மன்றத் தலைவர், அமரர் ஆ.முத்துக்கண்ணு அவர்களின் மூத்த மகனும், தனித் தமிழன்பர் அ.எழிலன்பனின் மூத்த மாப்பிள்ளையும், மா.பெ.பொ.க. கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் தி.துரை சித்தார்த்தனின் சகலையும், தி.மு.க. கிளைக் கழக மேனாள் செயலாளரும் ஆகிய மு.மதியழகன் அவர்கள் 29.11.2023 அன்று மாலை 3.30 மணி அளவில் மறைவுற்றார். அன்னார் நல்ல தமிழ்ப் பற்றாளர்! சமூகச் சிந்தனையாளர்! அன்னாரின் மறைவு நம் தமிழ்ப்பற்றா ளர்களுக்கு பேரிழப்பாகும். மகன்களுக்கு தமிழினியன், தமிழமுதவன் எனப் பெயரிட்டு மகிழ்ந்தவர். துணைவி யாருடைய பெயர் அன்பரசி, அவர்களுக்கு நம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். புதிய சிந்தனை யாளன் ஆசிரியர் வாலாசா வல்லவன் அவருடைய துணைவியார் மற்றும் மகன்களுக்கு 03.12.2023 அன்று நேரில் சென்று ஆறுதல் கூறினார்.

## சாதிவாரிக் கணக்கெடுப்பின் தேவையும் பாஜகவின் சாதிய அணிதிரட்டலும்

(சமூகப் பொறியமைவு)

# ஆய்வரங்கம்



18.11.23 அன்று சென்னையில் சாதிவாரிக் கணக்கெடுப்பின் தேவையும் பாஜகவின் சாதி அணிதிரட்டலும் (சமூகப் பொறியமைவு) என்ற தலைப்பில் சாதி ஒழிப்பு முன்னணி ஒருங்கிணைத்த ஆய்வரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

ஆய்வரங்கத்திற்கு சாதி ஒழிப்பு முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் வ.இரமணி அவர்கள் தலைமையேற்று நடத்தினார். சாதி ஒழிப்பு முன்னணியின் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் தெய்வம்மாள் வரவேற்புரை ஆற்றினார். சாதி ஒழிப்பு முன்னணியின் தலைமைக்குழு, மாவட்டக்குழு தோழர்கள் காளிமுத்து, சிரீராம், அருண்ஷோரி, மாதவன், விஷ்வா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆய்வரங்கத்தில், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.மா) வின் பொதுச் செயலாளர் தோழர் பாலன், சமூக நீதிக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு காசிமாயன், எழுத்தாளர் சுபகுணராஜன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் வாலாசா வல்லவன், தமிழ்நாடு வண்ணார் பேரவையின் நிறுவனத் தலைவர் தோழர் மணிபாபா, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் அன்பு தனசேகரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். ஒவ்வொரு தோழர்களும் கணக்கெடுப்பின் தேவையை வலியுறுத்தி பல்வேறு தரவுகளை முன்வைத்தனர். இறுதியாக சாதி ஒழிப்பு முன்னணியின் சென்னை மாவட்டக்குழு உறுப்பினர் தோழர் இராஜ்குமார் நன்றியுரை ஆற்றினார்.

18.11.2023 இரவு 7.00 மணிக்கு மே 17 இயக்கத்தின் சென்னை, தேனாம்பேட்டை, திசை புத்தகக் கடையின் ஓராண்டு நிறைவையொட்டி அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் திருமுருகன் காந்தி தலைமையில் வாலாசா வல்லவன் கலந்து கொண்டு கருத்துரையாற்றினார்.

## நல்லாசிரியர் த.தண்டபாணி அவர்களின் வாழ்விணையர்

# ஆர்.சரோஜா அம்மையார் மறைவு




பெரியார் பெருந்தொண்டர் சுயமரியாதைச் சுடரொளி நல்லாசிரியர் த.தண்டபாணி அவர்களின் வாழ்விணையர் மானமிகு ஆர்.சரோஜா அம்மையார், இளம் வயதிலேயே பெரியார் பற்றாளராய் விளங்கினார். 1954இல் முகையூர் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கோவிந்தசாமி தலைமையில் த.தண்டபாணி அவர்களை தம் வாழ்விணையராக தம் வாழ்வில் இணைத்துக் கொண்டார்.

கைப்பிடித்த கணவரும் பெரியார் பற்றாளராய் இருக்கவே தம் வாழ்வில் பீடு நடை போட்டார். இருவரும் ஆசிரியப் பணியே அரும்பணியாய் கொண்டவர்கள் த.செல்வி, த.செல்வன், த.செல்வகுமாரி ஆகிய அந்த கறுப்பில் உதித்த செங்கதிர் 20.11.2023 அன்று காலை தம் 90ஆம் வயதில் தம் சிந்தனையை நிறுத்திக் கொண்டது. 03.12.2023 அன்று தி.க.செயலவைத் தலைவர் சு.அறிவுக்கரசு அவர்கள் மறைந்த சரோசா அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

# நவம்பர்-1 தமிழ்நாடு நாள் விழா




நவம்பர் 1 அன்று தமிழ்நாடு நாள் விழா மிகவும் சிறப்பாக அரக்கோணம் அடுத்த பாராஞ்சியில் நடைபெற்றது. சமம் கலைக்குழு, மாற்றம் கலைக் குழுத் தோழர்கள் கலைநிகழ்ச்சி நடத்தினர். தோழர் இரவி தலைமைத் தாங்கினார். தோழர் விசுவநாதன் வரவேற்புரையாற்றினார். தமிழ் நில மீட்பு போராளிகள் படங்களை செல்வா திறந்து வைத்தார். தமிழ் மொழியுரிமைப் போராளிகள் படங்களை செவ்வேள் திறந்து வைத்தார். நாட்டு விடுதலைப் போராளிகள் படங்களை க. குப்புசாமி திறந்து வைத்தார். முன்னதாக அறிவர் அம்பேத்கர் படத்திற்கு வாலாசா வல்லவன் மாலை அணிவித்தார். தோழர்கள் பொழிலன், நிலவழகன், வாலாசா வல்லவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இளஞ்சித்திரன் நன்றியுரையாற்றினார். வழக்குரைஞர் தமிழ்ச்செல்வன், ஜீவா ஆகியோர் அனைவருக்கும் இனிப்பு வழங்கினர். வாணியம்பாடி நா.மதனகவி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். தமிழக மக்கள் முன்னணியும் மக்கள் தமிழகம் கட்சியும் நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.



## ஈடில்லா அறிவின் உச்சம்

# அண்ணல் அம்பேத்கர்

பேராசிரியர் **மு.நாகநாதன்**

**உ**லக அறிஞர்களில் உயர்ந்து நிற்பவர்.

அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் செலிக்மேன் என்ற நிதியியலில் தலை சிறந்த அறிஞரின் மாண வர். செலிக்மேன் பேரன் பைப் பெற்ற இருவர்கள் அறிஞர் அம்பேத்கரும். தமிழ் நாட்டைச் சேர்ந்த காந்தியப் பொருளாதாரக் கருத்தைத் தனக்கே உரிய வகையில் முன்மொழிந்த அறிஞர் குமாரப்பாவும் ஆவார்கள். இங்கிலாந்து நாட்டின் புகழ்மிக்க பொருளியல் அறிஞர் பணவியல் பொருளாதாரத்தின் முன்னோடி பேராசிரியர் ராபர்ட் ஸ்னிடம் ஆய்வினை மேற்கொண்டவர் அறிஞர் அம்பேத்கர்.

இந்திய ரூபாயின் மதிப்பைப் பற்றி உயர் ஆய்வு மேற் கொண்டு தனது ஆசிரியர் ராபர்ட்சனுக்கு எதிராகக் கருத்துகளை முன் வைத்து முனைவர் பட்டம் பெற்றவர். எத்தகைய ஆற்றல். எத்தனை உயர்வானது ராபர்ட்சன் பெருந்தகைமை. இந்திய மைய வங்கி அமைப்பு உருவாவதற்கு அறிஞர் அம்பேத்கரின் இந்த ஆய்வின் கருத்தியலே அடித்தளமாகும். இதை இந்திய மைய வங்கி ஏற்றுக் கொண்டு அறிஞர் அம்பேத்கருக்கு நன்றியைச் சில ஆண்டுகளுக்கு முன்பு காணிக்கையாக்கித் தனது அறிவிப்பை வெளியிட்டது. இத்தகைய பொருளாதார மேதை தனது வாழ்நாளெல்லாம் களம் அமைத்துப் போராடியது சாதியத்திற்கும், சாதியத்தின் மூலமான சனாதனத்திற்கும் என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய காலக்கட்டத்தில் அம்பேத்கரின் படைப்புகளை மறு வாசிப்பு செய்வது தேவையானதாகும். பல்லாயிரம் கைகள் மறைத்தாலும் அறிஞர் அம்பேத்கரின் சிந்தனைகள் தென்திசைக் கிழித்துக் கிளம்பும் எழு ஞாயிறு போன்றது. உச்சி வெயிலில் சனாதனம் எரிந்து போய்விடும். அண்மையில் சில புத்தகங்கள் ஆங்கில மொழியில் முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைப் பற்றி வெளி வந்துள்ளன. அவற்றில் ஒன்று ‘‘புயலைக் கிளப்பிய 16 நாட்கள்’’ என்ற நூலாகும். (SIXTEEN STORMY DAYS- The Story of the First Amendment to the Constitution of India - by TRIPURDAMAN SINGH 2020).

இந்நூலின் ஆசிரியர் முதல் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தக்கூடாது என்பதில் ஆதிக்க சமூகத்தினர் காட்டிய எதிர்ப்புகள் எத்தகையது என்பதை விரிவான முறையில் விளக்கியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடந்த அனல் பறக்கும் தாக்குதல்களை ஆளும் கட்சி சந்திக்க முடியாமல் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவாக உரையாற்றச் சட்ட அமைச்சர் அம்பேத்கரைக் களம் இறக்கியது.

அரசின் நோக்கம் சட்டத்தைத் தவறாக பயன்படுத்துவதற்காக அன்று. இந்த திருத்தத்தின் வழியாக நாடாளுமன்றம் தனது அதிகாரத்தைப் பெறுவதன் நோக்கம் சில தேவையான சட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் என்பதை ஏறக்குறைய இரண்டு மணிநேர நீண்ட உரையின் வாயிலாக நாடாளுமன்றத்திற்கு உறுதி அளித்தார் அம்பேத்கர்.

(Unable to face the heat, the Government wheeled out Law Minister B.R.Ambedkar to“mount a vigorous defence.“In a nearly two- hour-long speech, Ambedkar assured the House that the Government did “not intend to misuse any of the powers it was acquiring, and the amendment was only meant“arm Parliament with the power to pass“certain legislation when necessary rather than“enact any specific laws in the immediate future.- pages 150- 151).

*- 07.12.2020 முகநூல் பதிவு*

## அ.சி.சின்னப்பா தமிழரின் இளையமகன் பூந்தமிழ் மறைவு



தமிழ்வழிக்கல்வி இயக்கத்தின் தலைவர் அ.சி.சின்னப்பத் தமிழர் தமிழம்மா இணையரின் இளையமகன் பூந்தமிழ் அவர்கள் சாலை நேர்ச்சியில் 7.10.2023 அன்று மறை வுற்றார். மறுநாள் மாலை அரும்பாக்கம் இடுகாட்டில் எரியூட்டப்பட்டது. முற்போக்கு இயக்கங்களைச் சேர்ந்த அமைப்பினர் திரளாகக் கலந்து கொண்டனர். மா.பெ.பொ.க. சார்பில் வாலாசா வல்லவன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இடுகாட்டில் இரங்கல் நிகழ்வும் நடைபெற்றது.

க.சி.பூந்தமிழ் படத்திறப்பு 29.10.2023 அன்று வி.சி.க. அலுவலக வளாகம், அம்பேத்கர் திடலில் நடைபெற்றது. வி.சி.க. தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்கள் படத்தை திறந்து வைத்து இரங்கலு ரையாற்றினார். வா.மு.சேதுராமன், பிரின்சு கஜேந்திர பாபு, புலவர் இரத்தினவேலன் சீராளன், பொழிலன், வாலாசா வல்லவன் உள்ளிட்டோர் இரங்கலுரையாற்றினர்.

## நூல் அறிமுகம்

# தமிழ்த் தேசத்தின் எதிரி யார்?

**ஆசிரியர் : பேரா. த. செயராமன்**




தமிழ்த் தேசியம் அல்லாத ஒன்று தமிழ்த் தேசியம் என்ற பெயரில் இப்போது கொண்டு வரப்படுகிறது. ஒரு மனிதனின் வாய் தமிழ்த் தேசியம் என்று பேசுவதாலேயே அம்மனிதன் தமிழ்த் தேசியவாதி ஆகிவிட முடியாது...

"தமிழினத்தின் பாரம்பரிய, வரலாற்று எதிரி ஆரியமும் ஆரியரும்தான். வரலாறு முழுவதும்தமிழினம் ஆரியத்தை எதிர்த்து வந்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஆரியம் சமூக, சமய, அரசியல் தளங்களில் தமிழினத்தை மட்டுமின்றி, ஏனைய இனங்களையும் ஒடுக்கி வந்திருக்கிறது" எனத் தொடங்குகிறது நூல்.

இந்நூலாசிரியர் த. செயராமன் அவர்கள் 'தமிழ்த் தேசிய இன அடையாளச் சிக்கல்' குறித்த ஆய்வுக்காக, 1998ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தால் முனைவர் பட்டம் வழங்கப் பெற்றவர்.

19.9.2021இல் சென்னையில் 'தமிழ்த் தேச நடுவம்' ஒருங்கிணைப்பில் "தமிழ்த் தேசத்தின் எதிரி யார்?" என்ற கருத்தரங்கத்தில் பேராசிரியர் த. செயராமன் அவர்கள் ஆற்றிய உரை நூல் வடிவம் பெற்று 2023 செப்டம்பரில் வெளிவந்துள்ளது.

வெளியீடு : **தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்**

பக்கங்கள் : 48; விலை உருவா : 50/-

நூல் பெற :

அலைபேசி : 98420 07371, 9047915111, 94433 95550

## புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி நவம்பர்-திசம்பர்-2023

| | | |
|---|---|---|
| து.செ.நிறைமொழி | காட்டுமன்னார் கோவில் | 1000/- |
| மா.முருகேசன்-அலமேலு | தீத்தாண்டப்பட்டு | 1000/- |
| எழிலரசி இராசமாணிக்கம் | செந்துறை | 1000/- |
| சு.க.முல்லை-சே.சா.வினீத் | நாராயணன், திருவள்ளூர் | 500/- |

## நூல் ஆய்வரங்கம்

மேனாள் நடுவண் அமைச்சர் ஆ. இராசா அவர்கள் எழுதிய

### "பெரியார்-அம்பேத்கர் இன்றைய பொருத்தப்பாடு"



மேனாள் நடுவண் அமைச்சர் ஆ. இராசா அவர்கள் எழுதிய "பெரியார் அம்பேத்கர் இன்றைய பொருத்தப்பாடு" நூல் ஆய்வரங்கரம் 5.11.2023 மாலை 5.30 மணிக்கு சென்னை அண்ணாசாலை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நடைபெற்றது.

தோழர்கள் புனித பாண்டியன், வாலாசா வல்லவன், தமிழ். காமராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மழவை தமிழமுதன் வரவேற்புரையாற்றினார். இரா. அசோக்குமார் கவிதை வாசித்தார்.

எஸ்.பீட்டர் அல்போன்ஸ், பேராசிரியர் சுப வீரபாண்டியன், ஆளூர் ஷாநவாஸ், சாமுவேல் ராஜ் மு.வீரபாண்டியன், செ.மெ. மதிவதனி, ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். சாரதா தேவி தொகுப்புரை வழங்கினார். அன்பழகன் நன்றியுரையாற்றினார்.

## செம்மொழி க. இராமசாமி அவர்களிடம் உடல்நலம் உசாவல்



23.11.2023 அன்று பெங்களூரில் வசித்துவரும் செம்மொழி பேராசிரியர் க. இராமசாமி அவர்களின் வீட்டிற்குச் சென்று தோழர்கள் கோ.மு. கருப்பய்யா, வாலாசா வல்லவன், பி. செந்தமிழ் செல்வன் ஆகியோர் உடல்நலம் உசாவினர். பேராசிரியர் க. இராமசாமி அவர்கள் புதிய சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்கு ரூ.2000 வழங்கினார். நன்றியுடன் விடைபெற்று வந்தோம்.


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர் மற்றும் ஆசிரியர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441